273

சக்தி

மாத வெளியீடு

2569



சித்திரபானு ஹூ
தைமீ

-/4

கதைகள்

அவன் கடிதம்
ஒளித்த பதக்கம்
துரோகியின் முகம்
படையெடுப்பு
பேசும் பானை

★

ரலா றுகள்

ம ராஷ்டி : : :
: கடல் போர்
ங்கீதவலை
அன்பர் ராய. சொ.

★

கட்டுரைகள்

மேல் காற்று
சங்குப் பாலடை
ராஜ்ய லட்சணம்

★

பாடல்கள்

எது கவிதை?
சூரியோதயம்
சொல்

★

குறிப்புக்கள்

உடம்பும் மருந்தும்
புத்தக உலகம்
கதம்பம்
காலச் சுழல்

88832



PRODUCTS LIMITED

விட்டுக்கு ஒரு கோட்டை, வாயிலுக்கு ஒரு காவலாள் என்றிருந்தால் இந்த நாளில் எவ்வளவு பெரிய பாதுகாப்பாகும். அந்தப் பாதுகாப்பை உங்களுக்கு 'அஜாக்ஸ்' பண்டங்கள் தருகின்றன. உங்கள் முன்னோர்கள் தேடிய பொருளை நன்கு பாதுகாக்க உங்கள் விட்டிலும் ஓர் 'அஜாக்ஸ்' இரும்புப் பெட்டி இருக்கட்டும்.

பீமனை யொத்த உறுதியும் காமனை யொத்த அழகும் ஒருங்கே அமைந்த 'அஜாக்ஸ்' ஸ்டீல் காபினெட்டுகள் இரும்புக் கோட்டை போன்றவை. தீயோ திருடனோ அவைகளைத் தீண்ட முடியாது.



அஜாக்ஸ் பிராடக்ட்ஸ் லிட்.

ஷோ ரூம் அண்டு ஆபீஸ் :

106, அரமனைக்காரத் தெரு,
ஜி. டி., மதராஸ்

(தொழிற்சாலை :: திருவொற்றியூர்)

பிராஞ்சு :

5, வெரைட்டி ஹால் ரோடு,
கோயமுத்தூர்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
4 FEB 1943
MADRAS

கோகிலத்தின் தீங்குரல்

ஸ்ரீமதி என்.ஸி. வஸந்தகோகிலம்

புதிய வெளியீடு

N. 18206 { ஞானகுருபர (பாகம் 1) பல்லவி
,, (பாகம் 2) இராகமாலிகை

"HIS MASTER'S VOICE"

"ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்"

M. SAMUEL

எல்லா "எச். எம். வி." கிராமபோன் வியாபாரிகளிடமும் கிடைக்கும்

வெளிவந்து விட்டது

வெ. சாமிநாத சர்மா எழுதிய

சோவியத் ருஷ்யா

ருஷிய சரித்திர வரலாறு, முடியரசின் மறைவு, குடியரசின் தோற்றம், சமதர்மம் என்றால் என்ன?, சமதர்மக் கட்சி, சோவியத் அரசியல் அமைப்பு, பொருளாதாரத் திட்டம், விவசாயம் - தொழில், பெண்ணுரிமை, கல்வி - கலை, சுகாதாரம் - ஓய்வு, அந்நிய நாட்டுக் கொள்கை, புதிய நாகரிகம் முதலியவை விளக்கமாக எழுதப் பெற்றிருக்கின்றன.

அழகிய படங்கள் — காலிகோ பைண்டு

விலை ரூ. 3—8—0 தபாற் செலவு தனி

முன்பணம் அனுப்புவோர்க்கு தபாற் செலவின்றி அனுப்பிக்கப்பெறும்

சக்தி காரியாலயம், மதுரை

வடலூர் அறிக்கை

போலி விளம்பரங்களைத் தேவஸ்தான தர்மகர்த்தர்களும், திருப்பணிக் கமிட்டியாரும் கண்டித்து ஜனங்களுக்கு ஏமாருதிருக்க எச்சரிக்கை செய்கிருர்கள். திருப்பணிக்கு அமாவாசை பரதேசியாரை விலக்கி ஸ்ரீகிருபாநந்த வாரியாரை நியமித்து, சர்க்கார் அனுமதித்த கமிட்டியின் மூலம் திருப்பணி நடந்து வருகிறது.

மணியார்டர் மூலம் பணத்தையும் ரயில்வழி இனத்தையும் அனுப்பும் அன்பர்கள் நேரே தலைவர் அவர்களுக்குத்தான் அனுப்பவேண்டும். கமிட்டியிலுள்ள ஏனையவர்க்கோ தலைவர் அதிகாரம் பெற்று வசூலிப்பவர்களுக்கோ அனுப்புதல் கூடாது. கமிட்டியின் பேரால் தலைவரது அதிகாரம் பெற்று பணம், இனம் கேட்க வரும் எவரிடமும் கொடுக்கும் வகைக்கு, உடன் தலைவர் கையெழுத்துள்ள ரசிதை வாங்கிக்கொள்ளவேண்டும். தலைவரது அதிகாரம் பெருதவர்களிடம் எதையும் கொடுக்கக்கூடாது. சாமான்களை மட்டும் நேரே வடலூர் ரயில்வே ஸ்டேஷனுக்கு அனுப்பி, ரசிதை தபாலில் தலைவர் பெயருக்கு வடலூரிலுள்ள திருப்பணி கமிட்டி நிலையத்திற்கும், மணியார்டர்களை தலைவர் பெயருக்கு கடலூர் என். டி. க்கும் அனுப்ப வேண்டுகிறேம்.

திருப்பணி கமிட்டித் தலைவர் விலாசம்
கே. சீதாராம ரெட்டியார் பி.ஏ., பி.எல்., எம்.எல்.ஏ., (டில்லி)
ஜில்லா போர்டு தலைவர்,
கடலூர் என்.டி.

இப்படிக்கு கமிட்டி செயலாளர்கள்
பு. வே. தேவராஜ முதலியார், M.D.(s)
தி. கி. நாராயணசாமி நாயுடு

கண்ணைக் கவரும் புதிய கட்டிடம்

கண்ணன் என் கவி	0 12
குழந்தை ராமு	0 8
மதுவிலக்கு மங்கை	0 12

(தபாற் செலவு தனி)

சக்தி காரியாலயம்
வடக்கு வெளி வீதி :: மதுரை

சுதேசி மாளிகை

★

சென்னைக்கு வருவோரெல்லாம், வரும்பொழுதெல்லாம், தவருமல் விஜயம் செய்யும், பெரிய ஸ்டோர் நமது சுதேசி மாளிகைதான்.

★

உயர்ந்த ரகம், குறைந்த விலை, பிற இடங்களில் கிடைக்காத நவீன மோஸ்தர்களுக்குப் பெயர் பெற்ற இடம்.

★

சுதேசி, பட்டு, நூல் ஜவுளி ரகங்கள் — சில்லறைச் சாமான்கள் முதலியவை.

★

ஜெனரல் சுதேசிஸ்,
லிமிடெட்
எஸ்பிளனேட், சென்னை

மேற்கண்ட ரிகார்டுகள் எங்களிடம் கிடைக்கும்:

S. கண்ணன் & Co.,

திருச்சினுப்பள்ளி

சித்திரபானு
மலர் 7

சக்தி

தை
இதழ் 5

அன்பும் அறிவும் அறமும் திருவும் அருளும் ஆற்றலும்
இன்ப வாழ்வும் விளங்கச் சக்தி எழுந்து பொலிகவே !

ஐம்பது உண்மைகள்!

கிளிப்பிள்ளை போல் பேசுவதில் நம்மில் பலர் தேர்ந்திருக்கிறார்கள். சுதந்திரம் பெற அயலார் உதவியை நாடக்கூடாது, ஆகையால், அயல் நாட்டுப் பிரசாரமே கூடாது என்று அவர்கள் சொல்லுவார்கள். மகாத்மா காந்தி இப்படிச் சொல்லுகிறாரே என்பார்கள். நம் சுயபலத்தை வளர்த்துக் கொள்ளுவதிலேயே முனைந்த அவருக்கு, அந்நியப் பிரசாரம் பிடிக்காது; அந்நிய உதவியும் பிடிக்காது. ஆனால், உலகம் அப்படியா நடக்கிறது?

ஒரு புறம் சுயபலம் வேண்டும்; மறுபுறம் உலக அனுதாபம் மட்டிலுமல்ல, உலக உதவியும் கூடக் கிடைத்தாலும் நலமே. அதில் தவறொன்றுமில்லை. மனித சமூகம் பூராவும் சகோதரர் போல வாழவேண்டுமென்றால், மனித சமூகம் பூராவிலும் வலுத்தவர் இளைத்தவருக்கு உதவுவது எப்படித் தவறாகும்? வலுத்தவர்களே ஒருவருக்கொருவர் உதவிக் கொள்ளவில்லையா? போரிலே, அமெரிக்க உதவியை, பிரிட்டன் நாடுவது அவமானமா? ருஷ்ய சகாயத்தால், பிரிட்டன் லாபமடைந்திருப்பதுதான் அவமானமா? சுதந்திரத்துக்கு நாம் பிறர் உதவியை நாடக்கூடாதென்று கூச்சப்பட்டுப் பயன் இல்லை. நம்மை நிரந்தர அடிமைத் தனத்தில் வைத்திருக்கக்கூட வெளிநாடுகளில் பிரசாரம் நடக்கிறதே! எதற்காக அது நடக்கவேண்டும்? அந்நியர் நேரே வந்து நமக்கு உதவி செய்யாமலிருக்கலாம். ஆனால், அந்நியரிடம் நம்மைப் பற்றி நடக்கும் பிரசாரமும் நாம் செய்யும் பிரசாரமும், நமது வருங்காலத்தைப் பாதிக்கத்தான் செய்யும். உலகத்தை இனிக் 'காற்றுப் புகாத' அறைகளாகத் தடுப்பது சாத்தியமல்ல. இந்தியாவைப் பற்றி அமெரிக்கர் தற்போது கொஞ்சம் சிரத்தை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்றவுடனே, பிரிட்டிஷ் சர்க்கார் 'ஐயையோ! குடிமுழுகிப் போய்விட்டது' என்று நினைப்பானேன்? அமெரிக்காவில் இந்தி

யாவைப்பற்றித் தீவிரப் பிரசாரங்கள் நடத்துவானேன்? சமயோசித சாமர்த்தியம் பிரிட்டனுக்கு நிறைய உண்டு. இல்லாவிட்டால், அது ஒரு பெரிய ஏகாதிபத்தியத்தைக் கட்டி ஆள முடியுமா?

இந்தியாவைப் பற்றி, இப்போது, தனுக்காக, அமெரிக்கப் பிரசாரத்துக்காக ஒரு பிரசுரம், அமெரிக்காவிலுள்ள பிரிட்டிஷ் சர்க்காரின், பிரசார காரியாலயத்தி லிருந்து வெளியாகி யிருக்கிறது. இதற்குப் பெயர் "இந்தியாவைப் பற்றிய 50-உண்மைகள்" என்பதாகும். எப்படிப்பட்ட உண்மைகள் அவை! 'ஒரு பானைச் சோற்றுக்கு ஓரவிழ் தானே பதம்' என்பது போல, ஒன்றிரண்டைப் பார்த்தாலே போதும் அல்லவா? இந்திய வைசிராயின் நிர்வாகசபையில் 11-இந்தியரும் 4-ஐரோப்பியரும் இருப்பதாகவும், அந்தச் சபையின் ஆலோசனைப்படியே வைசிராய் கட்டுப்பட்டு நடப்பதாகவும், காந்திஜியைக் கைது செய்யவும் அவருடைய இயக்கத்தை அடக்கவும் வைஸிராயின் நிர்வாக சபையே தீர்மானித்ததாகவும், நிர்வாக சபையின் அந்தக் கூட்டத்துக்கு வைஸிராயைத் தவிர வேறு ஒரே ஒரு பிரிட்டிஷ் அங்கத்தினர்தான் வந்தாரென்றும் மற்றும் வந்திருந்த 11 பேரும் இந்திய அங்கத்தினர்களே என்றும் அந்தப் பிரசுரம் கூறுகிறது. இதைப் பார்க்கும்போது, இந்தியர்களே இந்தியாவை ஆளுவதாக அமெரிக்கருக்குத் தோன்றும். ஆனால், அந்த 11-இந்தியரும் யாருக்குப் பொறுப்பானவர்கள் என்பது மட்டும் தெரிவிக்கப்படவில்லை. இந்திய மக்களின் ஆதரவு பலத்தைக் கொண்டு அவர்கள் பதவி பெற்றார்களா? வைஸிராய்ப் பிரபுவின் தயவினால் பதவி பெற்றார்களா? இது அன்றோ அமெரிக்கருக்குத் தெரியவேண்டும்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திலேயே மிகப் பெரிய இரும்புத் தொழிற்சாலை டாட்டா இரும்புத் தொழிற்சாலையே என்றும் அது முற்றிலும் இந்தியருக்கே சொந்தமானது என்றும் ஐம்பதில் ஒருண்மை கூறுகிறது. இதற்கோர் அனுபந்த உண்மையை நாம் சேர்த்தால்தான் விஷயம் விளங்கும். இப்பேர்ப்பட்ட இரும்புத் தொழிற்சாலையைப் படைத்திருந்தும், மோட்டார்க்கார், ஸைக்கிள் முதலிய பல வாகனங்களுக்கும் இரும்புத் தொழிற் பொருள்களுக்கும் இந்தியா அந்நியர் கையையே பார்த்துக் கொண்டிருக்க வேண்டிய நிலையிலிருக்கிறது. ஏன் அப்படி? இதை அந்தப் பிரசுரம் ஏன சொல்லவில்லை?

இன்னும் இப்படியே பிறவற்றைப் பற்றியும் சொல்லிக் கொண்டு போகலாம். உண்மைகளைப் பாதி பாதியாக விண்டு, ஒரு பாதியை மறைத்து மறு பாதியை மட்டும் சொன்னால், அது உண்மையாகாது. இந்த ஐம்பது உண்மைகளோ, ஐம்பதுக்கைம்பதுக்கு மேல் மறைத்த உண்மைகளாயிருக்கின்றன. இதென்ன நீதி?

★

காலச்சுழல்

பன்ஸாலி வெற்றி : திடீரென்று சர்க்காரிடம் பதிலுக்குப் பதில் செய்யப் பத்திரிகைகள் ஒரு தீர்மானம் செய்தன. 'சர்க்காரின் சமீப உத்திரவு' ஒன்றைக் கண்டிப்பதாக, அந்தத் தீர்மானம் சொல்லியது. உத்திரவு என்ன என்று மட்டில் ஜனங்களுக்குத் தெரியாது. உள்ளுக்குள்ளே என்ன நடந்தது என்று அவர்கள் ஆச்சரியப் பட்டிருக்கவேண்டும். சீமூர் விஷயத்தையோ, பன்ஸாலி அதற்காக உண்ணாவிரத மிருப்பதுபற்றியோ, எவ்விதத் தகவலையும் வெளியிடக்கூடாது என்றுதான் சர்க்கார் உத்திரவு கூறியது. உயிரை விடத்துணிந்த உத்தமனைப் பற்றிய செய்திகூட வெளியிடலாகாது என்றால், பத்திரிகைகள் சும்மா இருக்க முடியுமா? குமுறிவிட்டன. கடைசியில் சர்க்காரே அந்த உத்தமனிடம் ஒரு சமரசத்துக்கு வரவேண்டியதாயிற்று. பன்ஸாலியின் வெற்றிக்குப் பத்திரிகைகளின் தீரமான நடவடிக்கையும் ஒரு முக்கியமான காரணமாகும். சர்க்கார் இனியாவது, பத்திரிகைகளுடன் முரண்டா திருக்குமா?

கொளுத்தும் கொள்கை: மனுஸ்மிருதிமீது சுயமரியாதைக்காரர்களுக்கு ஒரு காலத்தில் பிரமாதமான ஆத்திரம் வந்தது. 'கொளுத்து, எரி' என்று ஆர்ப்பாட்டம் செய்தார்கள். மனுஸ்மிருதிக்கும் இன்றைய நம் சமூக வாழ்க்கைக்கும் எவ்வித சம்பந்தமு மில்லை. ஆகையால், யாரும் கவலைப்படக் காணோம். இப்போது அவர்கள் புதிய யோசனை செய்தார்கள். கம்ப ராமாயணம், பெரிய புராணம் முதலிய இலக்கியங்களைக் கொளுத்தப் போவதாய்ச் சொன்னார்கள். உடனே, நாலா புறத்திலிருந்தும் கண்டனம் கிளம்பியது. சுயமரியாதைக்காரர்கள் பெட்டிப் பாம்புபோல் அடங்கிவிட்டார்கள். ஏதோ கூத்திலே கோமாளி வருவது போலத்தான் இருக்கிறது இதெல்லாம்.

சோல்ஜர்களுக்கு வேசைகள் : கல்கத்தாவிலே, ஸோல்ஜர்களுக்காக வேசைகள் வந்து குடிபுகப் பல வீடுகளை ஒழித்துத் தரச் சொல்லுகிறார்களாம். இந்த முறைகேட்டைப்பற்றி, '**கல்கத்தா டய ஸீஸன் மகஸின்**' என்ற ஆங்கிலப் பத்திரிகையே பெரிதும் கண்டித்து எழுதியுள்ளது. "வேசைகளைக் கூட்டிக்கொண்டு குடித்தன வீடுகளுக்குப் போலீஸார் வருகிறார்கள். ஸோல்ஜர்களுக்காக இந்தவேசைகள் குடியிருக்க வீட்டை ஒழித்துத் தரச்சொல்லுகிறார்கள்...நம் பிரிட்டிஷ் ஸோல்ஜர்கள் தம் சொந்த நாடுகளில் தங்கும் இடங்களில் அவர்களுக்காக இப்படி வேசை நிலையங்கள் நிறுவப்படுகின்றனவா?" என்று அது கேட்கிறது. இந்தியாவில் மட்டும் இந்த மாதிரி முறைகேடுகளுக்குக் கேள்விமுறை யில்லையா?

பிரிட்டனில் ஒழிந்த குதிரைப் பந்தயம் : குதிரைப் பந்தயங்

களை, பிரிட்டனில் பிரிட்டிஷ் சர்க்கார் அடியோடு தடுத்துவிட்டார்களாம். இந்தியாவில் மட்டில் 'ஜாம், ஜாம்' என்று குதிரைப் பந்தயங்கள் மூலைக்கு மூலை நடக்கின்றன. யுத்தகால மாதலால் போக்குவரத்துச் சாதனங்களில் நெருக்கத்தைக் குறைப்பதற்காகவும் சிக்கனத்தை உத்தேசித்துமே குதிரைப் பந்தயங்கள் பிரிட்டனில் தடுக்கப்பட்டுள்ளனவாம். இந்தியாவிலே மட்டில் அந்தக் காரணங்கள் இல்லையா? இந்திய சர்க்காரும் இவ்விஷயத்தில் சிரத்தை கொண்டு ஏன் நடவடிக்கை எடுக்கலாகாது?

அமெரிக்கர் வெட்கம்: பார்லிமெண்டிலே சில மாதங்களுக்கு முன் இந்திய விவாதம் நடைபெற்ற பொழுது, "ஒழுங்கை நிலைநாட்டுவதற்காக ஹிந்து ஜனக் கூட்டங்களை விமானங்களிலிருந்து மெஷின் பீரங்கியால் சுட்டோம்" என, சர்க்கார் தரப்பில் அறிவித்தார்களாம். அப்போது, சில கன்ஸர்வேடிவ்கள், கரகோஷ ஆரவாரம் செய்தார்களாம். இந்தச் செய்தி இந்தியாவுக்கு ஏனோ எட்டவில்லை; ஆனால், அமெரிக்காவுக்கு எட்டியிருக்கிறது! 'நியூ ரிபப்ளிக்' என்ற நியூ யார்க் வாரப் பத்திரிகை, இதைப்பற்றி எழுதுவதாவது: "சுதந்திரம் வேண்டுமென்று விரும்புவதுதான் அந்த ஜனங்களின் ஒரே குற்றம். அவர்கள் விமானங்களிலிருந்து மெஷின் பீரங்கியால் சுட்டுக் கொல்லப்பட்டார்கள் என்ற செய்தி கேட்டு, பிரிட்டனிலே ஆட்சி புரியும் கோஷ்டியினரில் ஒரு சிலர் களித்து ஆரவாரித்தார்கள் என்றால், நாம் ஜனநாயகத்தைக் காப்பாற்றவே போரிடும் என்று நம்பும் எந்த அமெரிக்கனும் வெட்கமும் ஆத்திரமுமே அடைவான்." அடைந்து என்ன செய்வான் என்பதுதான் தெரிய வேண்டும்.

முதுகிழவர் மறைவு: எண்பது வயதிலே ராயவரம் ராவ் சாகிப் பழநியப்ப செட்டியார் சென்ற மாதம் காலமான செய்தி கேட்டு, அவருடைய உற்றார் உறவினர்களுக்கு நமது மனப்பூர்வமான அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். பழநியப்பர் சிறந்த குணவான். பல வருஷங்களுக்கு முன் யாரோ ஊர்பேர் தெரியாத ஒருவர், இவரிடம் சுமார் 200 அல்லது 300 ரூபாயைக் கொடுத்துவிட்டுப் போய்விட்டாராம். இதற்கு வட்டிமாத்திரம் போட்டு வைத்திருந்தார் பழநியப்பர். நாலைந்து வருஷங்களுக்குமுன், அந்த மனிதரை எப்படியோ விசாரித்துக் கண்டுபிடித்து, சுமார் ஏழாயிரம் ரூபாயை அவரிடம் கொடுத்துக் கடன் தீர்த்துவிட்டு வந்தார்! இவருடைய அறுபது வயது நிறைவு விழாவின்போது இவருடைய தாய் தந்தை இருவரும் உயிரோடிருந்து பார்த்துக் களித்தார்கள். இவர் புதுக்கோட்டைப் பிரசவ ஆஸ்பத்திரிக்கு 25,000 ரூபாய்கள் நன்கொடை யளித்தார். இத்தகைய பழநியப்பரின் ஆத்மா சாந்தி யடையப் பிரார்த்திக்கிறோம்.

★

கதம்பம்

புரட்சி என்றால் என்ன: பேர்ல்பெக் என்ற பிரபல நாவலாசிரியர் எழுதிய 'நல்ல பூமி' என்ற கதையின் ஸினிமாவிலே ஒரு காட்சி.

சீனாவிலே மஞ்சு ராஜ்யத்தை ஒழிக்க, குடியரசுச் சேனை தெற்கு நகரொன்றுக்குள் நுழைகிறது. அப்பாவியான ஒரு பெண், "புரட்சி என்றால் என்ன?" என்று கேட்கிறாள்.

மளிகைக் கடை ஒன்றைக் கொள்ளையிட விரையும் ஒரு கூட்டத்தின் நடுவே யிருந்த ஒரு மனிதன், "எனக்குத் தெரியாது. ஆனால், அது ஏதோ சோற்று விஷயந்தான்" என்கிறான்.

இன்று இந்திய நலத்தில் மனங்கொண்ட அனைவரும் கடுமையாய்ச் சிந்திக்க வேண்டிய படிப்பினை இதில் உண்டு.

* *

ஜின்னாவின் பழைய கதை: பம்பாயில் ஒரு கட்சியிலும் சேராதோர் ஒரு மகாநாடு நடத்தினார்களே, அவர்களை "அவர்கள் எல்லாரும் சிப்பாய் இல்லாத தளபதிகள்" என்று பரிகசித்தார் ஜின்னா. அதாவது, தங்களைப் பற்றிப் பிரமாதமாய் நினைத்துக் கொண்ட அகம்பாவிகள் என்று கருத்து. ஜின்னா சாகேபின் சங்கதி என்ன?

1919-ஆம் ஆண்டு பார்லிமெண்டு கூட்டுக்கமிட்டி ஒன்றின் முன்னே ஜின்னா சாட்சி சொன்னார். அப்போது லார்டு ஸின்ஹா, இவரை விசாரிக்குமுன், "மிஸ்டர் ஜின்னா, என் கேள்விகளுக்கு, 'ஆம்' அல்லது 'அல்ல' என்று மட்டில் பதில் சொல்ல வேண்டும்; உம்முடைய வாதங்கள், வியாக்கியானங்கள் எல்லாம் எனக்கு வேண்டாம். என் சகாக்களை அவமதித்தது போல நீர் என்னை அவமதிப்பதற்கு நான் சம்மதியேன். 'ஆம்' அல்லது 'அல்ல' என்று பதில் சொல்ல நீர் வாக்களித்தால்தான் விசாரிப்பேன்" என்றார்.

அப்படியே சொல்லுவதாய் இணங்கினார் ஜின்னா. ஆனால், விசாரணையின் நடுவிலே தமது தொழிலில் இறங்கிவிட்டார். லார்டு ஸின்ஹா விடவில்லை. முதலில் ஜின்னா வாக்களித்ததை ஞாபகப்படுத்தி, லகான் போட்டுவிட்டார்.

* *

படுதாப் பண்டிதர்: பெண்களுக்குத்தான் படுதா என்று நினையாதீர்கள். அலிகார் கல்லூரியிலே, ஆண் புரொபஸர்கள் படுதாப் போடுகிறார்களாம்.

பெண்கள் கல்லூரியில் கணிதம் போதிக்க, பெண் புரொபஸர் இல்லையாம். ஆண் புரொபஸர்களே படுதாவுக்குப் பின்னே ஒளிந்து கொண்டு கணிதம் போதிக்கிறார்களாம். இவர்கள் போதிக்கிறார்கள்; ஆனால், அவர்

கள் கற்றுக்கொள்ள வேண்டுமே, அதுதான் தகராரா யிருக்கிறதாம்.

*　　*

இந்தியாவிலே ஹிட்லரின் குரு: கக்ஸார் இயக்கத் தலைவரான அல்லாமா மஷ்ருக்கி, இந்தியக் கல்வி இலாக்காவில் மிகவும் பிரகாசித்த ஒரு மாஜி அதிகாரி. அவர் 1926-ஆம் ஞூ ஐரோப்பாவில் சுற்றிய போது, ஹிட்லரைச் சந்தித்தாராம். ஹிட்லரின் சிறந்த கருத்துக்களெல்லாம் அல்லாமாவிடம் கடன் வாங்கியவையே என்று பாத்தியம் கொண்டாடுகிறார்கள் கக்ஸார்கள். இருக்கலாம். ஏனெனில், ஒரு முறை அல்லாமாவுக்கும் அவருடைய சகாக்களுக்கும் ஒரு தகரார் வந்ததாம். சிலர் மத்தியஸ்தம் செய்வதற்காக, சமரச ஒப்பந்தம் ஒன்றைத் தயாரித்து, அதை அல்லாமாவிடம் நீட்டினார்களாம். அல்லாமா ஒரு பென்ஸிலை எடுத்துக்கொண்டார். ஒப்பந்தத்தின் ஒவ்வோர் எழுத்தையும் குத்திக்குத்தி ஓட்டை செய்து, ஒன்றுமே தெரியாதபடி செய்துவிட்டார்.

"ஏன்?" என்று கேட்டதற்கு, "அசத்தியத்துக்குப் பூமியிலே இருக்க உரிமை கிடையாது" என்று கர்ஜித்தாராம் அல்லாமா.

ஹிட்லரின் குருநாதராயிருக்க, இதைவிட வேறு என்ன யோக்கியதைவேண்டும் ஒரு மனிதருக்கு?

*　　*

பத்திரிகைப்போர்: சில வருஷங்களுக்கு முன்னே பாரிஸில் இரண்டு பத்திரிகைகள் இருந்தனவாம். ஒன்றுக்குத் 'தேள்' என்றும் மற்றதற்குக் 'கத்தி' என்றும் பெயர். 'தேள்', கத்தியைக் கொட்டிக் கொண்டேயிருந்தது. 'கத்தி', தேளின் கொடுக்கை அறுத்துக் கொண்டேயிருந்தது. இரண்டுக்கும் ஓயாத போர். வாரத்துக்கு வாரம் ஆயிரக்கணக்கான மக்கள் இரண்டையும் வாங்கி வாங்கிப் படித்து ரசித்தார்கள்.

இரண்டு ஆசிரியர்களையும் சமரசப்படுத்த எண்ணிய ஒரு பிரபு, இருவரையும் ஒரு விருந்துக்கு அழைத்தார்.

விருந்து சமயத்துக்கு, பிரபுவின் வீட்டுக்கு ஒருவர் வந்து சேர்ந்தார். இன்னொருவர் வரக் காணோம்.

வந்தவரைப் பிரபு, "ஐயா, தாங்கள் கத்திக்கு ஆசிரியரா? தேளுக்கு ஆசிரியரா?" என்று விசாரித்தார்.

"இரண்டுக்கும்" என்றார் அந்த ஆசிரியர்!

*　　*

மிக்காடோவின் கவி: ஜப்பானிய மன்னரான மிக்காடோ வருஷா வருஷம் தம் மக்களுக்கு ஒரு கவி எழுதுவது வழக்கம். 1938-ஆம் ஞூ அவர் எழுதிய கவியாவது:

அமைதி!
அதுவே ஆலய நந்தவனத்தின் காலை;
உலகின் நிலைமையும் அமைதியாய்
　　இருக்குமென
நம்புகிறோம்.

மிக்காடோ இந்தக் கவிதையை எழுதிய அடுத்த நாளே, ஜப்பானிய விமானங்கள் எழு சீன நகரங்கள் மீது குண்டுமாரி வீசின!

★

சங்கீதத்தின் சக்தி எவ்வளவு அபாரமானது! இந்த மகா யுத்தத்திலே அதற்கோர் உதாரணம் நிகழ்ந்திருக்கிறது. ஆனால், அது ஒரு பரிதாபக் கதை!

சங்கீத வலை

'ஹரன்'

போரிலும் காதலிலும் நாம் நம்ப முடியாத பல விசித்திரங்கள் நடைபெறுவதுண்டு. இந்த ஐரோப்பியப் போரிலே நார்வே பிடிபட்ட சம்பவம் அப்படிப் பட்ட ஒரு விசித்திரமே யாகும். மோஹனாஸ்திரம் என்று நம் புராணக்காரர்கள் கூறுவார்கள். உண்மையிலே, சங்கீதம் என்ற மோஹனாஸ்திரத்தை வீசித்தான், நார்வேயை நாஜிகள் பிடித்துவிட்டார்களாம்! 'சிக்காகோ டெய்லி நியூஸி'ல் இந்த ஆச்சரியமான விவரம் காணப்படுகிறது.

நார்வேயின் தலைநகரான ஆஸ்லோவை, நாஜிகள் முதல் சில தினங்களில் மனோவசியம் செய்து விட்டார்கள். நாஜி சோல்ஜர்கள் மிகச் சிலரே இருந்தார்கள். அவர்கள் சிறு சிறு பஜனைக் கோஷ்டிகளைப்போல் பிரிந்து கொண்டார்கள். நகரின் பலவேறு தெருக்களிலும், அமெரிக்க நாட்டியப் பாடல்களையும் ஜெர்மன் சுழல் நடன கீதங்களையும் பாடிக்கொண்டு, அக்கார்டியன் முதலிய வாத்தியங்கள் சகிதமாக, உற்சாகமாய்த் திரிந்து, ஜனங்களைப் பரவசப்படுத்தினார்கள். நாஜிகளின் சிறிய பாண்டு வாத்திய ஸோல்ஜர் கோஷ்டி யொன்று, நார்வே பார்லிமெண்டின் முன்பு நின்றுகொண்டு, நார்வேக்காரர்கள் என்றுங் கேட்டிராத அற்புத சங்கீதாம்ருதத்தைப் பொழிய ஆரம்பித்தது. 'உருட்டிவிடு பீப்பாயை' என்ற பிரபலமான மெட்டு — ஆனால், நாஜிகளை உருட்டிவிட மாத்திரம் யாரும் நினைத்ததாய்த் தோன்றவில்லை! இரவு வரையில் ஓயாமல் நாஜிகளின் பாண்டு முழங்கிக் கொண்டே யிருந்தது. ஆஸ்லோ நகர மக்கள் கூட்டங் கூட்டமாய் வந்து, அந்த மோஹனகீதத்தைக் கேட்டு அறிவிழந்து நின்றார்கள். கேவலம் 1,500 நாஜி ஸோல்ஜர்கள் மட்டிலுமே இருந்துகொண்டு, ஏப்பிரல்-மீ 9-ஆம் தேதி பூராவும் 2,50,000 ஆஸ்லோ மக்களை இவ்வாறு வசியம் செய்து எதிர்ப்பற்றவர்களாக்கிவிட்டார்கள்.

இதற்கிடையிலே, சிறு சிறு நாஜிப்படைகள், நார்வேயின் பார்லிமெண்டையும் வேறு சில சர்க்கார்க் கட்டிடங்களையும் ஆக்கிரமித்துக் கொண்டன. பார்லிமெண்டின் திறந்த ஜன்னல்களிலெல்லாம் ஜெர்மன் ஸோல்ஜர்கள் அமர்ந்து, பேருற்சாகத்துடன்

பாடிக்கொண்டேயிருந்தார்கள். கீழே ஜெட்டியில் ஏராளமான ஜனங்கள் கூடி, 'இதென்ன விநோதம்' என்பதுபோல் பார்த்தார்கள்; பாட்டைக் கேட்டு ஆனந்தமும் அடைந்தார்கள்.

இரண்டு நாளைக்குப் பிறகு தான், வெகு சாமர்த்தியமான சங்கீத வலை ஒன்றை நாஜிகள் வீசினார்கள். அன்று 20,000 நாஜி ஸோல்ஜர்கள் நார்வேயில் வந்து இறங்க ஆரம்பித்தார்கள். அவர்கள் இறங்கத் தொடங்கிய அரைமணி நேரத்துக்கெல்லாம், துறைமுகத்தில் ஓர் அதிசயக் காட்சி நடந்தது. நாஜிகளின் மூன்று சிறிய கோஷ்டி ஸோல்ஜர்கள் அணிவகுத்து நின்று கொண்டார்கள். அவர்களுக் கெதிரே அவர்களுடைய துப்பாக்கிகளும் தட்டு முட்டுச் சாமான்களும் குவிக்கப்பட்டிருந்தன. நாஜி ஸோல்ஜர்கள் ஒருவர் புஜத்தில் ஒருவர் சங்கிலிபோல் கைகோத்துக் கொண்டார்கள். சாய்ந்து சாய்ந்து அப்படியும் இப்படியும் ஆடிக்கொண்டே, "பட்டணத்தைப் பார்க்க நாங்கள் செல்லுகின்றோமே!" என்ற ஒரு ஜெர்மன் பாட்டை, கோஷ்டியாக, துளியும் இசை பிறழாமல் மிக நேர்த்தியாய்ப் பாடலானார்கள். கரையிலிருந்து இவர்கள் இப்படிப் பாடுகையில், படகிலே வந்துகொண் டிருந்த நாஜிகள் இதற்கு எதிரொலி கொடுத்துக் கொண்டே பாடி வந்தார்கள். நாஜி ஸோல்ஜர்கள் நாடு பிடிக்க வந்ததுபோலவே தோன்றவில்லை; எல்லாம் ஏதோ ஒரு தமாஷா மாதிரிதான் தோன்றியது. தங்கள் தலைநகரம் அயலான் கைவசப் பட்டுக்கொண்டு வருகிறது என்று, ஆஸ்லோவாசிகள் உணரவேயில்லை.

மணிக்கணக்காய் நாஜி ஸோல்ஜர்கள் வந்திறங்கிக் கொண்டிருந்தார்கள்; மணிக்கணக்காய் இந்தச் சங்கீத சோனமாரியும் பொழிந்துகொண்டே யிருந்தது. தங்கள் சேனையோ நாஜிகளை எதிர்த்துத் தற்காக்கக் காணோம்; மேலே வட்டமிடும் நாஜி விமானங்களோ ஒரே ஒரு குண்டைக் கூடப் போடக் காணோம் — இதனால், ஆஸ்லோ மக்களுக்கு ஒன்றுமே புரியாமல், மகுடியால் கட்டப்பட்ட சர்ப்பம் போல் திகைத்து மயங்கி வியப்புடன் நின்றார்கள். இதோ ஏராளமான நாஜி ஸோல்ஜர்கள் வந்து விட்டார்கள்; இதோ ஏராளமான பீரங்கிகள் தோன்றிவிட்டன — இப்போதுதான் தங்கள் நிலைமையை ஆஸ்லோ மக்கள் உணர்ந்தார்கள். ஆயினும், காலப் பிற்பாடாகி விட்டது; இனிப் பயனில்லை.

12-ஆம் தேதி இன்னும் 20 கப்பல்களுக்குமேல் ஜெர்மன் படைகள் வந்து விட்டன. இனி ஆஸ்லோவுக்குள் எந்த எதிர்ப்பும் பலிக்காது. இனி எதற்கு அந்தச் சங்கீத வலை? நாஜிகளின் சங்கீதம் ஓய்ந்து விட்டது. இவ்வாறாக, 'உருட்டி விடு பீப்பாயை' என்ற பாட்டு நார்வேயின் சுதந்திரத்துக்குச் சாவோலையாய் முடிந்தது.

★

மாசு மருவு இல்லாமல்!

சோபனா ஸமரத்

சருமத்தை எளிதில் சுத்தமாகவும் மிருதுவாகவும் செய்யலாம் என்று சொல்லுகிறார்.

"என் சருமத்தைப் பாதுகாக்க நான் தினமும் செய்வது வேறு ஒன்றுமில்லை. சருமத்தை அழகாய் வைத்துக் கொள்ள லக்ஸ் டாய்லெட் சோப்பை உபயோகிக்கிறேன். நீங்களும் இந்த முறையை செய்து பாருங்கள். சருமத்தை அதிக மேன்மையாகச் செய்கிறது" என்று அழகிய சோபனா சொல்லுகிறார்.

லக்ஸ் டாய்லெட் சோப்

LTS. 57-50.35 TM LEVER BROTHERS (INDIA) LTD. SHAKTI—1-2-43

Phone : No. 218-A

அழகுக்கு
அழகு செய்வது ?
ஆபரணங்களே !

உங்களுக்குத் தேவையான

வைர
தங்க
வெள்ளி
நகைகள்

வெள்ளிப் பாத்திரங்கள்
நவீன மாதிரியில் ஏராள
மாக ஸ்டாக் இருக்கின்றன

நேரிலும், தபால் மூலமும் ஆர்டர்
மீது விருப்பம்போல் செய்து
தரப்படும்



P.A. ராஜு செட்டியார் & பிரதர்

கோயம்பத்தூர்

தந்தி : ராஜா.

குமரி மலர்

பொது ஆசிரியர் :
ஏ. கே. செட்டியார்

★

தமிழ்நாட்டு எழுத்தாளர்களின் கதை, கவிதை, கட்டுரை, இலக்கியம் முதலியவைகளுடன் மார்ச் மாதத்திலிருந்து மாதம் ஒரு புத்தகமாக வெளிவரும்.

புத்தகம் ஒன்றுக்கு ரூ. 1
தபாற் செலவு வேறு

★

ஆறு புத்தகங்களுக்கு முன் பணம் அனுப்புகிறவர்களுக்குத் தபாற் செலவின்றிப் புத்தகங்கள் அனுப்பிக்கப்பெறும்.

★

ஏ. கே. செட்டியார்
ஆசிரியர் : 'குமரி மலர்'

கதீட்ரல் ரோடு
கதீட்ரல் போஸ்ட்
சென்னை

அன்றுவேலையைநன்றுதுவக்குங்கள்

நரஸூஸ்

டீ அல்லது காபி அருந்தி

அன்று வேலைகளை நன்று செய்ய, காலையிலெழுந்தவுடன் அரை குறை தூக்கத்தையும், சோம்பலையும் துரத்தி, உற்சாகத்தையும் ஊக்கத்தையு மளிக்கவல்லது ஒரு கப் காபி அல்லது டீதான். வாங்கும்போது நரஸூஸ் காபி, டீயை வாங்கத்தவருதீர்கள். அவைகள் எப்பொழுதும் உயர்ந்தவை.

மற்ற விபரங்களுக்கும், மெயில் ஆர்டர்களுக்கும்
கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும் :—

நரஸூஸ் மான்யுபாக்சரிங் கம்பெனி

ஹெட் ஆபீஸ் :—சேலம்

MNK 9 TM

கன்னிக் கிழவி காதல் கொண்டாள். காலம் பல காத்திருந்தாள். நம்பிக்கைக் களஞ்சியமான அந்தக் கடிதம் இறுதியிலே, இறுதியிலே........

அவள் கடிதம்

'நாரா'

மருதாயியை நான் முதன் முதலாகப் பார்த்தபோது, அவளுக்கு வயது நாற்பதுக்கு மேலிருக்கும்; பார்க்கச் சகிக்காத கோர உருவம். திறமையற்ற சிற்பி ஒருவன், கூர்மழுங்கிய கத்தியைக் கொண்டு, கடினமான மரத்திலே செதுக்கி எடுத்தமாதிரி இருந்தது அவளது கரடுமுரடான முகம். சப்பை மூக்கு, ஒட்டிய தாடை, சப்பளிந்துபோன முகவாய்க் கட்டை, அகன்ற வாய். அவளுடைய கண்கள் மட்டும் நல்ல கறுப்பாய், ஒருவிதக் கவர்ச்சியோடிருந்தன. கறுத்தடர்ந்திருந்த இமை மயிர் வரிசையின் கீழே இருந்த இந்தக் கண்களிலே, நிரந்தரமான ஓர் ஏக்கப் பார்வையும், எதையோ அடையாததால் அதன்மேல் கொண்டிருந்த தீராத விடாயும் மட்டும் இல்லாதிருந்தால், இந்தக் கண்கள் நிரம்ப அழகானவை என்றே சொல்லலாம்.

எது எப்படியிருந்தாலும் இன்னும் மணமாகாதது அதிசயந்தான். மருதாயியின் பெற்றோர் அவளுக்கு விவரந் தெரியு முன்பே காலமாகி விட்டார்கள். சாதாரணக் குடியானவப் பெண்தான்: ஆனால், சொத்துக்காரி.. இரண்டு ஏக்கரா நன்செய் நிலம், எட்டுப் பசு, நாலு காளை மாடு, கோழி, குஞ்சு எல்லாம் இருந்தும், மதுரை ஜில்லாவிலே ஒரு பெண், கல்யாணமாகாமல் இப்படி வாழ்நாளை வீணாக்கிக் கொள்வது என்றால் அதிசயமில்லையா? இங்கே எல்லாம் கல்யாணமென்றால், ஒரு பண்ணைக்கும் இன்னொரு பண்ணைக்கும் சம அந்தஸ்துப் பார்த்துச்செய்துகொள்ளுகிற பண்ணை ஒப்பந்தந்தானே? பெண்ணை யார் கேட்டது? பிள்ளையை யார்

............நான் புளுகினேன்

கேட்டது? மருதாயிக்கு என்னவோ, கல்யாணத்தில் பிரியமில்லை. ஊரிலுள்ள பாட்டிமார்கள், இருபது வருஷத்துக்கு முந்தி நடந்த ஏதோ ஒரு காதல் கதையைப்பற்றி மறைவாய்ப் பேசிக் கொண்டார்கள்: யாரோ ஒரு பட்டணத்தானும். பார்வைக்கு வாட்ட சாட்டமா யிருப்பானும். காரியத்தில் கவைக் குதவாதவனும்.

நெல் அறுவடைக் காலத்திலே, பிற ஜில்லாக்களி லிருந்து பல ஆட்கள் இங்கே வேலை தேடி வருவதுண்டு. இவனும் அப்படி வந்தவர்களிலே ஒருவனும்.

"பாவம், இவளை அவன் என்ன பாடு படுத்தி விட்டான், தெரியுமா? அவன் ஆடு என்றால் இவள் ஆடுவாள்; பாடு என்றால் பாடுவாள். அப்படி இவளை மயக்கி விட்டான் அந்தப் படு பாவி. அறுவடை முடிந்ததும், இவர்க ளிருவரும் கலியாணம் பண்ணிக் கொள்ளப் போகிறதாகக்கூட ஊரிலே பேச்சுக் கிளம்பியது.—பொன்னப்பன் இதற்கு மசிவதாய்த் தெரியவில்லை. 'ஒரு சமயம் பட்டணத்துக்குப் போய் வந்த பிறகுதான் மற்றக் காரியங்களைக் கவனிக்க முடியும்' என்று ஒரே போடாய்ப் போட்டு விட்டான். பட்டணத்திலே அவனுக்குப் பணக்கார உறவினர் இருக்கிறார்களாம். தனக்கு நல்ல இடத்திலே பெண் கிடைக்கிற சேதி கேட்டால், அவர்கள் நிறையப் பணம் தருவார்களாம். அப்புறம், அவனும் மருதாயியும் பக்கத்து வயல்கள் இரண்டையும், வாழைத் தோப்பையும் விலைக்கு வாங்கிக் கொண்டு என்றென்றைக்கும் சௌக்கியமாய் வாழலாம் என்று ஏதேதோ இனிப்பாய்ச் சொன்னான். மருதாயிக்கு இதிலே எல்லாம் ஆசை இல்லை. ஆனாலும், அவனுக்கு எதிராகப் பேசமுடியவில்லை" என்று ஒரு பல்லில்லாக் கிழவி நையாண்டி பண்ணிக் கொண்டே சொன்னாள்.

வற்றி வறண்டு போன இந்த முதியவள், தன் வாயில் குதப்பிக் கொண்டிருந்த புகையிலைக் காம்பைச் 'சொதுக்' கென்று உமிழ்ந்து தள்ளிவிட்டு, தன் பேச்சை ஒருவித வெறியோடு, மேலும் தொடர்ந்தாள். தன் கதை மூட்டையை அவிழ்க்க நான் ஒருவன் கிடைத்ததால், கிழவிக்கு நிரம்ப மகிழ்ச்சி.

"பொன்னப்பன் தனக்குக் கண்டிப்பாய்ப் பணம் வேண்டும் என்று கேட்டு விட்டான். கையிலே காசில்லாத வெறும் பஞ்சை மாதிரி வாழ, அவன் ஒப்பவில்லை. மருதாயி என்ன செய்வாள், பாவம்! ஓர் ஏக்கரா நிலத்தையும், நகை நட்டுக்களையும் விற்று, ரொக்கத்தைப் பொன்னப்பனிடம் கொடுத்து விட்டாள். அவனும் தாராளமாய்க் கையை நீட்டி வாங்கிக் கொண்டான். சில கூட்டாளிகளைத் தன்னுடன் சேர்த்துக் கொண்டு, அந்தச் சுற்றுப் புறத்திலிருந்த கள்ளுக் கடைகளில் எல்லாம் பிரபலமாகி விட்டான். நாவில் நரம்பில்லாமல் மருதாயியின் அவலட்சணத்தை வாய்க்கு வந்தபடி கண்டவர்களிட மெல்லாம் கேலி செய்தான்.

பேதை மருதாயியோ இவனைத் தெய்வம் போலக் கொண்டாடி வந்தாள். அறுவடை முடிந்ததும், கோடைக்காலம் முழுமையும் இவன் மருதாயியின் கூடவே இருந்து வந்தான். எந்தக் குறையும் இல்லாமல் பெரிய சீமான் போலத் 'தாட் பூட்' என்று திரிவான். மாரிக்காலம் வந்ததும், இவன் போய் விட்டான். அப்புறம் இந்தப் பக்கம் தலை காட்டவே யில்லை. அன்று முதல், மருதாயி யாரிடமும் சரளமாய்ப் பேசுவதில்லை. எஞ்சிய தன் நிலத்தைச் சாகுபடி செய்வதில் ஈடுபட் டிருக்கிறாள்; பொன்னப்பன் திரும்பி வருவான், திரும்பி வருவான் என்று ஒவ்வொரு கணமும் எதிர்பார்த்துக் கொண்டே இருக்கிறாள். இவளைப்போல முழு மூடம் எங்கேயாவது உண்டா?"

மருதாயிக்கு என்னைக் கண்டதும், என்ன தோன்றிற்றோ தெரியவில்லை. தன் மனத்தை வாதித்துக் கொண்டிருந்த சுமையை முன்பின் அறியாத என்னிடம் சொல்லிவிட வேண்டும் போலத் தோன்றி யிருக்க வேண்டும். சரியான காரணம் எதுவா யிருந்தாலும், அவளது வீட்டுப் பக்கமாய் ஒரு நாள் நான் போய்க் கொண்டிருந்தபோது, சட்டெனஎன் எதிரில் வந்து நின்று கொண்டு, "ஐயா, இப்படிக் கொஞ்சம் வந்துவிட்டுப் போங்கள். ஒரு குவளை பசும் பால் சாப்பிட்டுவிட்டுப் போகலாம்" என்றாள்.

அவளுடைய அகன்ற கருவிழிகள் என்னைத் துருவி ஆராய்ந்தன. சற்றுத் தயங்கின மாதிரி பேசாதிருந்தாள். பிறகு, நெடுமூச் செறிந்து கொண்டு, நான் எவ்விதப் பதிலும் சொல்லுவதற்கு முன்பாக,—

"என்னைப்பற்றி ஊரார் பலவாறுகப் பேசிக் கொள்வது தங்கள் காதிலும் விழுந்துதா னிருக்கும். ஆனால், கிராமத்திலே இவர்கள் சொல்லுகிற எல்லாவற்றையும் அப்படியே நீங்கள் நம்பிவிடக் கூடாது. அவர் என்னைக் கைவிட்டுவிட வில்லை. கட்டாயம் திரும்பி வருவார்" என்று அவள் சொன்னபோது, அவளது குரலில் ஒருவகைத் தழுதழுப்பும் அசைக்க முடியாத நம்பிக்கையும் இருந்ததை, நான் உணர்ந்தேன்.

இருவரும் வீட்டுக் குள்ளே சென்றோம். என்னை உட்கார்ந்து கொள்ளும்படி சமிக்ஞை செய்துவிட்டு, மூப்புத் தட்டிய தொய்வு நடையில் நடந்து சென்று, எதிரே மூலையில் இருந்த பல வர்ணம் தீட்டிய, பகட்டான பெரிய பெட்டி ஒன்றின் முன் நின்றாள். அப்புறம், குனிந்து அதைத் திறந்து, அதற்குள்ளேயிருந்து, பழுப்பேறிப் போன ஒரு கடிதத்தை வெளியில் எடுத்தாள். பல வருஷங்களுக்கு முன் எழுதிய கடிதம் அது; பட்டணத்திலிருந்து வந்தது.

"இதை அவர் எனக்கு எழுதினார். ஒவ்வொரு சொல்லும் அன்பிலே தோய்த்து எடுத்தது. இந்தக் கடிதத்தில் தன் நெஞ்சைப் பிழிந்து கொட்டி யிருப்பார் என் நேசர்" என்று அவள் சொன்ன போது, அவளுடைய காடுமுர

டான கைகள் அந்த மஞ்சள் நிறக் கடிதத்தை, விவரிக்க ஒண்ணாத வாஞ்சையோடு தடவிக் கொடுத்தன.

ஒரு முறை துருதுரு வென்று என்னை அவள் பார்த்தாள். அப்புறம், ஏதோ தீர்மானத்துக்கு வந்து விட்டவள்போல—

"ஆம்—இது ஆசையான கடிதந்தான். எனக்குத் தெரியும். இருந்தாலும், இதில் அவர் என்ன தான் எழுதி யிருக்கிறார் என்பதை வார்த்தைக்கு வார்த்தை தெரிந்து கொள்ள எனக்கு ஆசையாயிருக்கிறது. ஒவ்வொரு வாஞ்சை மொழியையும், ஒவ்வோர் ஆசைச் சொற்றொடரையும் தெரிந்துகொள்ள எனக்கு விருப்பமா யிருக்கிறது. எப்பொழுது திரும்பி வந்து என் பண்ணைக்கு எஜமானராகப் போகிறார் என்பதையும் சொல்லி யிருப்பார் அல்லவா?" என்று கவலை படிந்த தீனக் குரலில் மொழிந்தாள்.

என் முகம் உணர்ச்சிக் குறி காட்டாமல் மொட்டையாய் இருந்ததை அவள் கவனித்திருக்க வேண்டும் — ஏனென்றால், சட்டென்று,

"எனக்குப் படிக்கத் தெரியாது. பள்ளிக்கூடம் போனதே யில்லை. இந்தக் கடிதத்தைக் காட்ட வேறே நம்பிக்கையான ஒருவரையும் காணோம். கிராமத்துப் பெண்டுகள் எல்லாரும் என்னை வெறுக்கிறவர்கள். கிராமத்திலேயே பேரழகனா யிருந்த அந்த வாலிபன் என்னை நேசித்தது தான்காரணம். ஆண்பிள்ளைகளும் என்னை வெறுக்கிறார்கள். இவர்களில் எவரையும் நான் கட்டிக் கொள்ள மாட்டேனென்று மறுத்து விட்டேன். இவர்கள் விரும்புவது என்னையல்ல, என் சொத்து சுகத்தையே. இது எனக்கு நன்றாய்த் தெரியும். இதனாலே, இந்தக் கடிதத்தை நான் யாரிடமும் கொடுத்துப் படித்துச் சொல்லச் சொல்லாமலே வைத்திருந்து விட்டேன். ஆனால், இதை அடிக்கடி பெட்டியிலிருந்து வெளியே எடுத்து, இதில் எழுதி யிருப்பது இன்னதாய்த்தான் இருக்குமென்று கற்பனை செய்து பார்த்துக் கொண்டேன். இப்பொழுது, நீங்கள் படித்துச் சொன்னால், எனக்கு எவ்வளவோ சந்தோஷமா யிருக்கும்" என்றாள்.

கடிதத்தை வாங்கிப் பார்த்தேன். படிப்பாளியின் எழுத்தல்ல; புரிந்து கொள்ளக்கூட முடியாதபடி கோணல் மாணல்கள். மருதாயிக்குப் படித்துக் காட்டுமுன்பு, நானே ஒரு முறை படித்துப் பார்க்க விரும்பினேன். என் எதிரே பொம்மை மாதிரி அசையாமல் உட்கார்ந்திருந்தாள் மருதாயி. அவளது முகத்தில், உணர்ச்சி குமுறிக்கொண்டிருந்தது. ஏங்கிய அவளுடைய கண்கள் 'பசி'யோடு என்னைக் கவனித்துக் கொண்டே இருந்தன.

கடிதத்தை ஒரு முறை படித்தேன்; இரு முறை படித்தேன்; மூன்றாம் முறையும் படித்தேன். என் முள்ளந் தண்டில் பனிக் கட்டி விழுந்தது போன்ற ஒரு நடுக்க உணர்ச்சி எனக்கு உண்

டாயிற்று; மயக்கத்தால் தலை கிறு கிறுத்தது. இந்தக் கடிதத்தை எழுதும்போது, அந்தப் பயல் கள்ளின் போதையில் தன் நினைவழிந்திருக்க வேண்டும். அதனாலேயே இவ்வளவு கொடுமையாகவும், கோரமாகவும் எழுதியிருக்கிறான். இப்படியும் ஒருவன் எழுத முடியுமா என்பதை நினைத்து, நான் திகைப்படைந்து போனேன். தனது கள்ளக் காதலில் மதிமயங்கிய முட்டாள் பெண்ணின் அழகில்லாத உருவத்தைப்பற்றி, மனம்போனபடி யெல்லாம் ஒரேயடியாய் ரகளை பண்ணி யிருந்தான். ஆபாசமான சில்லறை விஷயங்களை யெல்லாம் பரம திருப்தியோடு அளந்திருந்தான். தனக்குப் பிடிக்காத ஓர் உறுப்பைக்கூடத் தாக்காமல் விட்டுவிடவில்லை. அடர்ந்து திமிறி நின்ற புருவங்களை, "பன்றி வால்" என்றான். "ஒந்தி உருவம்", "ஆந்தை விழிகள்", "குரங்கு மூஞ்சி ......" இப்படி யெல்லாம் திட்டியான பிறகு, தன் பக்கத்தில் அமர்ந்திருந்த யாரோ ஒரு பட்டணத்து நாகரிகப் பெண்ணின் பேரெழிலைப் பற்றிப் படம் பிடித்தமாதிரி உல்லாசமாக விவரிக்கத் தொடங்கி விட்டான்.

"மயில்", "குயில்", "தங்கத்திலே கடைந் தெடுத்த தேவ கன்னி" என்றெல்லாம் கூறி விட்டு, அவளது மேனி பட்டுப் போல மிருதுவா யிருக்கிறதென்றும், ரோஜாப் பூவைப் போல மணக்கிறது என்றும் விரித்தெழுதி யிருந்தான். தனக்குப் பணம் தந்த கிழட்டுப் பிணம் தன்னைக் கல்யாணம் செய்து கொள்ளக் கனவு கண்டுகொண் டிருப்பதைப் பற்றித் தன் பட்டணத்துக் காதலியிடம் சொன்னபோது, அவள் விழுந்து விழுந்து சிரித்தாளென்று மருதாயிக்கு அவன் எழுதி யிருந்தான். நகரத்திலே பெண்கள் எல்லாருமே கண் கவர் வனப்புடையவர்களாம்.

"என்ன சொல்லுகிறார்? என் படிக்காமல் சும்மா இருக்கிறீர்? எதற்காகக் காத்திருக்கிறீர்?" என்று அவள் கேட்ட போது, அவளது கரகரப்புத் தொண்டை, உணர்ச்சிக் கொந்தளிப்பால் அடைத்துக் கொண்டு விட்டது.

நான் புளுகினேன். வேறு என்ன செய்வது? என் கை நடுங்கியது; குரல் கம்மியது. 'பொன்னப்பன் எப்பொழுதும் அவள் நினைவாகவே இருக்கிறான். மருதாயியின் அன்பை அவனால் மறக்கவே முடியவில்லை. இருவரும் அநுபவித்த இன்ப வாழ்வு அவன் கண் முன் சதா நிழலாடிக் கொண்டே இருக்கிறது. கட்டாயம் ஒரு நாள் திரும்பி வருவான். அப்புறம், தன் அருமைக் காதலியைவிட்டு ஓர் அடிகூட அப்பாலே போகமாட்டான்'— இப்படியெல்லாம் சொன்னேன்.

பொய் சொல்லுவது முதலிலே எளிதாயில்லை. அருவருப்பும் பச்சாதாபமும் என்னை அலட்டி வாட்டின. பேசத் தொடங்கிய உடனேயே, உணர்ச்சியோடு, காடுமேடு தெரியாமல், என் கற்பனைத் திறமையை யெல்லாம் பிரயோகித்து, நான் படித்திருந்த புகழ் பெற்ற காதற் கடிதங்களில் வரும் சரக்குகளை யெல்லாம் சர

மார்யாகப் பொழிந்து விட்டேன்.

கடைசியில், கடிதத்தை ஜமக்காளத்தின் மேலே போட்டேன். மருதாயி, கையை நீட்டி அதனை எடுத்துக் கொண்டாள். திடீரென உயிர் பெற்ற மரப் பொம்மை மாதிரி அவள் உயிர்த் துடிப்பின் சோபை பெற்ருள். அதோடு, மனமகிழ்ச்சியால் மட்டுமே கிடைக்கக்கூடிய தனிப் பொலிவானது அவளுடைய அலட்சியத்தைப் போக்கி அழகினை அவளிடம் அணிபெறச் செய்து விட்டது.

"இதெல்லாமா எழுதி யிருக்கிருர்? இவ்வளவுமா? இத்தனை தேன் மொழிகளா? எவ்வளவு அன்பு? அம்மாடி......" என்று அவள் மூச்சுத் திணறி முணுமுணுத்தாள்.

ஒரு நீண்ட மூச்சு இழுத்து, மெல்ல அதை வெளியே விட்டாள்.

"இதைப் படித்துப் பார்க்கும் பாக்கியம்தான் எனக்கில்லாமற் போய்விட்டது. நான் ஏன் படிக்கக் கற்றுக்கொள்ளாமல் இருந்து விட்டேன்? என்னை நினைத்து ஏங்குவதாகச் செல்லும் இடத்தைக் காட்டுங்கள். நான் எதிர் பாராதபோது இங்கே வந்து விடப் போவதாய்ச் செல்லும் இடத்தையும் காட்டுங்கள்."

இங்கேயும், அங்கேயும் சில வரிகளைக் காட்டினேன். மருதாயி தலையை அசைத்துக்கொண்டாள். "இது எனக்கு முந்தியே தெரிந்திருந்தால், எனது கொடிய தனிமை என்னை இப்படி வாட்டியிராதே. தினசரி இந்த அபூர்வக் கடிதத்தை மட்டும் என்னல் படித்துப் பார்க்க முடிந்திருக்குமானல் ....என் வயதில் படிக்கத் தெரிந்து கொள்ள முடியுமா?" என்று அவள் கேட்டது, மிட்டாய் கேட்ட குழந்தையைப்போலிருந்தது. அவ்வளவு களங்கமற்ற ஆசை.

நான் நடுங்கிப் போனேன். "படிப்பு நிரம்பக் கடினம். நீ ஏன் படிக்க வேண்டும்? என்ன எழுதி யிருக்கிற தென்பதுதான் தெரிந்து விட்டதே."

"நீர் சொல்லுவது சரிதான். இருந்தாலும், இதைப் படித்து ஒவ்வொரு சொல்லையும் சுவைக்க வேணுமென்ற ஆசை என்னைக் கப்பிக்கொண்டு விட்டது. ஏதாவது சாப்பாட்டில் ஆசை பிறந்து விடுகிறது, பாருங்கள்; அந்த மாதிரி.........உள்ளூர்ப் பள்ளிக்கூட ஆசிரியரைப் பார்த்து......"

மேற்கொண்டு அவள் பேசவில்லை. கற்பனை உலகில் இருக்கிருள். கண்களில் இன்ப ஒளி மினுமினுக்குகிறது. குற்றமிழைத்து விட்டவன்மாதிரி நான் மெல்ல அங்கிருந்து நழுவிப் போய் விட்டதை, அவள் கவனிக்க வில்லை.

அன்று முதல் நான் அவள் வீட்டுப் பக்கமே தலை காட்டுவதில்லை. மறுபடியும் அந்தக் கடிதத்தைப் படிக்கச் சொல்ல, நான் முன் சொன்னதற்கு மாருக மறதியால் வேறே ஏதேனும் உளற, அவள் சமுசயப்பட்டு விடுவாளே என்று எனக்குப் பேரச்சம்.

கோள் மூட்டும் கிழவி ஒருத்தியின் மூலம் மருதாயி உள்ளூர் ஆசிரியரிடம் பாடங் கற்று வருவதாகத் தெரிந்து கொண்டேன்.

"பள்ளிக்கூடம் போகிற வயதைப் பாருங்கள்! படித்துப் பட்டம் வாங்க நினைக்கிறளோ? சின்னப் பிள்ளைகள் மாதிரி, அரிச்சுவடிப் புத்தகம், கற்பலகை எல்லாம் வாங்கி வைத்திருக்கிறள். வீட்டிலே, திண்ணையில் உட்கார்ந்துகொண்டு, அ—ப்—பா, அப்பா. அ—ம்—மா, அ ம் ம ா 'என்று பாடம் படிக்கிறள். நினைக்க, நினைக்கச் சிரிப்புச் சிரிப்பாய் வருகிறது" என்று கிராமத்துப் பெண்கள் கைகொட்டிச் சிரித்தார்கள். இவர்களின் சிரிப்பு மிகவும் கொடூரமானது. எனக்கோ அழுகையும், பச்சாதாபமும், அச்சமும் ஒருமிக்க வந்து, என் மனதை வாட்டின.

ஒரு நாள் மாலையில் உலாவப் போனபோது, வழிமாறி விட்டேன். மருதாயியின் வயலில் போய் விட்டேன். மதுரை வைகையாற்றின் குளிர் மணம் காற்றில் செறிந்திருந்தது. ஓசைப் படாமல் பதுங்கிச் சென்றேன். திடீரென்று எனக்குப் பழக்கமான ஒரு குரல் கேட்கவே, நின்று விட்டேன். மந்திரம் ஜபிப்பது போல அது,

"வீடு—பண்ணை — நாய்—பசு ......" என்று உருப்போட்டுக் கொண்டிருந்தது.

இந்தச் சொற்கள் எளியவை— பழக்கமானவை — அன்புத் தொடர்புள்ளவை. என்றாலும்,

பிரஞ்சுக்காரர் மனோபாவம்

பிரான்ஸின் பிரபல நடிகரான ஜீன் காபின் என்பவர் சென்ற வருஷம் நியூயார்க் நகருக்குப் போய்ச் சேர்ந்தார். அப்போது சில நிருபர்கள், "பிரஞ்சுக்காரரின் மனோபாவம் எப்படி இருக்கிறது?" என்று அவரைக் கேட்டார்கள்.

நடிகர் சொன்னர்: "பிரிட்டிஷாரை வெறுப்போரும் பிரான்ஸில் இருக்கிறர்கள்; விரும்புவோரும் இருக்கிறர்கள். விரும்புவோர் ஒவ்வோர் இரவும் 'ஆண்டவனே! இந்த வீர பிரிட்டிஷ்காரர் சீக்கிரம் வெல்ல அருள் புரி' என்று பிரார்த்திக்கிறர்கள். வெறுப்பவர்களோ ஒவ்வோர் இரவும் 'ஆண்டவனே! இந்தச் சனியன் பிடித்த பிரிட்டிஷ்காரர்கள் சீக்கிரம் வென்று தொலையச் செய்யேன்' என்று பிரார்த்திக்கிறர்கள்."

இந்தச் சொற்கள்தான் ஒரு நாள் ஒரு மனிதப்பிறவியைக் கற்பனையான சொர்க்கத்திலிருந்து, உண்மையான நரகத்துக்குத் தள்ளிக் கொண்டு போவதற்கான வழியைச் செப்பனிட்டுக் கொண்டு செல்கின்றன!

குரல், மேலும் உருப்போட்டுக் கொண்டேயிருந்தது.

"கடவுள்—வணக்கம்........."

கடவுள்! — கடவுள், இடியை அனுப்பி மருதாயியைக் கொன்று விடமாட்டாரா? இது புண்ணிய மாச்சே! படிக்கத் தெரிந்தவுடன், அவள் அந்தக் குரூர, பழிகார, கொலைகாரனின் கடிதத்தைப் வாசித்துவிட்டால், என்னகும்? கடவுள் கிருபையால் அவள் கண்

பொட்டையானல், எவ்வளவு காருண்யமா யிருக்கும்!

சில மாதங்கள் கடந்தன. வைகையில் வெள்ளம் போகிறது. வாழைத் தோப்புகள் காய்த்துக் கனிந்து குலுங்குகின்றன, வயற் புலன்கள் ரத்தினக் கம்பளம் விரித்தாற்போல் ஒரே பச்சையாய்க் கண்ணுக்கெட்டிய தூரம் பசிய தோற்றமளிக்கின்றன.

கார்த்திகை மாதம். திருக் கார்த்திகை நாள் வந்தது. வீடுகள் தோறும் விளக்குகள் பெருவாரியாய்க் கொளுத்தப் பெற்றன. திடீரென்று, எல்லா ஒளிக்கும் மேலே இன்னுமொரு பேரொளி செக்கச் செவேலென்று பீறிக் கொண்டெழுந்தது. கிராமத்து மக்கள் தீயணைக்கத் தீவிரமாகவே முயன்றார்கள்.

இருட்டுவேளையில், பச்சைநிற வயல்களின் நடுவே இரத்த நிறத்தில் நெருப்பு, கொண்டல் கொண்டலாய்ச் சுழன்று சுழன்று வானத்தை நோக்கி எழுந்து போனது, பார்வைக்குப் பெருங் கவர்ச்சியாகவும் விளைவை நினைக்கப் பரம கோரமாகவும் இருந்தது. மாடுகள் மருண்டு கட்டவிழ்த்துக் கொண்டு ஓடின. கூரைகள் எரிந்து வீழ்ந்து தரைமட்டமாயின.

எரியும் வீட்டின் எதிரே, நரை மலிந்த கூந்தல் நாலாபுறமும் பறக்க, கொடும் வேதனைக்காளான கோர முகத்தோடும் பைத்தியப் பித்தேறிய கண்களோடும் பெண்ணொருத்தி நின்று கொண்டிருந்தாள். அவள் சிரித்தாள்—மாடுகளின் பரிதாபமான, பயந்த கதறலுக்கு மேலே, எரியும் கூரை, மரம், இவற்றின் சடசடப்புச் சத்தத்துக்கு மேலே—ஆம்! இவை எல்லாவற்றுக்கும் மேலே—அவளது சிரிப்பின் முழக்கம் இடி இடித்தது. அங்கே நின்றபடி, அவள் சிரித்துக் கொண்டே இருந்தாள்.

மருதாயி, கடைசியில் அவன் கடிதத்தைப் படித்துவிட்டாள்!

★

மன்னிப்புக் கேட்டாலும்—

ராபர்ட் கிளைவ் சென்னையில் கிழக்கிந்தியக் கம்பெனியில் ஒரு குமாஸ்தாவாக வேலை பார்க்கையில், மேலதிகாரி ஒருவரிடம் சண்டையடித்துக் கொண்டார். இந்த விவகாரத்தைக் கவர்னர் விசாரித்து, கிளைவ் மீதுதான் குற்றம் என்று கண்டு ''மேலதிகாரியிடம் நீர் மன்னிப்புக் கேட்டுக்கொள்ளும்'' என்று கிளைவுக்குக் கட்டளையிட்டார். கிளைவும் அப்படியே அந்த மேலதிகாரியிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டார்.

இதன்பின், இந்தச் சம்பவத்தை அடியோடு மறந்து நண்பர்களாக வேண்டும் என்று நினைத்து, அந்த மேலதிகாரி, கிளைவைத் தம்முடன் விருந்துண்ண அழைத்தார்.

ஆனல், கிளைவ் மிகுந்த எரிச்சலோடு, '' உம்மிடம் மன்னிப்புக் கேட்கத்தான் கவர்னர் எனக்குக் கட்டளையிட்டார். உம்முடன் விருந்துண்ணும்படி கட்டளையிடவில்லை'' என்று சொல்லி மறுத்துவிட்டார்!

என்ன பாக்கறயள்
'டீ'க்கு அப்பறம்
அசோகா!
'அசோகா' பொட்டணங்களைப்
பார்த்ததும், அவருக்கு 'டீ' ஞாபகம்
கூடப் போய்விட்டது. தாம்பூலத்
துக்கு அவசரப்படுகிறார் போலிருக்
கிறது. உத்தம மனைவி 'டீ'யை
ஞாபகப்படுத்துவது
இயற்கைதானே?
REGD. No. 1506
அசோகா
MILD SCENTED
ASOKA
ரிஜிஸ்டர்.நெ.1506
அகத்தின் அழகு முகத்தில் தெரியும்

உங்கள் ஆயுள் இன்ஷ்யூரன்ஸுக்கு உகந்தது

யுனைடெட் இந்தியா

லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

யுனைடெட் இந்தியா லைப் பில்டிங்

எஸ்பிளனேட் :: மதராஸ்

டிரஸ்டி: மதராஸ் சர்க்காரின் அபிஷியல் டிரஸ்டி

1906 முதல் திருப்தி அளித்துவரும் ஊழியம்

ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் என்றுமே ஒரு முக்கியமான விஷயம். தற்சமயம் இது நமக்கு ஜீவாதாரமானது. சொற்ப வருவாயில் என்ன செய்வதென்று தயங்க வேண்டாம். உங்கள் சக்திக்கு அனுசரணையான இன்ஷ்யூரன்ஸ் பாதுகாப்புத் திட்டம் வகுக்கிறோம்.

யுனைடெட் இந்தியா

பிராவிடெண்டு அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

"யுனைடெட் இந்தியா லைப் பில்டிங்" :: எஸ்பிளனேட், மதராஸ்

நாமும்தான் காண்கிறோம்; கவியும்தான் காண்கிறான். ஆனால், அவன் என்ன அற்புதத்தைச் செய்துவிடுகிறான்!

மேல்காற்று

அ. சீனிவாசராகவன்

சோலையெங்கும் காற்றின் குரல் முழங்கியது. ஒன்றோடொன்று உராய்ந்து கிளைகள் முனகின. மூங்கிற் கொத்தின் விரல்கள் எதையோ தேடிக் காணாமல் அங்கலாய்த்தன. சோலைக்கு வெளியே, மாலை வானத்தின் தங்க அலைகளைக் கடந்து நீந்தி வந்த காகக் கூட்டமொன்று, சோலையை நெருங்கியதும், நங்கூரமில்லாத படகுகள்போல் தத்தளித்துக் கலைந்து சோலைக்குள் மறைந்தது. கிளைகளின் ஓலத்தோடு ஓலமாய், மருண்ட பறவைகள் எழுப்பிய சந்தடி கலந்தது. பழுத்து வதங்கிய இலைகள் என்னைச் சுற்றி உதிர்ந்தன - காற்றுத் தேவனின் கொடிகளாய், காலத் தேவனின் வெற்றியாய். என்னென்னவோ நினைவுகள், உருவற்ற எண்ணங்கள் என் மனதிலே பாய ஆரம்பித்தன. எங்கிருந்தோ வந்து சுழன்று எங்கேயோ போகும் என்னைப் போலவே, இங்கு சிறிது நேரம் உழலும் இந்த மேல்காற்றுத்தான் அவைகளை என் மனத்திலே சொரிந்ததோ, என்னவோ, யார் கண்டது!

அப்போது உதயமாயிற்று 'மேல்காற்று' என்ற ஆங்கிலப் பாடலின் ஞாபகம். அற்புதமான பாடல். காற்றின் தீவிர கம்பீரத்தை, அதன் மும்முர வன்மையை, சோக எக்களிப்பை, பாட்டின் சொற்கள் தாங்கி விம்முகின்றன. பாடலின் ஆசிரியன் ஷெல்லி என்பவன். 'ஷெல்லி....ஆங்கிலக் கவிஞன்.... கவிஞன் என்றால்.........' என்று தொடங்கி என் மனம் கவிதையைப் பற்றி எண்ணி அலைந்தது.

'கவிதை, கவிதை' என்று சிலர் பிரமாதப் படுத்துகிறார்களே, அப்படிக்கு அதிலே என்ன இருக்கிறது? கவிஞன் என்பவன் தனிப் பிறவியா, அவனிடம் ஏதாவது 'சித்து' உண்டா, அவன் எல்லாம் அறிந்தவனா? அப்படி ஒன்றுமில்லை. நமக்கும் அவனுக்கும் உள்ள வித்தியாசம் ஒன்றுதான்; ஆனால், அது மிகவும் முக்கியமானது. நம்மைவிட அவனிடம் மனிதப்பண்பு அதிகமாகப் பொருந்தி இருக்கிறது. நீண்டகாலம் படுத்த படுக்கையாய்க் கிடக்கும் நோயாளி ஒருவனுக்கும், நோயொன்றுமில்லாமல் திடகாத்திரமாய் உள்ள ஒருவனுக்கும என்ன வித்தியாசமோ, அதே போன்ற பேதந்தான் நமக்கும் கவிஞனுக்கும். நோயாளியின் உடல் வலிமை குன்றி இருப்பதைப் போலவே, நம்முடைய

தில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. ஷெல்லி தீவிரமான இலட்சிய வாதி; பழமையான சமூகக் கோட்பாடுகளும், எப்போதோ ஒரு காலத்தில் அவை விளைவித்த நன்மை ஓய்ந்த பிறகும், அவை களுக்கு அடிமையாய் நிற்கும் கோழைத்தனமுமே, மனித வாழ்க்கையின் முன்னேற்றத் துக்கு முட்டுக்கட்டை என்று அவன் சொன்னான். இவற்றி லிருந்து விடுதலை பெற்றால், உலகத் தின் உள்ளே வியாபித்திருக்கும் அழகையும், மனதிலே இப்போது மறைந்து நாடுவாரற்றுக் கிடக் கும் ஆத்மச் செல்வத்தையும் மனிதன் பெறுவான் என்று ஷெல்லி வற்புறுத்தினான். 'ஏதோ பைத்தியக்காரன்' என்று சொல்லி விட்டுத் தன்வழியே சென்றது ஆங்கில ஸமூகம்.

ஆனால், ஷெல்லி விடவில்லை. தன் இலட்சியங்களை நடை முறைக்குக் கொண்டுவர ஆரம் பித்தான். "கலியாண மென்பது உலக வழக்காகிப் போன சமூகக் கட்டுப்பாடே தவிர வேறில்லை. காதலுக்காகக் கட்டுப்பாட்டை உடைத்து விடலாம்" என்பது ஷெல்லியின் நம்பிக்கைகளில் ஒன்று. இதன்படி, தான் முத லில் கலியாணம் செய்துகொண்ட மனைவியைக் கைவிட்டு, வேறு ஒருத்தியை அவன் வரித்தான். "இதேதடா, உளறுவதோடு நில் லாமல், பைத்தியக்காரன் கற்களை வீசி எறியவும் ஆரம்பித்து விட் டான்" என்று எண்ணி, ஆங்கில சமுதாயம் ஷெல்லியை விலக்க முற்பட்டது. இதற்குமுன் அவனை இலட்சியவாதி என்று புகழ்ந்த சிலரும் "அதெல்லாம் கவிதை

அஹிம்சையின் கவசம்

இருவர் சண்டை போடுவதைக் கண்டதும் நடுநடுங்குகிறவனும் ஓட்டம் பிடிப்பவனும் அஹிம்ஸாவாதி யல்ல; வெறும் கோழை. அஹிம்ஸா வாதியின் தீரம் ஹிம்சாவாதியி னுடையதைவிட நிரம்பவும் உயர்வா னது. ஹிம்சாவாதியின் ஆயுதம் ஈட்டி, வாள், துப்பாக்கி என்றால், அஹிம்ஸாவாதிக்குக் கடவுளே கவச மாவார்.

—மகாத்மா காந்தி

யிலே சரிதான். நடைமுறையிலே வருவதென்றால் அதெப்படி....?" என்று இகழ்ந்தார்கள். இதைத் தானே தமிழ்க் கவிஞன் சொன் னான்?

"நாடகத்தில் காவியத்தில்
காதலென்றால்,
நாட்டினர்தாம் வியப்பெய்தி
நன்றுமென்பர்.
ஊடகத்தே வீட்டினுள்ளே
கிணற்றோரத்தே
ஊரினிலே காதலென்றால்
உறுமுகின்றார்;
பாடைகட்டி அதைக்கொல்ல
வழிசெய்கின்றார்."

இதனால் ஷெல்லி அனுபவித்த சஞ்சலம் கொஞ்சமன்று. தன் னைப் பிறர் அவமதிக்கிறார்களே, தூற்றுகிறார்களே என்று கூட அவன் கவலைப்படவில்லை. இவ் வளவு அவநம்பிக்கைக்குப் பாத் திரமாகிவிட்ட தன்னுடைய பாடல்களுக்கு இதனால் மதிப்புக் குறைந்து விடுமோ, தான் கண்ட உண்மைகளை ஜனங்கள் ஏற்றுக் கொள்ளாமல் இருந்து விடுவார் களோ என்பதுதான் அவன் கவலை. 'தனக்கு இடமில்லை என்று சொல்லும் சமூகம், தன்னுடைய இலட்சியங்களைக் கடைப்பிடித்து நடக்கவா போகிறது?' என்று சோர்வடைந்தான்.

இந்த நிலையிலே வெளியே நோக்கினன். அப்போது இலையுதிர்காலம். சோலைகளை அலைத்து, வனத்தின் உள்ளத்தைக் கலக்கி, பழுத்து வதங்கிய இலைகளை எங்கும் பரப்பி ஓவென்றிறைந்து சுழன்று சென்றது மேல்காற்று. மேல்காற்றின் தீவிரத்தையும், அடங்காச் சுயேச்சையையும் கவனித்த ஷெல்லிக்குப் பழைய ஞாபகம் எழுந்தது. தானும் அதைப் போலவே சுதந்திரத்தோடு இருக்க எண்ணியவன், இருந்தவன் தானே :

'' உன்போல் இருந்தவனே ;
அடங்காத நெஞ்சத்திலும்,
ஓயாத வேகத்திலும்,
பெருமிதத்திலும், வன்மையிலும்,
உன்போல் இருந்தவனே.
ஆனால் இன்றோ
காலம் என்னும் பாரவிலங்கு
என்னைத் தளையிட்டு ஒடுக்கி
விட்டது.''

இந்தக் காற்றோடு காற்றாய், அதன் அசைவிலே பங்கு கொள்ளும் ஓர் இலையாகவோ, மேகமாகவோ, அலையாகவோ இருக்க முடியவில்லையே என்று வருந்துகிறான் :

'' நீ தூக்கி எறிந்து விளையாடும்
வதங்கிய ஓர் இலையாய்
மட்டும் நான் இருந்தால்
உன்னுடன் பறந்து செல்லும்
மேகமாய் இருந்தால்,
உன் வலிமையைத் தாங்க
முடியாமல் திணறி,
அதிலே பங்கு கொண்டு,
சுயேச்சையில் உனக்கு மட்டுமே
தாழும் கடல் அலையாய்
இருந்தால்......
என் வேதனையைச் சொல்லி
உன்னோடு மன்றாட மாட்டேன்.
அலையைப்போல், இலையைப்போல்
மேகத்தைப் போல்,
என்னையும் தூக்கி உயர்த்தி
நில், கை விடாதே...
வாழ்க்கையின் முட்களில்
வீழ்கிறேன் ;
இரத்த வெள்ளத்தில் அழுந்தி
அழிகிறேன்.
ஆயினும், ஒரு காலத்தில்
உன்போல் இருந்தவனே.''

சமுதாயச் சிறையில் அகப்பட்டுக் கால விலங்கில் கட்டுண்ட கவிஞனை விட, மேல்காற்றின் வலிமையில் பங்கு கொள்ளும் இலையும், மேகமும், அலையும், ஜீவசக்தி நிரம்பியவை என்று ஷெல்லி கருதினான். மேல்காற்றை அழைத்துச் சொல்லுகிறான் :

'' இந்தக் காட்டைப் போலவே
என்னையும் உனது குழலாக
அமைத்துக் கொள்.
என் வாழ்க்கையும், வதங்கிய
இலைகளைப் போல,
உலர்ந்து உதிர்வது ;
ஆனா லென்ன ?
மகத்தான உன்பேரிசையின் தமரம்,
வனத்திலே இலையுதிர் காலக்
குரலை எப்படி எழுப்புமோ
அப்படியே, என் வாழ்க்கையி
லிருந்தும்,
வருத்தம் தோய்ந்தும், இனிமை
நிறைந்த,
குரலொன்றை எழுப்பாதா ? ''

இலையுதிர் காலத்தின் குரல்—இலைகளும், மலர்களும் மரங்களும் மடிவதால் எழுகின்ற சோகக் குரல்—இதனுள்ளே வஸந்த ஜனனத்தின் கீதம் தோய்ந்திருக்கின்றதல்லவா? அதைப் போலவே, கவிஞனுடைய பாடல்களும் இன்று சோகம் நிறைந்திருக்கலாம் ; நம்புவாரற்றுக் கிடக்கலாம் ; ஆனால், நாளைக்கு அவைகளின் மூலமாகப் புதிய உலகம் நிர்மாணமாகாதா ? 'ஆகும்' என்பதுதான், மேல் காற்றின் ஓலத்தில் ஷெல்லி கண்ட உண்மை.

★

இன்றுதான் நமக்குக் கடற்படை யென்றால்,
ஆச்சரியமா யிருக்கிறது. சிவாஜி காலத்தி
லேயே அது உண்டு நம் நாட்டில்

மகாராஷ்டிரர் கடல்போர்

எம். எஸ். சுப்பிரமணிய ஐயர்

தெய்வம், தேசம், தர்மம் மூன்றையும் காக்க முனைந்தவன் சிவாஜி சத்திரபதி. ஆனதுபற்றியே மகாராஷ்டிரப் பேரரசு கண்டான் அப்பெருமான். அன்னிய ஐரோப்பியரை வெல்ல வேண்டின், கப்பல் படை தேவையென அத் தார்வேந்தனுக்குத் தோன்றியது. உடனே கப்பல் படையும் அக் காவலன் அமைத்து வைத்தான்.

கப்பல் படை தங்குவதற்கும் சரி, பகைக் கப்பல்கள் வரின், அவற்றைத் தாக்குவதற்கும் சரி, துறைமுகக் கோட்டைகள் வேண்டும் அல்லவா? சிவாஜி கட்டிய துறைமுகக் கோட்டைகளோ பலவாம். அவற்றுள் அஞ்சன்வெளி, இரத்தினகிரி, பத்மதுர்க்கம், ககன துர்க்கம், ராஜகோட்டை, சிந்து துர்க்கம், சுவர்ண துர்க்கம், விஜய துர்க்கம் என்பன முக்கியமானவை.

அத் துறைமுகக் கோட்டைகளுள், சிந்துதுர்க்கம் முன்வைத்து எண்ணத்தக்கது. அதனைக் கட்டி முடிக்கவும், அதற்குரிய பாதுகாப்பு ஆயுதங்களை அமைக்கவும், ஆன செலவு ஒருகோடி வராகன் என்பர். அக் கோட்டையில் இருந்த கடல் படை வீரர் மூவாயிரவர். அத்தனை பெயரும் மாவல வகுப்பினரே. அவ் வீரர்களின் தலைவர்களுக்கு நாயக், சிரோநாயக், மாநாயக், தலைமாநாயக் என்று படிப்படியாக உயர்ந்த பதவிப் பெயர்கள் உண்டு.

சிவாஜியின் சரிதம் எழுதியவர்களில் ஒருவன் சித்திரகுப்தன். இவன் எழுதியிருக்கும் வண்ணம், சிவாஜியினிடம் இருந்த கப்பல்கள் 640 ஆகும். அவற்றுள் 60 பெரியவை, 300 நடுத்தரமானவை; ஏனைய சிறியன. (அந்நாளில் நீராவிக் கப்பல்கள் கிடையா. இக் காலத்தில் இருப்பன போல் 30 ஆயிரம் 40 ஆயிரம் டன் எடையுள்ளனவும் ஆகா) எல்லாம் பாய்மரக் கப்பல்களே! துறைமுகக் கோட்டை சமைக்கையிலும், கப்பல்கள் கட்டுகையிலும் உடனிருந்து கவனித்தல் சிவாஜியின் வழக்கம்.

நிலச் சண்டையிலே முன்னணியில் நிற்றல் சிவாஜியின் இயற்கை. சிவாஜி யில்லாமல் தரைச் சண்டை எதுவும் நடந்ததில்லை என்னலாம். கடல் சண்டையிலோ சிவாஜி பங்கு கொண்டதில்லை. கடல் படைத் தலைவர்

களுக்கே அப் பொறுப்பு. அத் தலைவர்களில் கோவிந்த விசுவ நாதப் பிரபு என்பவர் முக்கிய புருஷர்.

சிவாஜியின் காலத்துக்குப் பின்பும் அக் கப்பல் படை பெருகுவது கண்டு, மொகலாயர் மன மறுகினர்; ஆங்கில வர்த்தகர் ஆத்திரங் கொண்டனர்; போர்த்துகேசியர் பொறுமி நின்றனர்; டச்சுக்காரரும் அச்சங் கொண்டனர். ஒரு சமயம் அந் நால்வரையும் எதிர்த்து நின்ற தீர புருஷன் கனோஜி ஆங்கரெ என்பவன்; இவனே கப்பல் படையின் பிரதம தலைவன்.

பம்பாய் நகருக்குத் தெற்கே பதினாறு மைல் தூரத்தில் கந்தேரி என்று ஒரு தீவு. அத்தீவே மகாராஷ்டிரக் கப்பல் படையின் மூலஸ்தானம். கடல் சண்டையின் பாதுகாப்புக்காக அங்கே மகாராஷ்டிரர் கட்டியிருந்த துறைமுகக் கோட்டை விஜய துர்க்கம் எனப்படும். அரபிக் கடலோரமாக, யாருடைய கப்பல்கள் சென்றாலும், மகாராஷ்டிரருக்குச் சுங்கவரி கொடுக்க வேண்டும். இல்லையேல் அக் கப்பல்களைக் கொண்டுபோய் விடுவான் அக் கனோஜி.

அன்னிய ஐரோப்பியர் அது கண்டு மனம் பொறுக்கவில்லை. 1715-ஆம் ஆண்டிலே பம்பாய் கவர்னராக இருந்தவன் பெயர் சார்லஸ் பூன். மகாராஷ்டிரரின் கப்பல் படையை அழித்து விடுவதென இவன் கங்கணம் பூண்டான். ஹண்டர், ஹாக், ரிவெஞ்சு, விக்டரி, (Hunter, Hawk, Revenge, Victory) என்று பெயர் படைத்த நான்கு ஆங்கிலச் சண்டைக் கப்பல்கள் கிளம்பின. ஆங்கில வர்த்தகரின் நிலப்படையும் அக் கப்பல் படைக்குத் துணையாகப் புறப்பட்டது.

1717-ஆம் வருஷம் ஏப்ரல் மாதம் 17-ஆம் தேதி அந் நான்கு கப்பல்களும் சேர்ந்து, விஜய துர்க்கத்தைத் தகர்க்கத் தொடங்கின. பீரங்கியிலிருந்து சரமாரியாக குண்டுகள் கிளம்பி வந்தன. பொத், பொத் என்று வீழ்ந்து, படீர், படீர் என்று வெடித்தன. ஆயினும் அக் கோட்டை அசையவில்லை. அது கண்டு ஆங்கிலேயர் பொங்கி யெழுந்தனர்; கோட்டையின் மதில் சுவர்களில் ஏறவும் முயன்றனர். பலிக்கவில்லை. கோட்டைக்குள்ளிருந்து கொண்டே மகாராஷ்டிரர் குண்டுமழை பொழிந்தனர். அது கண்டு பயந்து, வந்த வழியே நோக்கிச் சென்றன ஆங்கில யுத்தக் கப்பல்கள் நான்கும்.

1721-ஆம் ஆண்டிலும் பம்பாய் கவர்னர் முயலலானான். இங்கிலாந்திலிருந்து நான்கு யுத்தக் கப்பல்கள் வந்தன; கப்பல் சண்டையில் கைதேர்ந்த மத்தேயு என்பானும் வந்து சேர்ந்தான். இம்மட்டோ? போர்த்துக்கேசியரின் கப்பல் படையும் துணைபுரிய எழுந்தது. இருவரின் தரைப் படைகளும் புறப்பட்டன. கனோஜி அது கண்டு கலங்கவில்லை; தனது நீர்ப்படை, நிலப்படை இரண்டையும் திரட்டினான்; முன் போல் போரும் தொடுத்தான். விஜய துர்க்கத்தை ஐரோப்பியரால் அசைக்க முடியவில்லை.

சீமையிலிருந்து வந்த மத்தேயு அது கண்டு பொங்கி யெழுந்தான்; தரைப் படையை ஏவினன்; தானும் முன்னின்று சமர் செய்தான். உடனே மகாராஷ்டிரர் பொங்கி எழுந்தனர். முன்னணியில் நின்ற மத்தேயுவின் தொடையில் மகாராஷ்டிர வேல் கம்பு வந்து பாய்ந்து, படுகாயம் உண்டுபண்ணியது. அதனை அவன் பொருட் படுத்தவில்லை. தனது கைத் துப்பாக்கியை எடுத்தும் சுட்டுப் பார்த்தான். மகாராஷ்டிரரை வெல்ல முடியவில்லை.

ஆங்கிலேயருக்குத் துணையாக வந்த போர்த்துக்கீசியரையோ பக்கவாட்டிலிருந்த மகாராஷ்டிரப்படை தாக்கியது. மகாராஷ்டிரரின் பீரங்கிகளும் குண்டுகளைப் பொழிந்தன. ஆங்கிலேயரும், போர்த்துக்கேசியரும் கலகலத்துப் போயினர். 'உடும்பு கையைவிட்டால் போதும்' என்ற நிலை கண்டபின், ஐரோப்பியர் பின்வாங்கினர். பல பீரங்கிகளும் தளவாடங்களும் மகாராஷ்டிரரின் கையில் சிக்கின. "உன்னாலே நான் கெட்டேன், என்னாலே நீ கெட்டாய்" என்று இரு ஐரோப்பியரும் ஒருவரை ஒருவர் ஏசிக்கொண்டு தத்தம் இருப்பிடம் போயினர். ரிவெஞ்சு எனும் சண்டைக் கப்பல் மகாராஷ்டிரரிடம் சிக்கிக் கொள்ளவே, பணங்கொடுத்து அதனை மீட்டுக்கொண்டனர் ஆங்கிலேயர்.

1724-ஆம் வருஷத்திலே டச்சுக்காரர் தங்கள் சண்டைக் கப்பல்களுடன் விஜய துர்க்கத்தின் மீது பாய்ந்தனர். சண்டை கனமும்முரமாக நடந்தது. முடிவிலே ஒன்பது கப்பல்களையும் பல வீரரையும் பறிகொடுத்து, டச்சுக்காரர் திரும்பிச் செல்ல நேர்ந்தது. அப்பால் கனோஜியை எதிர்ப்பார் எவரும் இல்லை. மகாராஷ்டிரரின் கப்பல் படையும் அரபிக் கடலோரத்தில் கம்பீரமாக உலாவி நின்றது.

★

தேயிலையின் கதை

தேயிலை தோன்றியதைப் பற்றி ஒரு ரசமான கதை சொல்லுகிறார்கள். மோட்சத்திற்காக ஒன்பது வருஷம் தூங்காமல் தவம் செய்த இந்தியத் துறவியாகிய போதிதர்மா என்பவரால்தான் தேயிலைச்செடி கண்டு பிடிக்கப் பட்டதாம். அந்தத் துறவி 8-ஆவது வருஷத்தில் கொட்டாவி வந்ததைக் கண்டு, தம் அருகில் இருந்த ஒரு புதரிலிருந்த இலைகளைப் பறித்து மென்றார். இதனால் அவருக்கு நல்ல விழிப்பு ஏற்பட்டது. அந்தப் புதரின் இலைகளை மேலும் மேலும் மென்று மென்று, தம் சாதனையை அவர் நிறைவேற்றினார். புத்தரின் பரிபூர்ண நிலையை உணர்ந்தபின், போதிதர்மா சைனாவுக்குத் தூது சென்ற பொழுது, இந்த அற்புதச் செடியையும் உடன்கொண்டு போனார். இவ்விதமாகத் தேயிலை குடிக்கும் பழக்கம் புத்த உலகம் முழுவதும் கொஞ்சங் கொஞ்சமாகப் பரவிவிட்டது.

சொல்

பேச்சழிந்து போனல் — அறிவின்
பெருமை என்னவாகும்?
மூச் சிழுக்கு மானல் — தேகம்
முன் னிருந்த தாமோ?
கூச்ச மில்லே யென்ருல் — பெண்மை
குறைவு பட்ட தன்ரே?
நீச்ச மற்ற மீன்போல் — சமுகம்
நிலே குலேந்து போகும்.

சொன்ன சொல் லழிந்தால் — வாழ்க்கை
சுகமி லாத தாகும்
சின்ன ஏழைக் கேனும் — சொல்லே
ஜீவ நாடி யாகும்
மன்ன ரான பேரும் — பேச்சை
மாறி மீறி விட்டால்
சின்ன பின்ன மாவார் — அதிலே
சிறிதும் ஐய மில்லே.

வாக் கழிந்து விட்டால் — பின்னர்
வாழ்வு தாழ்வ தாகும்
மூக்கறுந்து போனல் — நல்ல
முக விலாச மெங்கே?
நோக் கிலாது போனல் — கண்கள்
நோகும் புண்க ளாகும்
காக்க வேணும் சொல்லே — அதுவே
கர்ம வீர மாகும்.

வார்த்தை மீறி விட்டால் — மனிதன்
வாசம் அற்ற மலரே
கீர்த்தி என்ப தெல்லாம் — சொல்லில்
கெட்ட பேருக் கேது?
பூர்த்தி தவறி னலும் — வாக்கில்
புரட்டுச் செய்திடாமை
நேர்த்தி யான தாகும் — என்று
நினேவில் வைக்க வேணும்.

—நாமக்கல், வெ. ராமலிங்கம் பிள்ளே

ஒரு சின்ன ரகஸ்யம்; அதிலிருந்து சந்தேகம்; பின்னே பயம்—விளைவு ஊடல். அது தீரும்போது, என்ன விந்தை!

ஒளித்த பதக்கம்

'ராதா'

ஜன்னலிலே அதைக் கண்டவுடனே, அவள் அதற்கு அடிமையாகி விட்டாள். ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு விதமான மோஹம். லீலாவுக்கு, மேலாடையிலே குத்திக்கொள்ளும் ப்ரூச்சு வகைகளிலே பெரும் பைத்தியம். இதுவரையில் பல தினிசு ப்ரூச்சுகளை அவள் வாங்கி வாங்கி வீட்டிலே நிறைத்திருக்கிறாள். ஆனால், இதோ இந்த மோஸ்தர் மாதிரி அவள் கண்டதேயில்லை. இந்தப் பதக்க மோஸ்தர் ப்ரூச், மிக அழகாயிருந்தது. ப்ரூச் வகைகளுக்கே இதை ஓர் உதாரணமாகக் கொள்ளலாம். அவ்வளவு அருமையா யிருந்தது. விலையை விசாரித்த போதுதான், அவளுடைய மனம் திடுக்கிட்டது. தங்கமோ போலித் தங்கம், கற்களும் அப்படியே - இப்படிப்பட்ட ஒரு ப்ரூச்சுக்கு, பதினைந்தே முக்கால் ரூபாய் என்றால்.........? அழகுக்கும் மோகத்துக்கும் விலையுண்டா? என்ன விலையானால் என்ன, அதை வாங்கித்தான் ஆகவேண்டும் என்று அவள் ஆசைப்பட்டாள். ஆனால், கணவன் என்ன சொல்லுவாரோ?

வாஸ்தவம். இதுவரையில், லீலாவின் ப்ரூச் பைத்தியத்தை அவர் சகித்தே வந்திருக்கிறார். ஆசையுள்ள புருஷன்தான். ஆனாலும், அளவுக்குமேல் போனால்?—அவருக்கு இது அப்படித்தானே தோன்றும்? உயர்ந்தால் இரண்டு அல்லது இரண்டரை

......அந்த ப்ரூச்சை எடுத்துத் திருப்பித் திருப்பி அழகு பார்ப்பாள்

ரூபாய்க்கு மேல் இம்மாதிரி கிலிட்டு புரூச்சை யாராவது வாங்குவார்களா?...ஏன் வாங்க மாட்டார்கள்? வாங்காமல்தான் இதை இங்கே வைத்திருக்கிறார்களோ?—பலவித யோசனை, பலவித சமாதானம். கடைசியில் லீலா துணிந்து அந்தப் பதக்க புரூச்சை வாங்கிவிட்டாள். வாங்கிக் கொண்டு வீட்டுக்குப் போகும் வழியிலே, அவளுடைய பயம் அதிகரித்தது. மறுபடியும் யோசனைகள், சஞ்சலம், குழப்பம்! சரி. வாங்கியது வாங்கியாகி விட்டது. புரூச் ஒன்றும் அப்படி மட்டமானதல்ல; மிக்க அழகாகவே இருக்கிறது. அதை வாங்கியதற்கு எவரும் வருந்த வேண்டியதில்லை. ஆனால், பதினைந்து ரூபாய் போய்விட்டதே என்று கணவன் கோபிப்பாரே என்று தானே கலங்கவேண்டி யிருக்கிறது? அதற்கு ஓர் ஏற்பாடு செய்துவிட்டால் போகிறது. லீலா ஒரு திட்டம் போட்டுக் கொண்டாள்.

புரூச்சைத் தற்காலிகமாக ஒளித்துவைத்து விடுவது; அதை வாங்கிய பணத்துக்கு வேறு ஏதாவது வினியோகம் காட்டிவிடுவது; ஏதாவது விசேஷ நாள் வரும் போது, இருவரும் உல்லாசமாக ஸினிமாவுக்குப் போவதும், கடற்கரை செல்வதும், கடைவீதி சுற்றுவதுமாய்க் களிப்பா யிருப்பார்க ளல்லவா? அப்போது சந்தடி யில்லாமல் இந்தப் பதக்கத்தை வெளியே எடுத்தால், புருஷன் அதிக கவனம் செலுத்த மாட்டார்; வேறு கவனமா யிருக்கும் போது, வார்த்தையோடு வார்த்தையாய் இதைப்பற்றி அவரிடம் சொல்லிவிட்டால், எல்லாம் சரிப்பட்டுவிடும்—இப்படி அவள் முடிவு செய்தாள். புரூச்சையும் சமையலறை அலமாரிக்குள்ளே ஒரு சம்புடத்தில் போட்டு ஒளித்து வைத்தாள்.

பல நாட்கள் கழிந்தன. இடையிடையே ஏகாந்தமா யிருக்கும் போது, லீலா சமையல் அறைக் கதவை அரைகுறையாய்ச் சாத்திக் கொண்டு, அந்த புரூச்சை எடுத்துத் திருப்பித் திருப்பி அழகு பார்ப்பாள். பார்க்கப் பார்க்க, அவளுக்கு ஆனந்தம் பொங்கும். ஆனால், ஓர் எலி அரவம் செய்தாலும் திடுக்கிட்டுப் பரபரவென்று கள்ளனைப் போல் புரூச்சை அலமாரியில் போட்டு மூடிப் பூட்டி, அறைக் கதவைத் திறப்பாள். இன்னும் எத்தனை நாள்தான் இப்படியே கழிப்பது?

இவ்விதம் அவள் ஏங்கிக் கொண்டே யிருக்கையில், பொங்கற் புதுநாள் வந்து சேர்ந்தது.

என்ன விசேஷநாள் வந்தாலும் சரி, லீலாவின் ஆசைக் கணவன், ஆடையாபரணங்களில் ஏதாவது புதிதாக அவளுக்கு வாங்கித் தராமல் இருப்பதில்லை. ஆனால், இந்தப் பொங்கலன்று ஒன்றையும் காணோம். யுத்த காலமல்லவா என்று லீலா தனக்குத்தானே சமாதானம் செய்து கொண்டாள். இருந்தாலும், உள்ளுக்குள்ளே அவளுக்கு ஒருவித அதிருப்தி உறுத்தியது. அதோடு அந்தப் பதக்க புரூச் ஞாபகம் வேறு சேர்ந்து கொண்டது. அதை வெளியில் எடுப்பதா வேண்டாமா

என்று யோசித்துப் பார்த்தாள். எடுக்கத்தான் எடுத்து என்ன ஆகிற தென்று பார்த்துவிட லாமே என்று இறுதியிலே தீர்மா னித்தாள்.

வெளியே போயிருக்கும் கண வன் சாயங்காலம் திரும்பிவந்த தும், இருவரும் ஸினிமாவுக்குப் போவதென்று ஏற்பாடு. கண வன் வந்தாயிற்று. "நான் முகங் கழுவி உடுப்பணிந்து கொள்கி றேன். அதற்குள் நீயும் தயாரா யிரு. புறப்படுவோம்" என்று சொல்லி, கிணற்றடிக்கு அவர் சென்றார்.

லீலா சமையலறைக்குள் சென்றாள். கதவை மெதுவாகச் சாத்திவிட்டு அலமாரியைத் திறந் தாள். புரூச்சை எடுத்து, முன் னும் பின்னும் திருப்பி, "ஆஹா!" என்று தனக்குத்தானே வியந் தாள். அணிவதா வேண்டாமா என்று மறுபடியும் சஞ்சலம். தயங்கித் தயங்கி நேரம் சென்று கொண்டிருந்தது. அவளுக்கு அது தெரியவில்லை.

இதற்குள் உடையணிந்து தயா ராகிவிட்ட கணவன் வந்து, "லீலா! லீலா! நீ இன்னும் சித்தமாகவில்லையா? என்ன செய்கிறாய்?—" என்று கேட் டார். சற்று நேரம் அமைதி. லீலா மயங்கி உட்கார்ந்திருந் தாள்; வாய்திறக்கவில்லை.

மீண்டும் கணவன், "லீலா! லீலா! எங்கே யிருக்கிறாய்? என்னதான் செய்கிறாய்? இதென்ன—இந்நேரத்தில் அடுப் பங்கரையில் குந்திக்கொண்டு என்ன பண்ணுகிறாய்?" என்று கேட்டுக் கொண்டே, சமையல றைக் கதவைத் திறந்தார்.

சரேலென்று நிமிர்ந்த லீலா, அலமாரிக் கெதிரே நின்றபடி, அந்தப் பதக்க புரூச்சை எடுத்து மோலாடையில் சொருகிக் கொண்டாள்.

அதைக் கண்ட கணவன் திடுக் கிட்டுத் திகைத்தவராக, "ஓ! அந்த புரூச்—இது, இதை—" என்று ஏதோ சொல்லவந்தார்.

அந்தக் குரலில் தென்பட்ட திகைப்பைக் கண்ட லீலாவுக்கு, ஆத்திரம் ஆத்திரமாய் வந்தது. புருஷனை எதிர்த்துப் பேசும் தொனியில் "ஆமாம்! இந்த புரூச்சை வேண்டுமென்றுதான் அணிகிறேன். உங்களுக்குப் பிடிக்க வில்லையா?......." என்று கத்தினாள். துக்கம் மென்னியை அடைத்துக்கொண்டது. கண்ணீ ரும் வந்தது.

"இல்லை, லீலா. கூடத்து அல மாரியில் இதன் பில் இருந்ததே... ......" என்று புருஷன் ஆரம்பித் தார்.

"போதும்,போதும், நிறுத்துங் கள். நல்லநாளும் பொல்லா நாளுமாய் வீண் வம்பு தொடங் காதீர்கள்—" என்று லீலா இடைமறித்துச் சொன்னாள்.

தனக்குத் தெரியாமலே, வீட் டில் தன் பொருள்களை யெல்லாம் தன் கணவன் சோதனை போடுவ தாக அவளுக்குத் தோன்றியது. இல்லாவிட்டால், இந்த புரூச் சைப்பற்றி அவருக்கு எப்படித் தெரியும்? இதன் விலைச் சீட்

டானபில் இருந்ததையெல்லாம் எவ்விதம் கண்டுபிடித்தார்? இவ்வாறெல்லாம் அவள் நினைத்தாள். அவளுடைய கோபமும் துயரமும் அதிகரித்தன. கண்ணீர் மேலும் பெருகியது. சீறும் நாகம் மாதிரி பெருமூச்சும் வந்தது.

கணவன் ஒன்றும் புரியாதவர் போல்ஆச்சர்யமுற்று, "இந்தா, லீலா. நான் ஒன்றும் தப்பாய்ச் சொல்லிவிட வில்லையே! உன் இஷ்டம்போல் நட. உன்னை நான் ஏனென்று கேட்கமாட்டேன். இதோ பார், நான் வெளியே போய், ஒரு ஜட்கா அமர்த்தி வருகிறேன். நான் திரும்பி வருவதற்குள், உன் கண்ணீரெல்லாம் மாறிப் புன்சிரிப்பாய் இருக்க வேண்டும். இல்லாவிட்டால், என் மனது நிரம்பச் சங்கடப்படும். என்ன?" என்று செல்லக் குரலில் கேட்டுவிட்டு, பதிலை எதிர்பாராமலே, வெளியே சென்றார்.

புருஷன் வெளிச் சென்றதும், லீலா கண்ணைத் துடைத்துக் கொண்டாள். பிறகு, தலைவாரி அலங்காரம் செய்து கொள்வதற்காக,கூடத்துஅலமாரியைத் திறந்தாள். அதிலே ஒரு சிறிய சிமிழ் புதிதாய்க் காணப்பட்டது. அதன் மூடியை எடுத்ததும், அவளுக்கு ஒரே திகைப்பாகி விட்டது. தன் கையிலிருந்த அபூர்வமான பதக்க புரூச்சைப் போலவே மற்றொரு புரூச் 'பளபள' என்று அதற்குள்ளே மின்னியது.

அதை ஒரு கையிலும் தன் புரூச்சை மற்றொரு கையிலுமாக வைத்துக்கொண்டு மாறி மாறிப் பார்த்தாள். பிறகு, அவைகளைக் கைக்குக் கை மாற்றி மாற்றிப் பார்த்தாள். இரண்டும் ஒரே அச்சு!

★ இந்த இன்னொரு புரூச் எப்படி வந்தது? தனக்குப் பொங்கல் புதநாள் பரிசாக இதைக் கணவன் வாங்கி வந்திருக்கிறார். திடீரென்று, தான் எதிர்பாராதிருக்கும்போது, இதைத் தனக்களிக்க அவர் எண்ணியிருக்கிறார். அதற்குள் இந்தக் குளறல் ஏற்பட்டு விட்டது. இவள் வாங்கிய புரூச்சை, தாம் வாங்கியது என்று அவர் ஏமாந்துவிட்டார். இத்தனை விபரீதமும் அதனாலேயே ஏற்பட்டிருக்கிறது என்று லீலா உணர்ந்தாள்.

புருஷனுக்கு என்ன சமாதானம் சொல்லுவது என்று தெரியாமல் லீலா நின்றுகொண்டிருக்கையில்,அவர் உள்ளே மீண்டும் வந்து உற்சாகத்தோடு, "வா, லீலா! போவோம்--அதென்ன, இரண்டு

டாக்டரால் முடியுமா?

போதிய படிப்பில்லாத ஒரு பெண், தர்மா மீட்டரைக் கொண்டு, தன் நோயாளிப் புருஷனின் காய்ச்சலைக் கணக்கெடுத்தாள். உடனே, டெலிபோனில், டாக்டரைப் பரபரப்புடன் கூப்பிட்டாள்.

"ஐயா! என் புருஷனுக்கு 136 டிக்கிரி காய்ச்சல் அடிக்கிறது. உடனே, வாருங்கள்" என்று கத்தினாள்.

டாக்டர் வெகு அமைதியாகச் சொன்ன பதிலாவது: "அம்மா, இதற்கு நான் வந்து பிரயோசனம் இல்லை. தீயணைக்கும் எஞ்சினைத்தான் நீங்கள் தருவித்துக் கொள்ள வேண்டும்."

புருச்!— நீ ஒன்று வாங்கியிருக்கிருயா?—நான் முட்டாள். எனக் கென்ன தெரியும் இந்த புருச் விஷயம்? கண்ட விலே கொடுத்து வாங்கி விட்டேன். மூன்றே முக்கால் ரூபாய் பிடுங்கிக்கொண்டான். உன்னைக் கேட்காமல் வாங்கியது தப்புத்தான். நீயானல் இரண்டு இரண்டரைக்கு வாங்கி யிருப்பாய். புருச் மோஸ்தரில் நீ கெட்டிக்காரி. இப்படித் தண்டமாய்ப் போய்விட்டதே என்றுதான் கோபித்துக் கொண்டாயா? போனல் போகிறது. வா, போவோம்'' என்று, அவளது முதுகைத் தட்டிக் கொடுத்தார்.

லீலாவுக்கு அவளையறியாமலே, 'பக்' கென்று அடக்க முடியாத சிரிப்பு வந்தது.

''ஏன் சிரிக்கிருய் லீலா? ஏன்?''

''ஒன்றுமில்லை. கைகேயி எப்படி ராமனைக் காட்டுக்கு அனுப்பினுள் என்று எனக்குத் திடீரென்று ஞாபகம் வந்தது. சிரித்தேன்'' என்ருள் லீலா.

அவள் சொன்னதன் கருத்து ஒன்றும் விளங்காமலும் அதைப் புரிந்துகொள்ள மனமில்லாமலும், ''சரி, ராமனும் சீதையும் காட்டுக்குப் போகட்டும்; நாம் சினிமாவுக்குப் போவோம். வா, நேரமாகிறது'' என்று அன்போடு லீலாவின் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு கிளம்பினர் அவளுடைய கணவன்.

★

மாணவன் குறும்பு

பச்சையப்பன் கல்லூரியின் முதல் பிரின்ஸிபாலா யிருந்தவர் மிஸ்டர் லவரீ என்பவர். அவரிடம் படித்த மாணவருள் சேலம் திரு. ஸி. விஜயராகவாச்சாரியாரும் ஒருவர். தம் கல்லூரி நாட்களில் நடந்த ஒரு தமாஷை, திரு. ஆச்சாரியார் கூறியுள்ளார்.

மாணவர்களில் ஒருவனுக்குப் படிப்பைவிட விஷமங்களில் அதிகப் பிரியமாம். ஒருநாள் பிரின்ஸிபால் லவரீ பாடம் சொல்லிக்கொடுக்கையில், அந்த மாணவன் பாடத்தைக் கவனிக்காமல் மேலே எங்கேயோ பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தானும்.

பிரின்ஸிபாலுக்குக் கோபம் வந்து, ''ஏ முட்டாள்! என் பாடத்தைக் கவனிக்காமல் மேலே என்ன பார்க்கிருய்?'' என்று கத்தினர்.

அந்த மாணவன், ''ஸார், உங்கள் பாடம் நிரம்ப ருசியாயிருக்கிறது. அந்த ருசியைப் பருகும் ஆசையால், அந்தப் பல்லிகூடக் கீழே வர வெகு நாழியாய் முயற்சித்தும் முடியாமல் தவித்து, தலையை மேலே மேலே தூக்குகிறது. அதைப் பார்த்துத்தான் நான் அதிசயப்பட்டுக் கொண்டிருந்தேன்'' என்ருன்.

எல்லா மாணவர்களும் 'கலீர்' என்று சிரித்தார்கள். பாவம்! பிரின்ஸிபால் லவரீ என்ன செய்வார்? அவரும் அந்தச் சிரிப்பிலே சேர்ந்துகொண்டார்.

எது கவிதை?

வண்டி அற்புதப் பொருளாம் — வண்டி
மாடும் அற்புதப் பொருளாம்.
வண்டி பூட்டும் கயிறும் — என்றன்
மனதுக் கற்புதப் பொருளாம்.

வண்டல் கிண்டி உழுவோன் — கையில்
வரிவில் ஏந்தி நின்ற
பண்டை விஜயன் போல — இந்தப்
பாரில் அற்புதப் பொருளாம்.

பறக்கும் குருவி யோடென் — உள்ளம்
பறந்து பறந்து திரியும்
கறக்கும் பசுவைச் சுற்றி — அதன்
கன்று போலத் துள்ளும்.

ஈயும் எனக்குத் தோழன் — ஊறும்
எறும்பும் எனக்கு நேசன்.
நாயும் எனக்குத் தோழன் — குள்ள
நரியும் எனக்கு நண்பன்.

கல்லின் கதைகள் எல்லாம் — இரு
காது குளிரக் கேட்பேன்.
புல்லின் பேச்சும் அறிவேன் — அதைப்
புராண மாக விரிப்பேன்.

அலகில் ஜோதி யான — ஈசன்
அருளி னலே அமையும்
உலகி லெந்தப் பொருளும் — கவிக்கு
உரிய பொருளா மையா.

உள்ளத் துள்ளது கவிதை — இன்பம்
உருவெ டுப்பது கவிதை.
தெள்ளத் தெளிந்த தமிழில் — உண்மை
தெரிந் துரைப்பது கவிதை.

—'கணபதி'

அன்பர் - ராய. சொ.

ஏ. கே. செட்டியார்

தமிழ்நாட்டிலே நேர்மை தவருது நடந்த தமிழ்ப் பத்திரிகைகளில் 'ஊழிய'னும் ஒன்று. இந்தப் பத்திரிகையைச் சுமார் இருபது வருஷ காலம் ஆசிரியராக இருந்து நடத்தியவர் ராய. சொ.

நாற்பத்து நான்கு வருஷங்களுக்கு முன்னே, ராய. சொ. காரைக்குடியில் பிறந்தார். தந்தை ராயப்ப செட்டியார்; தாயார் அழகம்மை ஆச்சி. இந்தப் பெற்ருேர்கள், தங்களுடைய அருமைக் குமாரன், 'திரை கடலோடியும் திரவியம் தேடு'வான் என்று கருதியிருக்கலாம். ஆனல், ராய. சொ. தம்முடைய வாழ்க்கையில் பெரும் பகுதியைத் தேச விடுதலைத்தொண்டிலே கழித்தார்.

காரைக்குடிக் கருகே காந்தி நகர் என்ருெரு கிராம மிருக்கிறது. இவ்வூரில் சுமார் பதினறு வருஷங்களாக, ராய. சொ. வசிக்கிருர். இவருடைய வீட்டுக்குச் சென்ருல், ஐந்தாறு ஜதை செருப்பு, பூட்ஸ், கட்டை, ஸ்லிப்பர் முதலியவைகளைக் காணலாம். இவை அனைத்தும் ராய. சொ. வுக்குச் சொந்தம். வீட்டுக்குள் நடக்க ஸ்லிப்பர், தோட்டத்துக்குச் செல்லக் கட்டை, வெளியூர் செல்ல பூட்ஸ் இம்மாதிரி விதம் விதமாக இருக்கும்.

வீட்டினுள்ளே சாய்வு நாற்காலியிலோ அல்லது ஊஞ்சலிலோ வெள்ளைக் கதருடை தரித்த ஒருவரைக் காணலாம். சுமார் ஐந்தடி உயரம்; சிறிது பருமனை தேகம்; சிவப்பு நிறம்; உருண்டை முகம்; வழுக்கைத் தலை-இவர்தான் ராய. சொ.

காரைக்குடியில் பிறந்த ராய. சொ. பாலக்காட்டிலே திண்ணைப் பள்ளிக்கூடத்தில் படித்தார். பாலக்காட்டில் ராய. சொ. வின் தந்தையாருக்கு ஒரு லேவாதேவிக் கடை இருந்தது. எனவே, எட்டு முதல் ஒன்பது வயது வரையில், ராய. சொ.

பியாப்பத்தில் சிறுவயதில் ராய. சொ.

பாலக்காட்டில் தங்க நேர்ந்தது. காரைக்குடியில் சுப்பையா வாத்தியாரிடம் மூன்று வருஷங்கள் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் படித்தார். பன்னிரண்டரை வயதில் பர்மா சென்றார். பர்மாவில் பியாப்பம் என்ற ஊரில், மூன்றே கால் வருஷம், செட்டியார் கடை ஒன்றில் வேலை பார்த்து விட்டுத் தாய்நாடு திரும்பினர். தமது 18-ஆவது வயது முதல் 20-ஆவது வயது வரையில், காரைக்குடியில் ஸ்ரீ சிதம்பர ஐயரிடம் தமிழ்க் கல்வி பயின்றார். ராய. சொ. தமிழில் பற்றுக் கொள்வதற்கு முக்கிய காரணமா யிருந்தவர், ராய. சொ. வுடன் பின்னளில் பல வருஷங்கள் பத்திரிகைப் போர் நடத்திய 'குமரன்' ஆசிரியர் ஸ்ரீ முருகப்பா அவர்களாவர்.

காரைக்குடியில் 1917 - ஆம் வருஷம் இந்து மதாபிமான சங்கமும், 1918-ஆம் வருஷம் தன வைசிய ஊழியர் சங்கமும் தோன்றின. இந்தச் சங்கங்களைத் தோற்றுவிப்பதில் ராய. சொ. முக்கியமான பங்கெடுத்துக் கொண்டார். சமூகச் சீர்திருத்தம், பெண் விற்பனை ஒழித்தல், ஆடம்பர வீண் செலவைக் குறைத்தல், அயல் நாடுகளுக்குத் தங்கள் மனைவிமார்களைக் கூட்டிச் செல்லுதல், பெண் கல்வி அபிவிருத்தி ஆகிய துறைகளில் தன வைசிய ஊழியர் சங்கம் சிறந்த தொண்டாற்றியது. 1920-ஆம் வருஷம் 'தனவைசிய ஊழியன்' என்ற பத்திரிகை ஆரம்பமாயிற்று. இந்தப் பத்திரிகையின் இரண்டாவது வருஷ ஆரம்பத்திலிருந்து ராய. சொ. இதன் ஆசிரியராய் இருந்தார். சில வருஷங்களுக்குப்பின், இந்தப் பத்திரிகை 'ஊழியன்' என்ற பெயருடன் வெளியாயிற்று. அரசியல் காரணமாக, இந்தப் பத்திரிகை இரு முறை நிறுத்தப்பட்டது.



ராய. சொ.

தமிழ்நாட்டில் பத்திரிகையுலகில் பிரகாசிக்கும் வ. ரா., தி. ஜ. ர., காவி, புதுமைப் பித்தன், சிவம் முதலியோர் ஒரு காலத்தில் 'ஊழியன்' உதவி யாசிரியர்களாய் இருந்தார்கள். 'ஆனந்த விகடன்' ஆசிரியரும் ஜெமினி ஸ்டுடியோவின் சொந்தக்காரருமான எஸ். எஸ். வாசன், 'ஊழியன்' பத்திரிகையின் சென்னை விளம்பர ஏஜண்டாக இருந்தார்.

1932-ஆம் வருஷம் ராய. சொ. சட்ட மறுப்பில் சேர்ந்து ஒரு வருஷத் தண்டனை யடைந்தார்.

நாட்டுக்கோட்டை நகரத்தார் வகுப்பில் அரசியல் காரணமாக முதன் முதல் சிறை சென்றவர் ராய. சொ. தான்; 1934 முதல் 1938 வரையில், ஊழியனேச் சென்னையிலிருந்து சித்திர வாரப் பத்திரிகையாக நடத்தினர். வழ வழா என்ற சமாசாரமே இவருக்குப் பிடிக்காது. விளக்கமாகவும், ஆணித்தரமாகவும், அச்சமின்றியும் பத்திரிகைகளில் எழுதுவார். இவர் ஒரு நூலாசிரியரும்கூட. 'பெண் விலேக் கண்டனச் செய்யுட்கள்', 'காதற் கடிதங்கள்' 'காந்தி பிள்ளைத்தமிழ்' 'காந்தி இருபா', 'காந்தி பதினெண்பா', 'புதுமைப் பாக்கள்', 'தாலாட்டும் கும்மியும்' 'இன்பம் எது?' முதலிய புத்தகங்கள் எழுதியிருக்கிறர்.

வ. வே. சு. ஐயர், கவியரசர் பாரதியார், வ. உ. சிதம்பரம் பிள்ளை, சுப்ரமண்ய சிவா முதலியவர்களுடன் நேரில் பழகி யிருக்கிறர். ராய. சொ. மாசற்ற தேச பக்தர். தேச விடுதலேக்குத் தடையாக இருக்கும் எதையும் தகர்த்தெறிய அஞ்சமாட்டார். மௌலான மகம்மதலி தலேமை வகித்த காக்கிடைாக் காங்கிரஸுக்கும், மகாத்மா தலேமை வகித்த பெல்காம் காங்கிரஸுக்கும், பாபு ராஜேந்திரப் பிரசாத் தலேமை வகித்த பம்பாய்க் காங்கிரஸுக்கும் இவர் பிரதிநிதியாகச் சென்றிருக்கிறர். தம் மனைவி உமையாள் ஆச்சியுடன் பர்மா, மலேயா, சிலோன், சயாம், சுமத்ரா, இந்தோ-சீன முதலிய நாடுகளில் சுற்றுப் பிரயாணம் செய்திருக்கிறர்.

குழந்தை அறிந்தால்!

தாம் பூர்த்தி செய்த சினிமாப்படமொன்றை உலகப் பிரசித்தி பெற்ற ஸாமுவேல் கோல்டுவின் போட்டுப் பார்த்தார். இடையிலே திடீரென்று "நிறுத்து! நிறுத்து! இதென்ன இது? எனக் கொன்றும் புரியவே யில்லேயே!" என்று கத்தினர். பக்கத்திலிருந்த அவருடைய மகன், "ஒரு குழந்தைக்குக்கூட இந்தப் படம் புரியுமே, அப்பா" என்று கூறினர். பிரசித்தி பெற்ற கோல்டுவின், மகனை நோக்கி, "சரிதான்; குழந்தைகளுக்குப் படம் பிடிக்க நாம் என்று முதல் தொடங்கி யிருக்கிறேம்?" என்று சீறினர்!

1938 முதல் 1941 வரையில் காரைக்குடி நகரசபைத் தலேவராய் இருந்தார். தமிழ்நாடு காங்கிரஸ் காரியக் கமிட்டி அங்கத்தினராகவும், காரைக்குடி ஜில்லாக் காங்கிரஸ் கமிட்டித் தலேவராகவும் பல வருஷங்கள் இருந்திருக்கிறர்.

ராய. சொ. நல்ல ரசிகர். சினேகத்துக்குப் பெரிதும் பாத்திரமானவர். சிறந்த மதி நுட்பமுடையவர். ஆழ்ந்து யோசியாமல் பேசமாட்டார். தாம் கூறுவதைப் பிறர் சரிவர உணராமல் பேசினல், இவருக்குக் கோபம் வந்துவிடும். 'உமக்கும் அறிவுக்கும் சம்பந்தமே யில்லே' என்று கூறும்பொழுது, இவருடைய கோபம் உச்ச நிலேயை அடைந்துவிட்டது என்பது நிச்சயம். இவரைக் கர்வம் பிடித்தவர் என்று சிலர் கூறுவார்கள். உலகத்தில் யாருக்குத்தான் கர்வமில்லே?

தமிழ் தவிரப் பிறமொழி யொன்றும் ராய. சொ. வுக்குத் தெரியாது. ஆங்கிலத்தில் மட்டும் திறமை யிருந்திருந்தால், இவருடைய பேரும் புகழும் இன்னும் அதிகமாகப் பிரகாசித்திருக்கும். ராய. சொ. எதனையும் லேசில் விட்டுக் கொடுக்கமாட்டார். பிடிவாதமும் கோபமும் இவரிடத்தில் அதிகம். இவை இரண்டில் எது மிக அதிகம் என்று கூறுவது கடினம்.

தமிழ்நாட்டில் பரவி வரும் மறுமலர்ச்சி இயக்கத்தைப் பற்றி இவருடைய அபிப்பிராயத்தைக் கேட்டேன். அதற்கு இவர், "மறுமலர்ச்சி அவசியம். ஆனால், மறுமலர்ச்சி என்ற பெயரால் கீழ்த்தரமான நடை பரவி வருவது தமிழ் மொழியின் உயர்வையும் இனிமையையும் தற்கொலை செய்வதாகும்" என்று கூறினர்.

அவசியமான பிற மொழிச் சொற்களைத் தமிழில் சேர்த்துக் கொள்வதில் இவருக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால், பழைய தமிழ்ச் சொற்களைக் கொலை செய்வதை இவர் விரும்பவில்லை. தற்பொழுதுள்ள பெரும்பாலான தமிழ்ப் பத்திரிகைகளுக்கும் தமிழ் மொழிக்கும் சம்பந்தமேயில்லை என்பதுதான் இவரது கருத்து! பழைய தமிழ் இலக்கியங்களை, வெளியிடுவோர் கருத்துக் கேற்ப மாற்றி வெளியிடுவதை இவர் ஆதரிக்கவில்லை.

ராய. சொ. அரசியல் வாழ்விலிருந்து, இப்பொழுது விலகியிருக்கிறர். "எதிர் காலத்தில் என்ன செய்யப் போகிறீர்கள்?" என்று கேட்டபொழுது, "தமிழ் இலக்கியப் பொக்கிஷத்தில் புதைந்து கிடக்கும் உயர்ந்த பொருள்களை வெளியிற் கொணர்ந்து தமிழ் மக்களுக்குப் பயன் படுத்த வேண்டுமென்பது எனது விருப்பம்" என்றூர்.

ராய. சொ. வுக்கு மிகவும் விருப்பமானவை இரண்டு. அவை இலக்கியமும் சீட்டாட்டமும்.

★

எம்மதமும் புனிதமே

அக்பர் மகா சக்கரவர்த்தி, தம் தாயிடம் மிகுந்த பக்தி யுடையவர். அவள் என்ன சொன்னலும் தட்டாமல் செய்வார். ஆக்ராவுக்கும் லாகூருக்குமிடையே ஒரு சமயம் ஓர் ஆற்றைக் கடக்கும்போது, தம் தாயின் பல்லக்கைத் தாமும் தம் சிறந்த உத்தியோகஸ்தர்களுமாகத் தோளிலே சுமந்தார்.

இப்பேர்ப்பட்ட அக்பர் ஒரே ஒரு முறை, தம் அருமைத் தாயின் சொல்லைத் தட்டிவிட்டார். எது விஷயமாக?

போர்ச்சுகீஸியர், ஒரு முஸ்லீம் கப்பலை ஒரு சமயம் பிடித்துவிட்டார்கள். கப்பலில் அகப்பட்ட திருக்குர்ரானை விஷமமாய் ஒரு நாயின் கழுத்தில் கட்டி, ஓர்முஜ் நகரத் தெருக்களிலே விட்டு அடித்துத் துரத்தினர்கள். இதற்குப் பழிக்குப் பழியாக, கிருஸ்தவரின் வேதப் புத்தகமான பைபிளை ஒரு கழுதையின் கழுத்தில் கட்டியடிக்க வேண்டுமென்று அக்பரின் தாய் சொன்னள்.

"அக்கிரமத்துக்கு அக்கிரமத்தால் பதில் சொல்லுவது ஓர் அரசனுக்கு அழகல்ல. எந்த மதத்தைத் தூஷித்தாலும், அது கடவுள் தூஷணையே யாகும். நிரபராதியான ஒரு புத்தகத்தின் மீது நான் வஞ்சம் தீர்க்கமாட்டேன்" என்று சொல்லி, தாயின் கட்டளையை அக்பர் மறுத்துவிட்டார்.

அழகுணர்ச்சி, கலையுணர்ச்சி இரண்டையும் சங்கிலே கண்டவர் தமிழர். ஒரு தாலாட்டிலே சங்கு என்ன உணர்ச்சியைக் கிளறுகிறது!

சங்குப் பாலாடை

மு. அருணாசலம்

பொன்னுக்கும் வெள்ளிக்கும் இக்காலத்திலுள்ள மதிப்பு, சொல்லவே முடியாது. உலகத்திலுள்ள பொன்னெல்லாந் திரண்டு, அமெரிக்கா, பிரான்ஸ், இங்கிலாந்து போன்ற சில நாடுகளுக்குள்ளே போய் முடங்கி விட்டது. மற்ற நாடுகளுக்கு எவ்வளவோ தொந்தரவு; இது காரணமாகப் பொருமையும் கோபமும் எவ்வளவோ. போர் மூளுவதற்குக் கேட்பானேன்!

இந்தப் பொன்னும் வெள்ளியுமே, ஏழை, பணக்காரன் என்ற வேறுபாட்டை எந்நேரமும் நினைவூட்டக் காரணமா யிருப்பவை. எளிய நிலையிலுள்ள மக்கள் நன்ருக உழைத்து அதனல் வரும் பயனைப் பெற்று ஓரளவுக்கு அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ்க்கை நடத்துகிருர்கள். இவர்களுக்கும் செல்வருக்கும் ஒரு வேற்றுமை வேண்டுமே! அந்த வேற்றுமையைக் கற்பிக்க வல்லதா யிருக்கிறது, பொன். பணக்காரர்களுக்கு, அங்கமெங்கும் பொன் காய்த்துத் தொங்குகிறதென்று சொல்லும்படி பொன்னபரணங்களை அணிந்து கொள்ள ஆசைதான். காப்பு, கொலுசு, காசுமாலை, சங்கிலி, மோதிரம் என்றெல்லாம் எத்தனையோ நகைகள் அவர்களின் உடலிலே ஏறி, அவர்களது செல்வத்தின் சின்னமாகக் காட்சியளிக்கின்றன.

ஆயினும், கலையுலகத்திலே, பொன்னுக்கு இத்தகைய தனிச் சிறப்பெதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. தமிழ்நாட்டுக் கோயில்களிலுள்ள சிற்பங்கள் யாவும் தமிழரின் கலைத் திறமைக்குப் புகழ்பெற்றவை; உலகெங்குமே புகழ் பெற்றவை. இச் சிற்பங்கள், அற்பமும் விலை மதிப்பே யில்லாத கருங்கல்லில் தான் அமைக்கப் பட்டுள்ளன. சிற்பத்தின் அருமைப்பாடு அமைந்த காரணத்தால், மதிப்பே கூறமுடியாத அளவுக்கு அவை உயர்ந்துவிட்டன.

மேலும், கோயிலிலுள்ள தெய்வங்களின் திருவுருவங்கள் யாவும் செம்பினலும் வெண்கலத்தாலுமே செய்யப் பெற்றிருக்கின்றன. சிதம்பரத்திலுள்ள நடராஜப் பெருமானின் திருவுருவம் மட்டும் ஏதோ அபூர்வமாகப்

பொன்னுலியன்றதா யிருக்க லாம். ஆனால், பொதுவாக, சிற்பத் திறன் அமையும்படி செய்யப் பெற்றுள்ள பிற எல்லாச் சிலை களுமே விலைமதிப்பில் குறைவான செம்பு வெண்கலமாகிய உலோ கங்களால் அமைக்கப் பெற்றுள் ளனவே யன்றி, மதிப்புயர்ந்த வெள்ளி பொன் முதலிய உலோ கங்களாலல்ல. பண்டைக்காலத் தில் மட்டுமல்லாமல் இன்றும் இது உண்மை.

மக்கட் கூட்டமும் பெருகி, வாழ்க்கைப் போராட்டமும் மிக்க கொடுமையாகி விட்ட இக் காலத்திலே, அந்தந்த நாட்டு மக்கள், தாம் தாம் மேலோங்க வேண்டுமென்று எண்ணிய கார ணத்தால், பொன் முதலான அபூர்வ உலோகங்களுக்கு, இல் லாத ஒரு பெரு மதிப்பு ஏற்பட்டு விட்டது. இந்த இன்றைய நிலையே எக்காலத்தும் வழங்கி வந்ததில்லை. மக்கள் மக்களாகவே வாழ்ந்த பழங்காலமு மிருந்தது. தமிழ் நாட்டிலே உணவுக்கும் உடைக்கும் எவ்விதக் கவலையு மின்றி மக்கள் வாழ்ந்தார்கள். வாழ்க்கையைச் செம்மையுறச் செய்ய வல்ல கலையிலும் சமயத் திலும் அவர்களது மனம் ஈடுபட் டிருந்தது. பொன்னையே தெய்வ மாகக் கருதி ஆடவர் பெண்டிர் அனைவரும் எல்லா அலங்காரங் களையும் பொன்னுலேயே செய்து கொள்ளும் மன நிலை அப்போது ஏற்படவில்லை; புறத்திலும் அகத் திலும் — உடலிலும் உள்ளத் திலும் — அழகையே முதன்மை யாக நாடி வந்த காலம், அக் காலம்.

அழகுணர்ச்சியையும் கலை யுணர்ச்சியையும் நினைவூட்டும் சின்னமாகப் பண்டைக் காலந் தொட்டு இருந்து வரும் அரிய பொருள் சங்கு. கடலிலிருந்து கிடைத்த வெண் சங்கானது மன துக்கு மிக்க உவகை யளிக்கவல்ல பொருளா யிருந்தது. அதன் தூய வெண்மை நிறத்திலும் அதன் ஒளியிலும் நம் மக்கள் பெரிதும் ஈடுபட்டார்கள். சங் கையே தமது ஆயுதமாகத் திரு மால் கையில் ஏந்தி யிருக்கிறார் என்ற கற்பனை யெல்லாம் தோன்றி, மக்களுக்குச் சங்கை யொட்டிய அனுபவத்தையும் அழகுணர்ச்சியையும் ஈடுபாட் டையும் பலவகையாகப் பெருக்கி வந்திருக்கிறது.

சங்கினிடமாக எழுந்த ஈடு பாடானது எத்தனையோ வகை யில் சங்கைப் பயன் படுத்திக் கொள்ளச் செய்தது. சங்கைச் சுத்தம் செய்து, பூண் முதலியன கட்டி அழகு படுத்தி, அதை இன்றியமையாததொரு வாத்திய மாகக் கொண்டார்கள். வட்ட வட்டமாக அறுத்து, போர் முர சம் முதலியவற்றுக்கு அலங்கார மாகவும் ஓசையைப் பெருக்குவ தற்காகவும் அவற்றோடு சேர்த் துக் கொண்டார்கள். பித்தளை யாலும் வெண்கலத்தாலும் இயன்ற வட்டங்களையும் வளையங் களையும் கஞ்சிரா போன்ற இசைக் கருவியில் ஓசைக்காகக் கோப்பது இன்றும் உண்டல் லவா?

இவை போக, சங்கை வளைய மாக அறுத்து ஆபரணமாக அணிகிற வழக்கமு மிருந்தது.

காதிலணியும் தோடும் சங்கினுல் செய்து கொண்டார்கள். விரலி லணிகிற மோதிரமும் சங்காலே; முன் கையிலணியும் வளையலும் சங்காலே; இப்படி எத்தனையோ வகையிலே மக்களை அலங்கரிக்கச் சங்கு உதவியது. சங்கறுப்பதே பெரிய தொழிலாகவும் வளர்ந் தது. புகார் நகரென்னும் காவி ரிப்பூம்பட்டினத்தில் சங்கறுக் கும் தொழில் ஓங்கி யிருந்தது. சங்கைச் சுத்தம் பண்ணி அறுத்து வளையல் செய்வோர் வாழ்ந்த வீதி என்ற அகன்றதொரு வீதியும் பழங் காலத்திலே அந்நகரில் இருந்ததாம் :

அணிவளை போழுநர்
அகன்பெரு வீதியும்

என்பது சிலப்பதிகாரம். பொன் னுக்குப் பெரு மதிப்பேற்பட் டுள்ள இக் காலத்திலுங்கூட, பொன்நகை செய்யும் தட்டார் வாழும் வீதியென ஒரு முழு வீதி எந்த நகரிலும் இல்லை. எனவே, அக் காலத்தில் சங்கறுப்போர் வீதி என வொன்று இருந்த தானுல், சங்குவளைத் தொழில் எவ்வளவு மிகுதியாக நடை பெற்ற தென்று தெரிகிற தல்லவா ?

சங்காபரணம் செய்வது இக் காலத்திலும் சிற்சில இடங்க ளில் வழக்கத்திலிருந்து வருகிறது. புனிதமான கடல் நீராட வரு வோரை யெண்ணி, சங்கு மோதி ரம் செய்து விற்பதை இராமேசு வரத்தில் இன்றும் காணலாம். வளையல் செய்யும் தொழில் வங் காளத்தில் இன்றும் சிறந்தமுறை யிலே நடைபெறுகிறதாம். நுட்ப மான சிறு சங்குகளுக்குத் தங்கப் பூண் கட்டி, அவற்றைத் தங்கச் சங்கிலியால் மாலையாகத் தொடுத்து அணிகிற வழக்க மொன்று சமீப காலத்தில் தோன் றிற்று. பெரிய சங்கை வளையாக அறுத்தபின், அதை இழைத்து ஒழுங்குபடுத்தி, மேற் புறத்தில் சிறு குழிவுகள் செய்து, அவற் றில் பொன்னையும் மணியையும் இரத்தினங்களையும் அழுத்தி, பல வித அரிய சித்திர வேலைப்பாடு களைச் செய்வதுமுண்டு. பொன் நகைக்குக் கல்லிழைப்பது போலவே சங்கு நகைக்கும் கல் லிழைப்பதானுல், சங்குக்கு என்ன மதிப்பிருந்த தென்பதை உணரலாம்.

கலைச் சின்னங்களுள் ஒன்ருன சங்கையும் சங்கு வளையையும் இலக்கியத்தில் போற்றி யிருப்ப தைக் குறித்துத் தனியாகவே விரிந்த ஆராய்ச்சி செய்யலாம். அது ஒருபுறமிருக்க, வாய்மொழி யாக வழங்கும் சாமானியமான தொரு தாலாட்டுப் பாடலின் மூலமாக, சங்கை யொட்டி யெழுந்த கலையுணர்ச்சி எத் தன்மையது என்று இங்கே பார்க்கலாம்.

தொட்டிலிலே குழந்தை படுத் திருக்கிறது. அதை உறங்கச் செய்வதற்காகத் தாயானவள் அருகிலே சென்று தொட்டிலை ஆட்டி வருகிருள். ஆட்டும் போது, மெல்லிய குரலிலே பாடு கிருள். பாடுகிற தாலாட்டுப் பாடலிலே, எத்தனையோ செய்தி கள் தொடர்பாக வருகின்றன. தாயின் உள்ளத்திலே எவ் வளவோ ஆழ்ந்த அனுபவமும் உணர்ச்சிப் பெருக்கும் வேகமும்

உண்டு. இந்த ஆழ்ந்த வாழ்க்கை யனுபவம் காரணமாகவே, தாலாட்டுப் பாடல் பிறக்கிறது.

குழந்தைவரம் வேண்டித் தெய்வத்தை வழிபட்டதும் நோன்பிருந்ததும் தீர்த்த யாத்திரை செய்ததும் ஒரு காலம். அதை யெல்லாம் பாட்டிலே சொல்லி யாயிற்று. இப்போது அருமை யாகக் குழந்தை பிறந்திருக்கிறது. குழந்தைக்குச் செய்யவேண்டிய எத்தனையோ காரியங்கள்— குளிப்பாட்டுதல், நாவழித்தல், மையிடுதல், பொட்டிடுதல் முதலிய யாவும் பாட்டிலே சொல்லி யும் ஆயிற்று. இனி அதற்குப் பால் புகட்டும் செய்தியைச் சொல்லிப் பாடுகிறுள்.

பாலைக் காய்ச்சி, ஆற்றியும் ஆயிற்று. பாலடை வேண்டி யிருக்கிறது. பழங் காலத்திலே தமிழ் மக்கள் சங்குப் பாலடையைத்தான் உபயோகித்து வந்தார்கள். வெண்கலத்தையோ வெள்ளியையோ பொன்னையோ இதற்கு உபயோகித்ததில்லை. வெள்ளியும் வெண்கலமும் மிகுதி யாக உபயோகிக்கப்பெறும் இந் நாளிலேகூட, சங்குப் பாலடையை மறந்துவிடவில்லை. குழந்தை பிறந்த புதிதிலே, முதன் முதல் பால் கொடுக்கும்போது மட்டுமாவது சம்பிரதாயமாகச் சங்குப் பாலடையை உபயோகிக் கிறுர்கள்; அல்லது உபயோகிக்கா விட்டாலும்கூட, மற்றப் பாலடையோடு இதையும் துணைக்கு வைத்திருப்பார்கள். வெண்மையான சிறு சங்கைப் பார்க்கும் போது, குழிந்து விரிந்த அதன் தலைப்புறமும், நீண்டு குறுகிய உட் குழிவோடு கூடிய அதன் முனையும் இயல்பாகவே பாலடை போல் அமைந்துள்ளதாகத் தெரிகிறது.

குழந்தைக்குத் தாலாட்டுப் பாடுகிற தாயானவள், சங்குப் பாலடையை மனதில் எண்ணிக் கொண்டு, பொற் பாலடையும் வெள்ளிப் பாலடையும் பால் புகட்டுவதற்கு ஏற்றவை யல்ல வென்று கூறுகிருள். இதற்காக வோர் அருமையான காரணமும் சொல்லுகிருள்:

> கண்ணே! உனக்குப்
> பொற்சங்கால் போட்டினுல்
> புத்தி குறையுமென்று,
> வெள்ளிச்சங்கால் போட்டினுல்
> வித்தை குறையுமென்று—

எண்ணிருராம் குழந்தையின் அம்மான் (அதாவது தாயின் சகோதரர்). ஒரு பெண்ணுக்கு வேண்டிய பாத்திரம் முதலியன யாவும் அப் பெண்ணின் தாய் வீட்டார் தருவது மரபல்லவா? இதை யொட்டி, குழந்தை பிறந்ததற்காக, வேண்டுவன யாவும் செய்கிருர், நல்லம்மான். பாலடை வேண்டி யிருந்தது; இக் காரணங்களைச் சொல்லி, பொன்னும் வெள்ளியும் வேண்டாமென்று அவர் தள்ளிவிட்டாராம். பிறகு என்ன செய்தார்?

> நடுக்கடலில் மூழ்கி
> நாரணனுர் சங்கெடுக்க,—
> திருப்பாற் கடல் மூழ்கித்
> திருமாலின் சங்கெடுக்க,—
> பொருக்கென் றெழுந்து
> புறப்பட்டார், உங்களம்மான்!

சங்குப் பாலடைதான் குழந்தைக்கு ஏற்றது என்றெண்ணி,

சங்கெடுக்கக் கடற்கரைக்குப் போனார். கடலும் வெறுங் கடலல்ல; திருமாலுக்குரிய பாற் கடலைத் தேடிப் புறப்பட்டாராம்.

பால் வேண்டுமென்று அழுகிற குழந்தைக்குப் பால் புகட்டுவதற்காக, நல்லம்மான் பாலடை தருகிறார் என்பதுதான் தாலாட்டுப் பாட்டின் பாவம். பொற் சங்கால் புகட்டினால் புத்தி குறையுமா அல்லது, வெள்ளிப் பாலடையால் புகட்டினால் வித்தைதான் குறைந்து விடுமா என்றெல்லாம் இங்கே வாதம் செய்வதற்கு இடமில்லை. பசித்தழும் குழந்தையானது, திருப்பாற் கடலிலிருந்து அம்மான் பாலடை கொண்டு வரும் வரையில் அழுகையை நிறுத்திப் பசியைப் பொறுத்துக் கொண்டிருக்குமா என்றெல்லாம் கேட்கக் கூடாது. இவ்வளவும் கற்பனைதான். ஆனாலும், எவ்வளவோ உண்மையான அழகான கற்பனை; உணர்ச்சி நிறைந்த கற்பனை.

குழந்தைக்காகச் சங்குப் பாலடை தேடப்போன அம்மான், கடலெல்லாம் கடந்து, திருப்பாற் கடலுக்கே போய் விட்டார். சங்கினிடத்திலே நம்மவர்களுக்குள்ள பழமையான ஈடுபாட்டையும், நம் நாகரிகத்திலும் கலையிலும் சங்குக்கு நாம் அளித்துள்ள உயர்ந்த நிலையையும் எண்ணிப் பார்க்கும்போது, அவர் திருப்பாற் கடலுக்கு மட்டுமல்ல, அதற்கப்பாலும் கூடப் போகிறார் என்றே சொல்லத் தோன்றும்.

★

மருந்துச் சீட்டில் வைக்கோல்!

சென்ற நூற்றாண்டினிறுதியில் வங்காளத்தில் காளி சரண் லாஹிரி என்ற பிரபல டாக்டர் ஒருவர் இருந்தார். அவர் கருணாமூர்த்தி, தீனதயாளு. ஏழைகளுக்கெல்லாம் இலவசமாய் வைத்தியம் செய்வார்.

ஒரு முறை ஓர் ஏழைக்கு அவர் எழுதிக்கொடுத்த இலவச மருந்துச் சீட்டு, அவருடைய மருந்துச் சாலைக்கு வந்து சேர்ந்தது. மருந்து கொடுக்கும் கம்பவுண்டர் அதைப் படித்துப் பார்த்தபோது, அதில் மருந்துகளின் கீழே "ஒரு வண்டி வைக்கோல்" என்று குறிக்கப்பட்டிருந்தது. "இது என்ன புதுத் தினுசு மருந்தா யிருக்கிறதே!" என்று அவருக்கு ஆச்சரியமுண்டாயிற்று. அவரும் பிற ஊழியர்களும் இதைப்பற்றி ஒருவருக்கொருவர் சொல்லி அதிசயமடைந்து, ஒன்றும் புரியாமல், டாக்டர் லாஹிரியிடமே சென்று, "இதென்ன இப்படி எழுதியிருக்கிறீர்களே! ஞாபகப் பிசகாகவா?" என்று கேட்டார்கள்.

"ஒரு பிசகுமில்லை. உண்மையாகவே, மருந்தோடு ஒரு வண்டி வைக்கோலும் அவனுக்கு அளிக்கவேண்டும் என்றுதான் நான் எழுதினேன்" என்றார் டாக்டர் லாஹிரி.

அதன் காரணத்தைக் கேட்டபோது அவர் சொன்னதாவது: "அவனது வீட்டுக்கு நான் வைத்தியம் செய்யச் சென்றபோது, அவ் ஏழையின் வீட்டுக் கூரை ஒழுகிக்கொண்டிருக்கக் கண்டேன். மருந்து மட்டில் தின்றால் அவன் பிழைக்கமாட்டான். கூரை ஒழுகிக் குளிரில் விறைக்காமலும் இருந்தால்தான் அவன் பிழைப்பான். அதற்காகத்தான், அவன் வீட்டுக் கூரையை வேய்வதற்கு ஒரு வண்டி வைக்கோலும் அனுப்பவேண்டு மென்று எழுதினேன்."

— ஆசிரியர்: லியோ டால்ஸ்டாய் —

மொழிபெயர்த்தவர்: சுப. நாராயணன்

(முன் தொடர்ச்சி)

இதைப் பார்க்கவே, கொடிக் காவலனுக்குத் தூக்கிவாரிப் போட்டு விட்டது. என்னவோ முணு முணுத்தான். வெட்கம் மேலிட்டு, அப்படியே மரம்போல் நின்றுவிட்டான்.

கூரைமீதிருந்த தலைவனையும் என்னையும் பார்த்ததும், முன்னினும் அதிகமாக முகஞ் சுருங்கி விட்டது. எங்களை நோக்கி விரைந்தான்.

"குழந்தையை அல்லவோ கொல்லப் போனார்களென்று நினைத்துவிட்டேன்" என்று லஜ்ஜையுடன் புன்சிரிப்புச் சிரித்துக்கொண்டு சொன்னான்.

X

தளபதி குதிரைப் படையுடன் முன்னே போய்விட்டான். நான் சேர்ந்துவந்த படை, எல்லாருக்கும் பின்னாலே வந்தது. க்ளப்பவ படையும், ரோசன்கிரான்ஸ் படையும் ஒன்றாய், வந்த வழியே பின்வாங்கின.

புதரை அணுகியதும், படைத் தலைவன் சொன்னபடியே நடந்தது. பாட்டையின் இரு புறமும் தொடர்ச்சியாய் மலைவாசிகள் குதிரையின் மீதும் கால்நடையாயும் கண்ணுக்குத் தென்பட்டுக் கொண்டே இருந்தார்கள். சில இடங்களில் அவர்கள் எங்களுக்கு நிரம்பக் கிட்ட வந்துவிட்டார்கள். ஒருவன் துப்பாக்கியும் கையுமாய் மரத்துக்கு மரம் ஒளிந்து ஓடுவது தெளிவாய்த் தெரிந்தது. படைத் தலைவன் குல்லாயை அகற்றிவிட்டு, பயபக்தியுடன் அப்போது சிலுவைக்குறியிட்டுக் கொண்டான். வயதான சிப்பாய்களில் பலரும் அப்படியே செய்துகொண்டார்கள். அச் சமயம் காட்டில் ஒரு கூக்குரல் கேட்-

டது. குறிப்பாய் ஏதோ உரக்கக் கத்திய சொற்கள் கேட்டன. கொஞ்ச தூரமே சுடும் சிறு துப்பாக்கிகளி லிருந்து குண்டுகள் பறந்தன. எங்கள் ஆட்கள் கூச்சல் போடாமல் பதில் வேட்டு வீசிக்கொண்டே போனார்கள். சிற்சில வேளை யாராவது "எங்கிருந்து சுடுகிறான்?", "அவன் காட்டுக்குள்ளே இருந்து கொண்டு சுடுவதற் கென்ன!", "நாம் பீரங்கியை உபயோகிக்க வேண்டும்!" என்று பலவிதமாய்ச் சொல்வார்கள்.

பீரங்கியைக் கொண்டு சில குண்டுகளை வீசியதும், எதிரி கைவலுக் குறைந்ததாய்த் தோன்றிற்று. ஆனால், மறு நிமிஷம் எதிரியின் ஆர்ப்பாட்டமும், கூச்சலும், வேட்டுக்களும் நாங்கள் முன்னேறிய ஒவ்வோர் அடியிலும் பன் மடங்கு அதிகரித்துவிட்டன.

கிராமத்தை விட்டு நாங்கள் அறுநூறு கஜம் போனதும், எதிரியின் பீரங்கிகள், குண்டுகளை எங்கள் மேலே அள்ளி வீசத் தொடங்கி விட்டன. குண்டுக்கு ஒரு சிப்பாய் இரையானதை நான் கண்ணாலே கண்டேன்... இந்தக் கொடுங் காட்சியை வருணிப்பானேன்! எப்படியாவது இதை மறந்தால் போதும் என்றிருக்கிறது எனக்கு இப்போதுகூட.

ரோசன்கிரான்ஸ் சுட்டுக் கொண்டே இருந்தான். ஒரு நிமிஷம் கூட ஓயவில்லை. வறண்டு கம்மிய குரலில், அவன் ஓயாமல் சிப்பாய்களைப் பார்த்துச் சத்தமிட்ட வண்ணம், படை வரிசையின் ஒரு கோடியிலிருந்து மறு கோடிக்குத் தன் குதிரையை விரட்டிக்கொண்டே இருந்தான். அவனது முகம் அப்போது சற்று வெளுத்திருந்தது. அவனுடைய வீர முகத்துக்கு இது, தனிக் களையாகவே இருந்தது.

அழகுமிக்க கொடிக் காவலனோ இன்பக் கடலில் தத்தளித்தான். அவனுடைய கரிய விழிகளில் துணிவு துள்ளிற்று. உதடுகளில் மந்தகாசமான சிரிப்புடன், இடைக்கொரு தரம் படைத் தலைவனிடம் ஓடிவந்து, காட்டுக் குள்ளே புகுந்து தாக்க அனுமதி கேட்டுத் தொந்திரவு செய்து கொண்டே இருந்தான் அவன்.

"அவர்களை விரட்டி விடலாம், கொஞ்சமும் சந்தேகமில்லை!" என்று நயந்துரைத்தான்.

"தேவையில்லை. நாம் பின் வாங்க வேண்டும்" என்று தலைவன் சுருக்கமாய்ப் பதிலளித்தான்.

காட்டின் விளிம்பிலே படைத் தலைவனுடைய படை, அணி வகுத்து நின்று தரையில் படுத்தபடி எதிரியைச் சுட்டு விரட்டிக் கொண்டிருந்தது. படைத் தலைவன், தன் வெள்ளைக் குதிரையின் கடிவாளத்தைத் தளர்த்தி விட்டுக்கொண்டு பேசாதிருந்தான். அவனிடம் இன்னும் அதே பழைய மேற்சட்டையும், மாசு படிந்த குல்லாயுந்தான். குதிரையின் சேணம் நீளம் போதாததால், அவன் தன் காலை மடித்து வைத்துக் கொண்டிருந்தான். (சிப்பாய்களுக்குத் தங்கள் வேலை இன்னதென்பது நன்றாய்த் தெரி

யும். வேலையை நடத்துவதிலும் குறைவில்லாமல் செய்து முடிப்பார்கள். அதனாலே, இவர்களுக்கு உத்தரவிடவேண்டிய தேவையே இல்லை.) இடைக்கொரு தரம் மட்டும் மேலே தலையை நீட்டி ஆட்களுக்கு உத்தரவிடுவான். படைத் தலைவனைப் பார்த்தால், போர்வீரத்தனம் அவனிடம் அவ்வளவாகத் தோன்ற இடமில்லை. ஆனால், அவனது தோற்றத்திலே எளிமையும், உண்மையும் இருந்தன. இவை என்னை அப்படியே அவன் வசம் இழுத்துச் சென்றன.

"இதுதான் உண்மையான வீரம்" என்ற எண்ணம், என்னை அறியாமலேயே, என் மனத்திலெழுந்தது.

நான் அவனை எப்பொழுதும் பார்க்கும்போது இருந்தபடியே தான் இப்பொழுதும் இருந்தான். அதே அமைந்த நடை; அதே சாந்தமான குரல்; களங்கமற்ற அவனுடைய சாதாரண முகத்தில் அதே மாசற்ற தோற்றம். வழக்கத்துக்கு மாருக இன்று அவனுடைய கண்கள் குறுகுறுப்போடு பார்த்ததிலிருந்து மட்டுமே தனக்கு முன்னுள்ள வேலையில் அவன் அமைதியாய்க் கருத்துச் செலுத்தி யிருந்தான் என்பது தெரிந்தது. "எப்பொழுதும் போலவே"—என்று எளிதாய்ச் சொல்லிவிடலாம். ஆனால், இதர மனிதர்களில் எவ்வளவு நுணுக்கமான மாற்றங்கள் ஏற்பட்டு விடுகின்றன? ஒருவன் எப்பொழுதும் இருப்பதைவிட அதிக அமைதியோடு இருக்கப் பார்க்கிருன். இன்னொருவன் நிரம்பக் கடுமையாய் இருக்க முயலுகிருன். மற்றுமொருவன் முகமலர்ச்சியை உண்டாக்கிக் கொள்ளுகிருன். ஆனால், படைத் தலைவனது முகத்தைப் பார்த்தால், ஒருவன் இன்னொருவனைப்போல நடிப்பது எதற்காக என்பதையே புரிந்து கொள்ளாதவன் போலத் தோன்றும். "முன் படைஞன் சாகட்டும். நான் பின்வாங்குவதில்லை" என்று வாட்டர்லூப் போரில் சொன்ன வீரனைப் போன்ற பிரெஞ்சு வீரர்களும் இதரர்களும் மெய்யாகவே துணிவுள்ளவர்கள் தான். அவர்களுடைய அருஞ்சொற்கள் நினைவில் பதித்துவைத்துக் கொள்ளத் தக்கவைதான். ஆனால், அவர்களுடைய வீரத்துக்கும், படைத் தலைவனுடைய வீரத்துக்கும் ஒரு வேற்றுமை உண்டு. எந்த நேரத்திலாவது, இந்த வீரத் தலைவனுடைய உள்ளத்தில் அரிய பெரிய கருத்து ஏதேனும் தோன்றி யிருந்தால், அந்தக் கருத்தை இவன் வாய்விட்டுச் சொல்லி யிருக்க மாட்டான் என்று நான் உறுதி கூறுவேன். ஏனெனில், முதலாவது, பெரிய கருத்தை வெளியிட்டால் பெரிய செயல் வீணுகுமென்று அவன் அஞ்சிவிடுவான். இரண்டாவது, பெருஞ் செயலாற்றத் திறம் படைத்தவனுக்குப் பெருஞ் சொல் ஏதும் வேண்டியதில்லை. இதுதான் ரஷ்யர்களுக்குத் தனிச் சிறப்பாக அமைந்துள்ள பெருமிதமான வீரத்தின் இயல்பு என்று எனக்குத் தோன்றுகிறது. அப்படி இருக்க, கந்தல் கந்தலாய்ப் போன, பழைய, உளுத்த பிரஞ்சு வாசகங்களை நம் வாலிப உத்தியோகஸ்தர்களிடையே

கேட்டால், ரஷ்யன் ஒருவனது உள்ளத்திலே ஈட்டிபாய்வதுபோ லிராமல் வேறு எப்படி இருக்க முடியும்? இந்த வாசகங்களைப் புகட்டும் வீரமும் கடந்து ஒழிந்து போன பிரெஞ்சு வீரந்தான்.

திடீரென்று, கொடி காக்கும் அழகன் நின்றுகொண்டிருந்த பக்கத்திலிருந்து "ஹுரே!" என்ற கூக்குரல் எழுந்தது. இது உரக்கவும் இல்லை, ஒன்று சேர்ந்தாற் போலு மில்லை. கூச்சல் கிளம்பிய பக்கம் பார்த்தேன். உழுத நிலத்தின் மேலே சுமார் முப்பது சிப்பாய்கள் கஷ்டத்துடன் ஓடிக் கொண்டிருந்தார்கள். கையிலே துப்பாக்கிகள். முதுகிலே சாமான் மூட்டைகள். தடுமாறி விழுந் தடித்துக் கொண்டே, கூச்சல் போட்டபடி முன்னே சென்றார்கள். இவர்களுக்கு முன்னே வாளை வீசிக்கொண்டு, கொடிக் காவலன் பாய்ந்தோடினான்.

அவர்கள் எல்லோருமே காட்டுக்குள் மறைந்து விட்டார்கள்.

சில நிமிஷம் வரை ஒரே கூக்குரலும், துப்பாக்கி வெடியும் தான். அப்புறம், வெறித்துக் கொண்டு, ஒரு குதிரை காட்டுக்கு வெளியே ஓடிவந்தது. மாண்டவர்களையும், காயமடைந்தவர்களையும் சுமந்து கொண்டு காட்டு விளிம்பில் சிப்பாய்கள் வந்தார்கள். அங்ஙனம் காயமடைந்தவர்களில், அந்தோ! கொடிக்காவலனும் ஒருவன். இரண்டு சிப்பாய்கள் அவனைக் கையைப் பிடித்துத் தூக்கி வந்தார்கள். அவனது முகம் பால்போல வெளுத்து விட்டது. அவனுடைய அழகிய சிறு தலை, எப்படியோ அவனுடைய தோளுக்கிடையே பயங்கரமாய்ச் சாய்ந்து, மார்பின் மேலே கிடந்தது. சற்று முன் இருந்த இராணுவ வீர உரு எங்கே? — அந்தத் தலையின் தோற்ற மெங்கே?

அவனுடைய வெள்ளைக் குடுத்தாவின் மேலே, திறந்த மேற் சட்டைக்குக் கீழே, சிறிய சிவப்புக் கறை ஒன்று தென்பட்டது.

"ஐயோ, என்ன பரிதாபம்!" என்று நான் சொல்லிக் கொண்டே, என்னை யறியாமலே இந்த வருந்தத்தக்க காட்சியிலிருந்து என் கண்களை மறு பக்கமாகத் திருப்பிக் கொண்டேன்.

"நிரம்பப் பரிதாபந்தான்" என்று, என் பக்கத்தில் முகத்தைக் கோணிக்கொண்டு, தன் துப்பாக்கி மீது சாய்ந்து கொண்டிருந்த ஒரு முதிய சிப்பாய் சொன்னான். "அவன் எதற்கும் பயப்படமாட்டான். யாராவது இப்படி இருக்க முடியுமா? இளமையும் அறியாமையும் இன்னும் போகவில்லை—அதனாலேயே இத்தகைய பலி கொடுத்துவிட்டான்" என்று, சிறுவனைக் கூர்ந்து நோக்கிக் கொண்டே, அவன் சொன்னான்.

"அப்படியானால், உனக்குப் பயமுண்டா?" என்று கேட்டேன் நான்.

"நிச்சயமாய்!" என்றான் அவன்.

88832
M211, N36, N43.7

XI

நான்கு சிப்பாய்கள், ஆள் தூக்கும் கட்டிலில் கொடிக்காலனைச் சுமந்துகொண்டு வந்தார்கள், கோட்டையி லிருந்து ஒரு சிப்பாய் இவர்களைத் தொடர்ந்து பின்னே, மெலிந்த குதிரை ஒன்றை நடத்திக்கொண்டு வந்தான். ரண சிகிச்சைக்குரிய கருவிகள் உள்ள இரண்டு பச்சை நிறப் பெட்டிகள், அந்தக் குதிரைமேல் இருந்தன. அனைவரும் மருத்துவனுடைய வரவை எதிர்பார்த்துக் கொண்டு நின்றார்கள். உத்தியோகஸ்தர்கள் கட்டிலருகே போய்க் காயமடைந்த பையனுக்கு உத்சாகமூட்ட முயன்றார்கள்.

"சகோதரனே! மீண்டும் நீ விளையாட்டுக்களில் சேரக் கொஞ்ச காலம் பிடிக்கும்போலிருக்கிறதே" என்று ரோசன் கிரான்ஸ் புன்முறுவலோடு சொன்னான்.

படுக்கையி லிருப்பவனுக்கு இந்தச் சொற்கள் ஆறுதலளிக்குமென்று அவன் நினைத்திருந்தான் போலும். ஆனால், சிறுவனுடைய கவலையான முகத் தோற்றத்திலிருந்து அவ்வித ஆறுதல் ஏற்படவில்லையென்று தெரிந்தது.

படைத் தலைவனும் பையனிடம் சென்றான். காயம்பட்டவனைக் கூர்ந்து பார்த்தான். எதையும் கண்டு அசையாத அவன் மனமும் அனுதாபத்துடன் கரைந்ததாக, அவனது முகம் காட்டிற்று.

"தம்பி! இது கடவுள் விருப்பம்போலும்" என்று, நான் எதிர்பாராதபடி அன்பு கனிந்த தழுதழுத்த குரலில் படைத் தலைவன் சொன்னான்.

பையன் திரும்பிப் பார்த்தான். வெளுத்த முகத்தில் கவலைபடிந்த முறுவல் தோன்றிற்று.

"ஆம், உங்கள் சொல்லைத் தட்டிச் சென்றேன்."

"அப்படியல்ல. இது கடவுள் சம்மதம், தம்பி" என்று மறுபடியும் படைத் தலைவன் சொன்னான்.

மருத்துவன் வந்துசேர்ந்தான். கட்டுப்போடத் துணி எடுத்தான். காயத்தைக் கீறிப் பார்க்கவேண்டிய கருவிகளை எடுத்தான். சட்டைக் கைகளை மேலே சுருட்டிவிட்டுக்கொண்டான். சிரித்த முகத்தோடு, பையனருகிலே போனான்.

"நல்ல இடத்திலே தமர்ப் போட்டுவிட்டார்கள் போலக் காண்கிறதே" என்று அலக்ஷியமான குரலில் கேலி செய்துகொண்டே, "இப்படிக் காட்டு; பார்க்கலாம்" என்றான்.

பையன் அப்படியே செய்தான். தமாஷ்கார மருத்துவனை அவன் பார்த்த பார்வையில் ஆச்சரியமும், கடிந்து கொள்ளும் குறிப்பும் இருந்தன. மருத்துவன் இவற்றைக் கவனிக்கவில்லை. கருவிகளைக்கொண்டு புண்ணைச் சோதனையிடத் தொடங்கினான் அவன். பையன் பொறுமையிழந்துபோய், பலமாய் முனகிக் கொண்டு, மருத்துவனுடைய கையை அப்பால் தள்ளி விட்டான்.

"என்னைச் சும்மா விடு! எப்படியும் நான் சாகிறவன்தானே" என்று அவன் சொன்னது எங்கள் காதில் சரியாய்க்கூடக் கேட்கவில்லை. அவ்வளவு மெதுவாய்ப் பேசினான்.

இந்தச் சொற்களோடு மல்லாந்து சாய்ந்துவிட்டான். ஐந்து நிமிஷம் பொறுத்து அவனைச் சூழ்ந்து நின்றவர்களில் ஒருவனிடம் விசாரித்தேன். "அவனுடைய உயிர் பிரிகிறது" என்று பதில் வந்தது.

XII

படை அணிவகுத்துக் கோட்டைக்குத் திரும்பியபோது, வெகு நேரமாய்விட்டது. பாடிக்கொண்டே சென்றோம். பனி மலைச் சிகரங்களுக்கிடையே சூரியன் மறைந்துவிட்டான். வானம் தெளிவா யிருந்தது. இதன்மீது கண்ணாடிபோலப் படர்ந்து தொங்கிய மேகங்களின் மேலே, மறையும் பகலவன் தன் செங்கதிர்களை உதிர்த்துக்கொண்டிருந்தான். பனி மலைகளைச் சிவப்பு நிற மூடுபனி மறைத்துத் திரையிடத் தொடங்கிற்று. பளிங்கு போன்ற சந்திரன் உதயமாகி நெடுநேரமாயிற்று; வானத்தின் கரு நீலத்திடையே வெண்மையாய்த் திகழத் தொடங்குகிறது. புற்களின் பச்சை நிறமும், மரங்களின் பச்சை நிறமும் இருண்டு கறுத்து வருகின்றன. மரமும், புல்லும் ஒரே பனித் துளியில் நனைந்துபோய்விட்டன.

வளம் நிறைந்த கழனியினூடே ஒரே கறுப்பு நிறமாய்த் துருப்புகள் நகர்ந்தன. எங்கணும் இசைக் கருவிகள் இசை மீட்டின. பாடகர்கள் பாடிக் களித்தனர். ஆறாவது அணியைச் சேர்ந்த பாடகன் உச்சத் தொண்டையில் பாடிக்கொண்டிருக்கிறான். மாலை நேரத் தெளிந்த தூய காற்று இவனுடைய இனிப்பான பாட்டின் இன்னிசையை நாலாபக்கமும் சுமந்து செல்கிறது.—[முற்றும்.]

★

புனாவின் சாப விமோசனம்

1630-ஆம் ஷாஜி என்ற மன்னனை, பீஜப்பூர் அரசனின் சேனைகள் துரத்திவந்தன. அப்போது, பீஜப்பூர் அரசனின் சேனாதிபதிகளில் ஒருவனான முரார் ஜகதேவோ, புனா நகரைச் சுட்டெரித்தான். அதன் கோட்டைச் சுவர்களை இடித்துத் தள்ளினான். ஒரு கழுதையைக் கலப்பையில் கட்டி, கோட்டை அஸ்திவாரத்தை உழுதான். சாபம் உடைய நகரம் என்பதற்கு அடையாளமாக, இரும்பு முளை ஒன்றைப் புனாவில் அடித்துவிட்டுச் சென்றான்.

ஆனால், 1635-ஆம் வருஷ வாக்கில், தாதாஜி ஜகதேவோ என்பவரின் கீழ், புனாநகர் மீண்டும் செழித்தோங்கியது. சாபங் களைவதற்காக, மேலே சொன்ன இரும்பு முளையை, தாதாஜி பிடுங்கி எறிந்தார். நிலத்தை ஒரு தங்கக் கலப்பையால் உழுதார். ஷாஜியின் மனைவி ஜீஜாபாயும் மகன் சிவாஜியும் புனாவில் வசிக்கச் செய்தார். ஒரு கணபதி கோயிலை, புனாவில் ஜீஜாபாய் கட்டினாள். அந்தக் கோயில் இன்றளவும் மிகப் பிரபலமாய் இருந்து வருகிறது.

பல காலம் தேடி ஒரு முகம் கண்டான் ஓவியன். வரைந்தான். பல வருஷம் தேடிப் பின்னே கண்ட முகமோ—

துரோகியின் முகம்

'காசி'

பலநூற்றுண்டுகளுக்கு முன்னே, ஸிஸிலித் தீவின் நகர் ஒன்றின் கிறிஸ்தவ தேவாலயச் சுவரில், கிறிஸ்து பெருமானின் சரித்திரத்தைச் சித்திரமாய்த் தீட்டும் வேலையை, ஓர் ஓவிய நிபுணர் மேற்கொண்டார். அதைப்பற்றிய இந்த அதிசயமான கதையை, யாரோ ஒரு கிழப் பாதிரியார், பான்னீ சாம்பர்லீன் என்பவருக்குச் சொல்வியுள்ளார்.

அந்தத் தேவாலயத்தின் சித்திரக்காரர் பல வருஷங்கள் மிக ஊக்கமாய் உழைத்து, ஏறக்குறையப் படத்தைப் பூர்த்தி செய்துவிட்டார். ஆனால், இரண்டே இரண்டு முகங்கள்தான், அவருக்குச் சரியாய் வரைய வரவில்லை. ஒன்று, குழந்தை கிறிஸ்துவின் முகம்; மற்றது, துரோகி யூதாஸ் காரியேத்தின் முகம்.

ஓவியர் ஒருநாள் நகரின் புராதனமான ஒரு பகுதியில் உலவிக்கொண்டிருந்த போது, அங்கே தெருவில் சில குழந்தைகள் விளையாடிக்கொண்டிருந்ததைக் கண்டார். அவர்களில் பனிரண்டு வயதுள்ள ஒரு குழந்தையின் பால்வடியும் முகம், ஓவியரின் உள்ளத்தைக் கிளறியது. அது ஒரு தேவதூதனின் முகம்போல் இருந்தது—சற்று அழுக்கான முகந்தான்; ஆயினும், அவர் வேண்டிய முகம் அதுவே.

அந்தக் குழந்தையைத் தம் வீட்டுக்கு இட்டுச் சென்றார். அவனது முகத்தையே மாதிரியாய் வைத்துக்கொண்டு, நாள் கணக்காய் மிகப் பொறுமையாய் ஊக்கத்தோடு உழைத்து, குழந்தை ஏசுவின் முகத்தை ஓவியர் வரைந்து முடித்தார். ஆனால், துரோகி யூதாஸ் காரியேத்தின் முகத்தை எழுத, இன்னும் மாதிரி கிடைக்கவில்லை. தம் படங்களுக்குள்ளேயே தலைசிறந்த இணையற்ற இவ் உன்னத சித்திரம் எங்கே பூர்த்தியாகாமல் போய் விடுமோ என்ற கவலையுடன், வருஷக் கணக்காய், அந்தத் துரோகியின் முகத்துக்கு ஒரு மாதிரியைத் தேடினார். அகப்படவில்லை.

பூர்த்தியாகாத இந்தச் சித்திரத்தின் கதை நாடெங்கும் பரவியது. தங்கள் தங்களது முகம் தீமையான தோற்றம் உடையது என்று எண்ணிய பல மனிதர்கள், வெகு

தூரத்தி லிருந்ததெல்லாம் வந்து, தங்கள் முகத்தை மாதிரியாய்க் கொள்ளுமாறு, ஓவியரை வேண்டிக் கொண்டார்கள். ஒரு முகமும் அவருக்குத் திருப்தி தரவில்லை. வாழ்க்கையில் ஈடுபட்டுக் காமக் குரோதங்களால் கண் பஞ்சடைந்த பேராசை முகமன்றோ கலைஞருக்கு வேண்டும்? அது அவருக்கு அகப்படவில்லை.

பின் ஒருநாள் மாலையில், ஒரு மதுக் கடையருகே ஓவியர் உட்கார்ந்திருந்தார். அச்சமயம் கந்தலுடுத்து அலங்கோலமான ஒரு மனிதன் தத்தித் தள்ளாடி அங்கே ஓடிவந்து, "கள்! கள்! கள் ஊற்றுங்கள்" என்று கத்திக் கொண்டே, இவரது காலடியில் விழுந்தான்.

ஓவியர் அவனைத் தூக்கி நிறுத்தி, அவனது முகத்தைப் பார்த்த போது, திடுக்கிட்டுவிட்டார். மனிதன் புரியக் கூடிய சகல பாவங்களின் குறிகளையும் அந்த முகம் தாங்கி நின்றது.

பரபரப்படைந்த ஓவியர், அந்தப் பாவியைத் தூக்கிப் பிடித்துக் கைலாகு கொடுத்து, "வா என்னுடன். கள்ளும் சோறும் துணியும் தருகிறேன்" என்று சொல்லி, அழைத்துச் சென்றார்.

இதோ கடைசியாக, துரோகி யூதாஸின் முகத்துக்கு மாதிரி, ஓவியருக்குக் கிடைத்துவிட்டது. தம் தலைசிறந்த படத்தைப் பூர்த்தி செய்ய, அவசர அவசரமாய் அவர் உழைத்தார்.

அஞ்ஞான இருள்

இராத்திரியில் ஆகாயத்தில் அநேக நக்ஷத்திரங்களைக் காண்கிறாய். ஆனால், சூர்யோதய மானதும், அவை தென்படுவதில்லை; ஆதலால், பகற்போதில் ஆகாயத்தில் நக்ஷத்திரங்களே இல்லை யென்று சொல்லலாமா? மனிதனே, உனது அஞ்ஞான காலத்தில் நீ ஈசுவரனைக் காண முடியாததனால், ஈசுவரனே இல்லை யென்று சாதிக்காதே!

—ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர்.

படத்தை ஓவியர் எழுத எழுத, அந்த மனிதனிடம் ஒரு மாறுதல் ஏற்பட்டுக் கொண்டிருந்தது. வெளிறிட்ட அந்தச் சோகை உடம்பிலே, ஒரு விறு விறுப்புக் காணப்பட்டது. அந்த ரத்த விழிகள் பயங்கரமாய்த் தன் சித்திரத்தைப் பார்த்துப் பதறின.

அவனது இந்தக் கிளர்ச்சியைக் கண்ட ஓவியர், ஒருநாள், "என் மகனே! உன்னை வருத்துவது என்ன? சொல். நான் உதவி புரிகிறேன்" என்றார்.

அந்த மனிதன் தனது முகத்தைத் தன் கைகளால் புதைத்துக் கொண்டு, விம்மி விம்மி அழலானான். பிறகு வெகுநேரம் கழித்துக் கண்களை நிமிர்த்தி, முதிய ஓவியரது முகத்தை நோக்கி, தழு தழுத்த குரலில், "என்னை உங்களுக்கு ஞாபகமில்லையா? பல வருஷங்களுக்கு முன்னே குழந்தை ஏசுவின் முகத்தைச் சித்தரித்தீர்களே; அதற்கு மாதிரியாய் இருந்தது என் முகமே அல்லவா?" என்று கேட்டான்!

★

மூலதனம் !

சண்டையிலும் சமாதானத்திலும் பொருத்தமானவையும் உண்மையானவையும்............

வைரங்களே

உறைவிடம்

ஸுராஜ்மல்ஸ்

நாணயத்திற்கும் நம்பிக்கைக்கும்..........................

சென்ற அரை நூற்றுண்டுகளாக நிரந்தர நன்மதிப்புப் பெற்றுள்ளது.

ஆகையால்

ஸு ராஜ் மல்ஸ்

வைரங்களே !!!

313, எஸ்பிளனேட், மதராஸ்

SHAKTI—1-2-43

டி-லக்ஸ் டிரேடிங் கம்பெனி

44, அல்லிமால் தெருவு — திருச்சி

தந்தி : "GURLU" பிராஞ்சு : மதராஸ்

★

Dealers in:

ரப்பர் சாமான்கள், குரோம் தோல்கள், கண்ணுடி சாமான்கள், சைக்கிள் ஸ்பேர் பார்ட்ஸ்கள், எலக்டிரிக் சாமான்கள், மற்றப்படி Blades and Toilets, etc.

★

கீழ்க்கண்டவைகளுக்கு சோல் ஏஜண்டுகள் :

WM. S. MERRELL CO.: U. S. A.	மில்க் ஆப் மக்னீஷியா மற்ற சகல விதமான மருந்துகள்.
MIRA CHEMICAL INDUSTRIES: CALCUTTA.	ஸ்னே, சோப், சென்ட், ஹேர் ஆயில் etc.
T. R. S. FORTS PRODUCTS: INDIA.	பைப்பிங்ஸ், லித்தோ இங்ஸ், விளக்கு நாடா முதலியவை.
MARTHIS' FRUIT PRODUCTS: INDIA.	எலுமிச்சம் பழ ரசம், எஸ்ஸன்ஸ் மற்றவை.
OAKEH LABORATORIES CALCUTTA.	டாய்லட் வகையராக்கள்.

Distributors for:

HIND CYCLES LIMITED, BOMBAY.

மண்ணும் மனிதனும் சேர்ந்து, பல ஜீவனுள்ள சிருஷ்டிகளைச் செய்ய வேண்டும். அதற்கு வேண்டுவதுதான் ராஜ்யம்.

ராஜ்யத்தின் லட்சணம்

வெ. சாமிநாத சர்மா

சாதாரணமாக நாம் சொல்வழக்கில் ராஜ்யம் என்று எதைக் குறிப்பிட்டுப் பேசுகிறோமோ அதனுடைய அர்த்தம் என்ன? பூர்வீகத்தில் ரோமராஜ்யம் செல்வாக்குடனிருந்தது என்கிறோம், அல்லது சோழராஜ்யம் செழுமையுற்றிருந்தது என்கிறோம். இவைகளில் வருகிற ராஜ்யம் என்ற வார்த்தையின் தாத்பரியம் என்ன? ராஜனை யுடையது ராஜ்யம் என்று சொல்லிவிடலாம். இது சுலபமான அர்த்தம்-ஆனால் சரியான அர்த்தமல்ல; முழு அர்த்தமுமல்ல. மேலெழுந்தவாரியாகப் பார்க்கிறபோது, ராஜ்யம் என்ற சொல், விஸ்தீரணமான ஒரு நிலப்பரப்பைக்குறிப்பதாகவே தோன்றும். அப்படியுமில்லை.

ராஜ்யம் என்று சொன்னால், அதற்கு முக்கியமாக மூன்று லட்சணங்கள் இருக்கவேண்டும். சில உபலட்சணங்களையும் சேர்த்து, நான்கு என்றும் ஆறு என்றும் பலவிதமாக அரசியல் பண்டிதர்கள் கூறுவார்கள். அவைகளைப் பற்றி இங்கே நமக்குக் கவலையில்லை. முக்கியமான லட்சணங்கள் மூன்றுதான். இந்த மூன்று லட்சணங்களோடு கூடியதே ராஜ்யம். இவற்றில் ஏதேனும் ஒன்று குறைந்தால்கூட, அது ராஜ்யமாகாது.

மூன்று லட்சணங்கள் யாவை?

1. நாடு; 2. மக்கள்; 3. அரசு. இந்த ஒவ்வொன்றையும் பற்றிச் சுருக்கமாக ஆராய்வோம்.

நாடு: காயும் கனியுமாகக் குலுங்குகிற ஒரு விருட்சம் எப்படி வேரில்லாமல் இருக்க முடியாதோ அப்படியே ஒரு நிலப்பரப்பு இல்லாமல் ராஜ்யம் இருக்கமுடியாது. பூப்பிரதேசம் என்கிற அஸ்திவாரத்தின் மீதுதான் ராஜ்யம் என்கிற கட்டிடம் அமைகிறது. ஒரு ராஜ்யத்தின் பெயர்கூட, அந்த ராஜ்யம் எந்தப் பிரதேசத்தில் இருக்கிறதோ அந்தப் பிரதேசத்தின் பெயரிலிருந்தே பிறக்கிறது. உதாரணமாக, பிரான்ஸ் தேசத்தில் பிரெஞ்சு ராஜ்யம் இருக்கிறது. ஸ்விட்ஜர்லாந்து தேசத்தில் ஸ்விஸ் ராஜ்யம் இருக்கிறது. இப்படி நாட்டின் பெயரைக் கொண்டே ராஜ்யம் அழைக்கப்படுகிறது.

நிலையாக ஓரிடத்தில் வசிக்காமல் நாடோடிகளாக அநேக ஜாதியார் உலகத்தின் பல பாகங்களிலும் இப்பொழுதும் திரிகிறார்கள். இவர்கள், தங்களுக்கு விருப்பமான இடத்தில் விருப்பமுள்ள வரையில் ஒன்றாகச் சேர்ந்து வசிக்கிறார்கள். எல்லோரையும் போல் இவர்களிடத்தில் நேசப்பான்மை முதலியன வெல்லாம் இருக்கின்றன. தங்கள் மனோவிகாசப்படி இவர்கள் வாழ்க்கையை இன்பமாகவே கழிக்கிறார்கள். இவர்களுக்குள் ஒரு கட்டுப்பாடு இருக்கிறது. இவை யெல்லாம் இருந்தாலும், இவர்களை ஒரு ராஜ்யத்தினர் என்று சொல்கிறோமா? இல்லை. ஏனென்றால், இவர்கள் ஸ்திரமான ஓரிடத்தில் வாசம் செய்கிறார்க ளில்லை. அப்படி வாசம் செய்து அந்த இடத்தைச் செழிப்பான நிலைமைக்குக் கொண்டு வர வேண்டுமென்ற ஆவலும் இவர்களுக்குக் கிடையாது.

யூதர்கள், எத்தனையோ இடையூறுகளைச் சமாளித்துக்கொண்டு இன்றைய அறிவு உலகத்திலாகட்டும் பொருளாதார உலகத்திலாகட்டும் தலை சிறந்து விளங்குகிறார்கள். இருந்தாலும், இவர்களுக்கென்று சொந்தமாக ஒரு நாடு கிடையாது. இதனால் இவர்களுக்கு ராஜ்யமுமில்லை. மற்ற ராஜ்ய அமைப்புகளோடுதான் இவர்கள் தங்களை ஐக்கியப்படுத்திக் கொள்ளவேண்டி யிருக்கிறது. சென்ற ஐரோப்பிய மகா யுத்தத்தின் போது இவர்களுடைய உதவியைப் பெறுவதற்காக, அப்பொழுதைய பிரிட்டிஷ் அரசாங்கத்தார் பாலஸ்தீனத்தில் யூதராஜ்யம் ஒன்றை வகுத்துக் கொடுத்தார்கள். ஆனால், இதனால் யூதர்களுக்கு அதிகமான கஷ்டநஷ்டங்கள்தான் உண்டாயின; ஒரு ராஜ்ய அந்தஸ்து ஏற்படவில்லை.

பூமியிலிருந்து அநேகம் பொருள்கள் உற்பத்தியாகின்றன. மனிதன் கூடப் பூமியிலிருந்து உற்பத்தியானவன்தான். மண்ணின் திரட்சிதான் மனித வடிவம் என்பது புராதன மதத்தினர் பலருடைய நம்பிக்கை. படைக்கும் கடவுளாகிய ப்ரஹ்மனை, குயவன் என்றே ஹிந்து மதத்தினர் அழைக்கிறார்கள். இந்தச் சிருஷ்டிக்கிற சக்தியோடுகூட, தன்னால் உற்பத்தி செய்யப்படுகிற பொருள்களைக் கொண்டு மனிதனைக் காப்பாற்றுகிற சுபாவமும் பூமிக்கு உண்டு. இதனாலேயே மண்ணையும் பெண்ணையும் ஒன்றாகக் கூறிப் போந்தனர் பெரியோர். பூமாதேவி, நிலமடந்தை என்பன போன்ற சொற்றொடர்கள், இந்தக் கருத்தையே குறிக்கின்றன. எனவே, மனிதனுடைய நல்வாழ்வுக்கு, பூமி, இன்றியமையாத சாதனமாயிருக்கிறது. இந்தச் சாதனமின்றி, அவன் எந்தச் சாதகத்தையும் அடையமுடியாது. அதாவது, பூமிதான் மனிதனுக்கு மூலதனம். இதனைச் சம்பாதிப்பதற்காகவும் ஏற்கனவே யுள்ளதை விஸ்தரித்துக்கொண்டு செல்வதற்காகவும் அவன் உழைக்கிறான்; மற்றவர்களோடு போராடுகிறான். தன்னுடைய வயிற்றுப் பசியைத் தீர்த்துக் கொள்ள

வேண்டு மென்ற முயற்சியிலே அவன் ஈடுபட்டு, அவன் கடைசியில் நிலப்பசிக்கு இரையாகி விடுகிறான். தனி மனிதனுக்கு எப்படி ஆகாரம் வேண்டுவது இயற்கையானதோ அப்படிப் போலவே, அந்தத் தனி மனிதர்கள் பலரடங்கிய ஒரு சமுதாயத்திற்கு நிலம் வேண்டுவது இயற்கையானது. சுவரை வைத்துக்கொண்டுதான் சித்திரம் எழுதமுடியும் என்கிற மாதிரி, அந்தச் சமுதாயத்தினர் ஒரு நிலப்பரப்பின் மீதுதான் தங்களுடைய ராஜ்யத்தை ஸ்தாபித்துக்கொள்ள முடியும்.

நாடு என்றால், பூமியின் மேல் மட்டத்தில் இருக்கிற ஆறு, மலை, காடு முதலியவற்றை மட்டும் குறிக்காது. பூமியின் கீழ்மட்டத்திலுள்ள நீரோட்டங்கள், உலோகப் பொருள்கள் முதலியவற்றையும், மேலேயுள்ள ஆகாயப் பரப்பையும் சேர்த்தே குறிக்கும். நிலப்பரப்புக்கு எந்த ஓர் எல்லையுண்டோ அந்த எல்லைக்குட்பட்ட ஆகாயத்தில் சஞ்சரிக்கும் உரிமையும், அந்த எல்லைக்குள்ளிருக்கிற பூமியின் கீழும் மேலும் உற்பத்தியாகிற பொருள்களை அநுபவிக்கிற உரிமையும், தேவையான பொருள்களை உற்பத்தி செய்துகொள்கிற உரிமையும் சேர்ந்தே நாடு என்ற பெயரைப் பெறுகிறது.

விஸ்தீரணமான நிலப்பரப்பு இருக்கிறது. அதில் ஆறுகளும் மலைகளும் காடுகளும் இருக்கின்றன. ஆனால், அந்த நிலத்திலிருந்து ஒரு பொருளும் உற்பத்தியாவதில்லை. அதாவது, வெறும் கரம்பு நிலமாயிருக்கிறது. அதனை நாடு என்று சொல்லலாமா? கூடாது. அதில் ராஜ்யத்தை ஸ்தாபிக்க முடியுமா? முடியாது. எந்தப் பிரதேசத்தில் சாரமுள்ள மண் இருக்கிறதோ அதாவது எந்த மண்ணுக்குப் பொருள்களை உற்பத்தி செய்யக் கூடிய சக்தி இருக்கிறதோ அந்த மண்ணைக் கொண்ட பிரதேசத்துக்குத்தான் நிலம் என்று பெயர். அப்படிப்பட்ட நிலத்தை யுடையதே நாடு. பொருள்கள் விளைவதற்கு முக்கிய துணைக்கருவிகளா யிருப்பன நீர்ப்பாசன வசதி; சமசீதோஷ்ண ஸ்திதி. இந்த இரண்டும் இல்லாத பிரதேசத்தில் ஒரு ராஜ்யத்தை ஸ்தாபிக்க முடியாது. உதாரணமாக, ஸஹாரா பாலைவனம் இருக்கிறது. அது விசாலமான நிலப்பரப்புடையதுதான். அங்கே மக்களும், அதிகமாக வசிக்காவிட்டாலும் ஏதோ அற்ப சொற்பமான பேராகவாவது வசிக்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கையை நாடோடி வாழ்க்கை யென்றும் சொல்ல முடியாது. இருந்தாலும், அவர்களால் ஒரு ராஜ்யத்தை ஸ்தாபிக்க முடியவில்லை. காரணம், பொருள்கள் விளையக்கூடிய பாசன வசதிகள் இல்லாத பிரதேசத்தில் அவர்கள் வசிப்பதுதான். அடுத்தபடி எஸ்கிமோ ஜாதியாரை எடுத்துக் கொள்வோம். அவர்கள் ஸ்திர வாசிகள். நில விஸ்தீரணத்துக்குக் குறைவில்லை. என்றாலும், பொருள்கள் விளையக்கூடிய மாதிரியான சீதோஷ்ண ஸ்திதி அவர்களுக்கு இல்லையாதலினால், அவர்களால் ஒரு ராஜ்யத்தை ஸ்தாபித்துக்கொள்ள முடியவில்லை.

உலகத்தின் சரித்திரத்தை நாம் ஆதிகாலத்திலிருந்து ஆராய்ந்து பார்த்தோமானால், எந்த இடங்களில் வற்றாத நதிகள் ஓடுகின்றனவோ, குறையாத நீர் நிலைகள் இருக்கின்றனவோ, அதிகமான உஷ்ணமும் அதிகமான குளிரும் இல்லையோ அந்த இடங்களில் தான் மக்கள் குடியேறியிருக்கிறார்கள், ராஜ்யங்கள் ஸ்தாபிக்கப் பட்டிருக்கின்றன என்பது தெரியவரும். காரணம், இந்த இடங்களில் செழுமையான மண்ணும் சமமான சீதோஷ்ண ஸ்திதியும் இருந்ததுதான்.

மண்ணினுடைய செழுமையை ஒட்டியே ராஜ்யத்தினுடைய பெருமையும் இருக்கிறது. அப்படிச் செழுமை குன்றியிருந்தால், அதனை வளம்படுத்த வேண்டியது ராஜ்யத்தி லுள்ளவர்களுடைய கடமை. "உழவினார் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம் விட்டேமென்பார்க்கு நிலை" என்பது குறள். இதனாலேயே விவசாயத்துக்கு முக்கியத்துவம் கொடுத்துப் பேசினர் முன்னோர். விவசாயத்தைச் செழிப்புறச் செய்து அதனைக் காப்பாற்ற வேண்டுவது அரசனுடைய கடமை என்று சாணக்கியன், தனது அர்த்த சாஸ்திரத்தில் வலியுறுத்திக் கூறுகிறான்.

சுருக்கமாகச் சொல்லுமிடத்து, பொருள் விளைவுக்குத் தகுதியுடையது எதுவோ அதுவே நாடு.

மக்கள்: மக்களில்லாமல் நாடு இல்லை. ஒரு ராஜ்யத்தின் பிராண வாயு மாதிரி ஜனம். "மனிதர்கள்தான் ராஜ்யமே தவிர, அவர்களில்லாத சுவர்களோ, கப்பல்களோ ராஜ்யமாகா" என்பது ஒரு கிரேக்க அறிஞனுடைய வாக்கு. ஒரு பிரதேசம் அகல நீளத்தில் மிகப் பெரியதாயிருக்கலாம். இயற்கை வளங்கள் நிறைந்ததாயிருக்கலாம். செழுமையான மண்ணையுடையதாயிருக்கலாம். ஆயினும், அங்கே ஜனங்கள் வசிக்காவிட்டால், என்ன பிரயோஜனம்? மணல் நிறைந்த பாலைவனத்தையோ, மரங்களடர்ந்த காட்டையோ, நிலம் அல்லது நாடு என்று நாம் அழைப்பதில்லை. மனிதனுடைய தொடர்பு எந்த மண்ணுக்கு இல்லையோ அது நிலமாகாது; நாடுமாகாது. தொடர்பு எப்படி உண்டாகிறது? உழைப்பினாலும் வாசத்தினாலும்.

ஒரு நிலப்பரப்பின் மீது மக்கள், ஆங்காங்கு, கிராமத்தினராகவோ, நகரத்தினராகவோ சேர்ந்து வாழாமல் தனித்தனியாகச் சிதறிக் கிடப்பார்களானால், அவர்களைக் கொண்டும் ஒரு ராஜ்யம் அமையாது. ஏனென்றால், சேர்ந்து வாழ்கிறபோதுதான், மக்களுக்குள்ளே நேசப்பான்மை உண்டாகிறது; அன்பு அரும்புகிறது; அனைவருடையவும் ஒத்துழைப்பின் மீது தான், அவரவரும் தங்களுடைய சொந்த சுதந்திரத்தைக் காப்பாற்றிக் கொள்ள முடியும் என்ற எண்ணம் வலுக்கிறது. இப்படிப்பட்ட எண்ண வளர்ச்சியின் மீது தான், ஒரு ராஜ்ய வளர்ச்சி இருக்கிறது.

சரி; இங்ஙனம் மக்கள், தொகுதி தொகுதியாக, கும்பல்

கும்பலாக வசித்துக்கொண்டிருந்தால் மட்டும் போதுமா? போதாது. அவர்களை ஒரு ஜனம் என்றோ, சமுதாயம் என்றோ சொல்ல முடியுமா? முடியாது. அவர்கள் சேர்ந்து வாழ்வதற்கு அடிப்படையாக ஏதோ ஒருவிதமான ஒற்றுமை இருக்கவேண்டும். அந்த ஒற்றுமை, உணர்ச்சி அளவிலாவது இருக்கலாம்; கொள்கையளவிலாவது இருக்கலாம்; புறவாழ்க்கையைப் பொறுத்த அளவிலாவது இருக்கலாம். மதம், பாஷை, கலாசாரம், பரம்பரை, பழக்க வழக்கம், நாகரிகம் முதலிய பல அமிசங்களில் ஏதோ ஓர் அமிசத்திலாவது எல்லோரும் ஒன்றுபட்ட மனப்பான்மையுடையவராக இருக்கவேண்டும். இந்த ஒற்றுமை, எந்த மனிதக் கூட்டத்தினிடத்தில் இல்லையோ, அந்தக் கூட்டத்தை, ஜனம் என்றோ, சமுதாயம் என்றோ சொல்ல முடியாது.

இங்ஙனம் ஒரு கூட்டத்தினருக்கு ஜனம் அல்லது சமுதாயம் என்கிற அந்தஸ்து வந்துவிட்டால் மட்டும் போதுமா? அவர்களைக் கொண்டு ஒரு ராஜ்யம் ஸ்தாபிதமாகிவிடுமா? ஆகாது. ஏனென்றால், அவர்களைக் கட்டியாளக்கூடிய ஓர் அரசு இல்லை. அதாவது, அவர்களுடைய புறவாழ்க்கையை ஒழுங்கு படுத்திக் கொண்டு செல்கிற ஒரு சக்தி இல்லை. இதற்கு, மறுபடியும் யூதர்களையே உதாரணமாக எடுத்துக் காட்ட வேண்டியிருக்கிறது. அவர்களுக்குள்ளே மதவொற்றுமை இருக்கிறது; ஒரே விதமான பரம்பரையிலிருந்து வந்தவர்களாகவும், ஒரே விதமான கலாசாரத்தை அநுஷ்டிக்கிறவர்களாகவும் இருக்கிறார்கள். இருந்தாலும், அவர்களைக் கட்டியணைத்துக் கொண்டு செல்லக்கூடிய, அவர்களிடத்திலே யுள்ள ஒற்றுமையான அமிசங்களை ஒன்று திரட்டி உருவகப்படுத்திக் காட்டக்கூடிய ஓர் அரசு அவர்களுக்கு இல்லை. அந்த அரசசக்தி அவர்களிடத்திலே இல்லாத ஒரு காரணத்தினால், அவர்களுடைய மற்றச் சக்திகளெல்லாம் சக்தி குன்றிக் கிடக்கின்றன.

ஒரே பிரதேசத்தில் ஒரே ஜாதியார் வசித்துக் கொண்டிருந்தபோதிலும், அவர்கள் பலவிதமான அரசியல் ஆதிக்கங்களுக்கு ஆட்பட்டுக் கிடப்பார்களானால், அவர்கள் வசிக்கிற அந்தப் பிரதேசம் ஒரு ராஜ்யமாகாது; அவர்களுக்கு ராஜ்ய அந்தஸ்தும் கிடையாது. உதாரணமாக, இந்தியாவிலே, சென்னை மாகாணம் அராபியர்களுடைய ஆட்சிக்கும், பம்பாய் மாகாணம் பாரசீகர்களுடைய ஆட்சிக்கும், ஐக்கிய மாகாணம் கிரேக்கர்களுடைய ஆட்சிக்கும் இங்ஙனம் பலவித ஆதிக்கங்களுக்கு உட்பட்டிருக்குமானால், இந்தியாவை ஒரு ராஜ்யம் என்று சொல்ல முடியுமா? முடியாது. எனவே, ஒற்றுமையான பல அமிசங்களையுடைய ஒரு மக்கட் தொகுதியிலிருந்துதான் ராஜ்யம் பிறக்கிறது.

அரசு: அரசு வேறே; அரசாங்கம் வேறே. அரசு என்பது சக்தி; அரசாங்கம் என்பது ஸ்தா

பனம். அரசு என்கிற சூட்சும சக்தியானது, அரசாங்கம் என்கிற ஸ்தூல வடிவத்தின் மூலமாகவே வேலை செய்கிறது. அரசு + அங்கம் = அரசாங்கம்.

ஆள்வது அரசு. ஆளுஞ் செயலுக்கே ஆட்சி என்று பெயர். யாரோ ஒரு சிலரேனும் இருந்தால்தானே அவர்களை ஆளமுடியும்? அந்த ஒரு சிலர்தான் பிரஜைகள்; ஆளப்படுவோர். இந்த ஆளப்படுவோருக்கும் அரசுக்கும் உள்ள தொடர்பை நிர்ணயப் படுத்தியும் ஒழுங்கு படுத்தியும், கொண்டு செலுத்துவது தான் அரசாங்கம். இதனால், ஒரு ராஜ்ய ஸ்தாபிதத்துக்கு அரசாங்கமும் இன்றியமையாத ஓர் அமிசமாகி விடுகிறது. இதற்காக, இதனை ராஜ்யத்தின் லட்சணங்களில் ஒன்றாக எடுத்துக் கூறுவர் அரசியல் பண்டிதர்கள். எந்தப் பிரதேசத்தில் ஆள்கிற அரசும், ஆளப்படுகிற குடியும் இல்லையோ அங்கே ராஜ்யம் என்பது ஏற்படுவதற்கு எவ்வித முகாந்திரமும் கிடையாது. இதைச் சிறிது முரட்டுத்தனமான பாஷையில் சொல்வோமானால், எந்த இடத்தில் அதிகாரம் செய்வோரும், அந்த அதிகாரத்துக்குக் கட்டுப்பட்டு நடப்போரும் இல்லையோ, எந்த இடத்தில் மேற்படி இரு சார்பினரும் பரஸ்பர நம்பிக்கையுடனும் ஒற்றுமையுடனும் வாழவில்லையோ, அந்த இடத்தில் ராஜ்யம் அமையாது.

அரச சக்தி யென்று சொன்னால், அது ஜன சக்தியின் தொகுப்பே யாகும். அரசு செலுத்துகிற அதிகாரம் ஜனங்களிடமிருந்தே பிறக்கிறது. இந்த அதிகாரம், ஜனங்களுக்காக ஜன சம்மதத்தின் பேரில் பிரயோகிக்கப்பட வேண்டும். அப்படிப் பிரயோகிக்கப்படாத காலத்தில் தான், அரசுக்கும் குடிகளுக்கும் பிணக்கு ஏற்பட்டு, புரட்சிகள் முதலியன உண்டாகின்றன. தவிர, ஜனங்களிடமிருந்து பிறக்கிற அரசே நியாயமான அரசு. ஜனங்களுக்காக அரசே தவிர, அரசுக்காக ஜனங்களில்லை.

எந்தவிதமான அந்நிய ஆதிக்கத்துக்கும் கட்டுப்படாமல் சுயமாக இயங்குவதுதான் அரசு. மற்றவை யெல்லாம் அரசுகளாகா; அந்நிய ஆதிக்கத்தின் அதிகார யந்திரங்களென்றுதான் சொல்ல வேண்டும். சுயமாக இயங்குகிற அரசுதான், தன் பிரஜைகளுக்கு நியாயத்தையும் நன்மையையும் செய்ய முடியும். அப்படிச் செய்தால்தான் அதற்கு நன்மை. ஏனென்றால், ஜனங்களுடைய நன்மையைத் தவிர்த்து அதற்கென்று தனியானதொரு நன்மையில்லை. அதுமட்டுமின்றி, ஜனங்களுக்கு நன்மை செய்யாவிட்டால், செய்யாதிருந்தால், அதற்குத் தீமை; அதனுடைய நிலையே குலைந்துபோய் விடலாம்.

எந்த நாட்டில் சுய அரசு இயங்குகிறதோ அந்த நாட்டிலுள்ள பிரஜைகள்தான் சுய முயற்சியுடையவர்களா யிருப்பார்கள்; அவர்களுடைய உடல் திண்மை யுடையதாகவும், உள்ளம் உறுதியுடையதாகவும் இருக்கும்; அவர்களுடைய சொந்த வாழ்வு, சமுதாய வாழ்விலின்று வேறுபட்டதா யிராது;

அவர்களுக்குச் சிருஷ்டி சக்தி அதிகமா யிருக்கும்; அதாவது காவியம், ஓவியம் முதலிய நுட்ப மான துறைகளில் அவர்கள் புதிய புதிய சிருஷ்டிகளைச் செய்து கொண்டே யிருப்பார்கள்; வெளி நாட்டாரின் மத்தியில் அவர்களுக்கு எப்பொழுதும் ஒரு தனி மதிப்பு இருந்து கொண் டிருக்கும்.

சுய ஆட்சி நிலவுகிற நாட்டி லேயே அமைதி நிலவும். அமைதி என்பதற்கு, அர்த்த சாஸ்திர பண்டிதனாகிய சாணக் கியன் அழகான ஒரு வியாக் கியானம் கூறுகிறான்: "தொந் திரவுகள் இல்லாமலும், ஜனங் கள் தங்கள் உழைப்பின் பயனை நுகர்ந்து கொண்டும் இருக்கிற நிலைமை எதுவோ அதுவே அமைதி"-இதைவிடத் தெளிவான அர்த்தம், அமைதி என்ற வார்த் தைக்கு வேறு யாரும் சொல்ல முடியாது. இந்த வியாக்கியா னத்திலிருந்து, உழைப்பினின்று தான் அமைதி பிறக்கிறதென்ற உண்மையை நாம் தெரிந்து கொள்கிறோம்: உடலைக் கொண் டும், உள்ளத்தினாலும் சுயமாக உழைப்பதற்குக்கூட, சுய அரசு தேவையா யிருக்கிற தென்னும் கருத்தும், நமது இருதயத்தில் லேசாகப் பதிந்து விடுகிறது.

இங்ஙனம், நாடு, மக்கள், அரசு ஆகிய மூன்று அடிப்படையான லட்சணங்களோடு கூடிய ஒரு ராஜ்யத்தில் வாழ வேண்டு மென்று பிரதியொரு மனிதனும் இச்சைப்படுவது இயற்கை. அந்த இச்சை எந்த மனிதனிடத்தில் இல்லையோ அவன் இரண்டு கால் வடிவம்; மனிதனல்ல.

எந்த மண்ணிலே ஒரு மனிதன் பிறந்தானோ அந்த மண்ணோடு அவனுடைய அந்தராத்மா கட் டுப்பட் டிருக்கிறது. அவன், எத் தகைய நீசனாயிருந்தாலும், குண மென்னும் குன்றின் அடிவாரத் திலேயே விழுந்து கிடப்பதற்குத் தகுதியுடையவனாக இருந்தாலும், தான் பிறந்த பூமியை மட்டும் மறப்பதே யில்லை. அந்தப் பூமி யோடு அவன் போராடி யிருக்க லாம்; அந்தப் பூமி, அவனை விரட் டியும் வறுமைக்குழியில் இறக்கி யும் இருக்கலாம். அதனால் அவன் மனம் உடைந்தவனாகவும் போய் விடலாம். ஆனாலும், அவனுடைய அந்தராத்மா — உள்மனம் — அந் தப் பூமியோடு கட்டுப்பட்டே

சுய ஆட்சிக்கு வழி

தனிமனிதர்கள் சுயராஜ்யம் பெற்று விட்டால், தேசத்துக்குச் சுயராஜ்யம் தானே வந்துவிடும். உங்கள் உள் ளத்திலே சுய ஆட்சியிருக்கு மானால், உங்களுக்குச் சுய ஆட்சி கிடைத்துவிடும். தனிமனிதர்களின் சுய ஆட்சியிலிருந்தே தேசத்தின் சுய ஆட்சி பிறக்கும். நீங்கள் அக்கினி யிடம் செல்லவேண்டும் என்கிறோம். தலைவர்கள் உங்களைப் பட்டடையில் இருத்திச் சம்மட்டியால் அடித்து, ஒருநாளும் வளையாத எஃகாக்கவேண் டும். நீங்கள் அந்த எஃகு ஆக வேண்டும் என்று நான் விரும்பு கிறேன். ஏனெனில், நாம் மிகப் பெரிய, துணிவுள்ள எதிரியை எதிர்க்க வேண்டியிருக்கிறது.

—மௌலானா முகம்மத் ஆலி.

யிருக்கிறது; அதனைப் பகிரங்கமாகக் கைகூப்பித் தொழாவிட்டாலும், தூற்றுமலும் மறவாமலுமாவது இருக்கிறது. அப்படியே மண்ணும் மனிதனை மறப்பதில்லை. அப்படி மறவாமல் அது — அந்த மண் — அதன் இருதய பொக்கிஷத்தில் தன்னை வைத்துக் காப்பாற்றும் தண்ணருள் அதற்குண்டு என்பதை அவன் — அந்த மனிதன் — தெரிந்து கொள்ளாமலிருக்கலாம். அது அவனுடைய குற்றம்; அவனைப் பெற்றெடுத்த மண்ணின் குற்றமல்ல.

மண்ணும் மனிதனும் ஒன்ருகக் கட்டுப்பட்டு ஜடமாகக் கிடக்கலாமா? அப்படிக் கிடந்தால் மண்ணுக்கும் நஷ்டம்; மனிதனுக்கும் நஷ்டம். அப்படிக் கிடப்பதும் இயற்கைக்கு விரோதம். மண், மனிதனைத் துடிக்கச் செய்ய வேண்டும்; மனிதன், மண்ணைத் துடிக்கச் செய்ய வேண்டும். "செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே" என்று பாரதியார் கூறினரென்ருல், அது, பிரதியொரு மனிதனுக்கும் நியாயமாக இருக்க வேண்டிய ஒரு துடிதுடிப்பையே எடுத்துக் காட்டுகிறது.

எனவே, மண்ணும் மனிதனும் சேர்ந்து அநேக சிருஷ்டிகளை - ஜீவனுள்ள சிருஷ்டிகளை - செய்து கொண்டிருக்க வேண்டுமானல், அதற்கு ராஜ்யமில்லாமல் முடியாது. ஏனென்ருல், ஒரு ராஜ்யத்தில்தான், மனிதன் வேற்றுமையிலே ஒற்றுமையைக் காண முடியும்; பூரண வாழ்க்கையை நோக்கி முன்னேறிச் செல்ல முடியும். அது வாழ்ந்தால் அவன் வாழ்கிருன்; அது இறந்தால் அவனும் இறந்துவிடுகிருன்.

★

சிறுவரின் அஞ்சா நெஞ்சம்

குரு கோவிந்த சிங்கின் படைகள் முகலாயரால் சிதறடிக்கப்பட்டன. குரு கோவிந்தரின் தாய், தன் இரு கடைசிக்குழந்தைகளுடன் ஸிர்ஹிண்டு என்னும் இடத்துக்குத் தப்பி யோடினுள். அவ்விடத்திலிருந்த முஸ்லீம் கவர்னரின் கைகளில் தாயும் குழந்தைகளும் அகப்பட்டுக் கொண்டார்கள்.

ஒருநாள் முஸ்லீம் கவர்னர் தமது தர்பாரில் உட்கார்ந்திருக்கையில் அந்தச் சிறு குழந்தைகளையும் அழைத்து அன்போடு, "பையன்களே! உங்களை நான் விடுதலை செய்தால், நீங்கள் என்ன செய்வீர்கள்?" என்று கேட்டார்.

சிறுவர்கள்: "எங்கள் சீக்கியரைத் திரட்டுவோம்; உங்களுடன் போரிடுவோம்; உங்களைக் கொல்லுவோம்."

முஸ்லீம் கவர்னர்: "நீங்கள் அந்தப் போரிலே தோற்றுவிட்டால், என்ன செய்வீர்கள்?"

சிறுவர்கள்: "மீண்டும் சேனையைத் திரட்டிப் போரிட்டு, ஒன்று உங்களைக் கொல்லுவோம்; அல்லது நாங்கள் சாவோம்."

முஸ்லீம் கவர்னருக்குக் கோபம் பொங்கிவிட்டது. சிறுவர்களை உயிரோடு புதைத்துவிட்டார். தாய் அந்தத் துக்கத்தாலேயே வாடி உயிர்நீத்தாள்.

விலைவாசிகளைப் பற்றி யோசனையா?

சகஜந்தானே!

ஆனால், எல்லாவற்றையும் கணக்கிட்ட பிறகு—
உயர்வையும், அழகையும், நாகரிகத்தையுமே
நீங்கள் நாடுகிறீர்கள்.—

THE FAVOURITE SHOP
(மனதுக்குகந்த கடை)

இவற்றை எப்பொழுதும்
சரசமான விலையில்
உங்கட்குத் தரமுடியும்

71—72
ராட்டன் பஜார்,
சென்னை

எங்கள் காட்சிக் கூடத்தில்

உங்களுக்கு வேண்டிய சேலைகள், ஜாக்கெட் துணிகள், குழந்தை உடுப்புகள், படுக்கை விரிப்புகள், ஹோல்டால்ஸ் முதலியவற்றை வாங்கிக் கொள்ளலாம்.

இன்றே வருக
THE FAVOURITE SHOP

கிஷின் சந்த் செல்லாராம்

உயர்ந்த வைரங்கள்

புதுமாதிரி வைர நகைகளுக்கு
நம்பிக்கையான இடம்

உ. அ. அரு. அருணாசலம்
செட்டியார்

வைர வியாபாரம்

கல்லுக்கட்டி, காரைக்குடி

ஸ்ரீ ராம நிலயம்
டிராவலர்ஸ் ரூம்கள்
102, ராமசாமி நாயக்கர் தெரு,
காரைக்குடி
(காங்கிரஸ் மாளிகைக்கு பக்கம்)

கல்லுக்கட்டிக்கு சமீபத்தில் நல்ல தண்ணீர், சுகாதாரம், பந்தோபஸ்து, கார், வண்டிகள் நிறுத்த பிரத்தியேக இட வசதிகளுடன் ரூம்கள் வாடகைக்குக் கிடைக்கும்.

உ. அ. அரு. அருணாசலம் செட்டியார்,
வைர வியாபாரம், காரைக்குடி.

அரசியல் ஞாபகங்கள்	...	1 0
சிறை அனுபவங்கள்	...	0 12
திருக்கேதார யாத்திரை	...	1 0

விலைகள் மாறுதல் கவனிக்கவும்!

ஒரிஜினல் கல்ச்சர் வைரங்கள்

டிரேட் மார்க்   டிரேட் மார்க்!

தோடு சைஸ் **0–12–0**   பேஸரி சைஸ் **0–10–0**

(REGD. NO. 1983)   "Original" Inventor   [கேட்லாக் இனும்]

M. ராமசாமி செட்டி & கோ.,

ஷராப் வியாபாரம் :: திருச்சினுப்பள்ளி

உங்கள் விளம்பரம்

விளம்பரம் அனுப்பும் அன்பர்கள் தங்கள் விளம்பர விஷயங்களையும், பிளாக்குகளையும் அந்தந்த மாதம் 20-ஆம் தேதிக்குள்ளோ அதற்கு முந்தியோ அனுப்பித் தந்தால் பேருதவியாயிருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேம்.

மானேஜர்,
சக்தி காரியாலயம், காரைக்குடி

'சக்தி' சந்தா விவரம்

வருடச் சந்தா	...	ரூ. 3
தனிப் பிரதி (தபால் மூலம்)		அணு 5
,, (நேரில்)		,, 4

ஆங்கில மாதம் முதல் தேதி தோறும் வெளிவரும்

மானேஜர்,
சக்தி காரியாலயம், காரைக்குடி

உடம்பும் மருந்தும்

சந்தா வைத்தியம்: பதினைந்து வருஷங்களுக்கு முன், அமெரிக்காவில் ராஸ் என்ற ஒரு டாக்டருக்கும், அவருடைய பக்கத்து வீட்டுக்காரருக்கும் ஒரு சம்பாஷணை நடந்தது. "சாதாரண நிலைமையில் உள்ள ஒரு மனிதனின் சக்திக்கு முடிந்த தொகையில், அவனுக்குச் சகல வைத்திய உதவியும் புரிய, என் டாக்டர்களாகிய உங்களால் முடியவில்லை?" என்று கேட்டார் நண்பர். "ஏன் முடியாது? முடியும்" என்றார் அந்த டாக்டர். அதன் விளைவாக லாஸ் ஏஞ்ஜெல்ஸ் மாகாணத்தில் இன்று ராஸ்-லூஸ் என்ற பிரபலமான வைத்திய ஸ்தாபனம் ஒன்று நடக்கிறது. இதில் மாதம் ஒன்றுக்கு $2\frac{1}{2}$ டாலர் சந்தாச் செலுத்துவோருக்கெல்லாம், சகல வைத்திய உதவிகளும் வேறு கட்டணம் எதுவுமின்றி அளிக்கப் படுகின்றன. டாக்டர்கள் வீட்டுக்கு வந்து பார்க்கிறார்கள்; ஆப்பரேஷன் செய்கிறார்கள்; ஆஸ்பத்திரிகளில் படுக்கை அளிக்கிறார்கள்; மருந்துகள் தருகிறார்கள். சகலமும் அந்தச் சந்தாத் தொகைக்குள்ளே அடக்கம்.

* *

கண்ணிலே தூசி: 'ஒரு கண்ணிலே தூசி விழுந்தால், மறு கண்ணைக் கசக்கு' என்று சிலர் யோசனை சொல்வதுண்டு. இதில் ஒரு ரகஸ்யம் இருக்கிறது. தூசி விழுந்த கண்ணைக் கசக்குவது கெடுதல். ஆகையால், கசக்கும் இச்சையை மறு கண்ணுக்கு மாற்றிவிட்டால், அந்த அளவுக்கு நல்லதுதானே? கண்ணில் விழுந்த தூசியை எடுப்பதற்குச் சில எளிய நயமான முறைகள் உண்டு. மேல் இமையை, கீழ் இமையின் மேலே பிடித்து இழுக்கலாம். இப்படிச் செய்வதால் கீழ் இமையின் ரோமங்கள், விழியிலுள்ள தூசியைத் துடைத்து விடும். மற்றொரு முறை, கண்ணில் ஒரு பொட்டு விளக்கெண்ணெயை விடலாம். இப்படிச் செய்தபின், கண்ணை மூடி மூடித் திறந்தால், தூசியை அந்த விளக்கெண்ணெய்ச் சொட்டு இழுத்துக்கொண்டு ஒருபுறமாய் ஒதுக்கிவிடும்.

* *

சுண்டையின் குணம்: சுண்டை வற்றலின் பயன்களைப் பற்றி, 'குணபாடம்' கூறுகிறது:

பித்த அரோசகம் போம்
  பேராப் புழுச் சாகும்
உற்ற கிராணி யறும்
  உட்பசியாஞ்—சத்தியமாய்ப்
பண்டைக் குத ஆமம் பற்றும்
  இங்கி யாரையுந்தான்
சுண்டைக்காய் வற்ற
  லுண்ணச் சொல்.

அதாவது, பித்த அருசி, மலக் கிருமி, கிரகணி, ஆசனத் துவாரச் சீதக் கட்டு முதலியவைகளைச் சுண்டை வற்றல் நீக்கும். பசி உண்டு பண்ணும். மார்ச்சளி, கிருமி ரோகம், அசீரண பேதி, மூல வியாதி முதலியவைகளுக்கும் சுண்டை வற்றலை உபயோகிக்கலாம்.

★

பாலர் கதை:

பேசும் பானை

'கல்நார்'

சிறுமி பொன்னி ஆற்றோரமாய்ப் போய்க் கொண்டிருந்தாள். அங்கே, ஒரு பெரிய கற்றாழைப் புதர் இருந்தது. அதன் நடுவிலே மண்பானை ஒன்று சட்ட வட்டமாய் உட்கார்ந்து கொண்டிருந்தது. பொன்னிக்குத் தூக்கிவாரிப் போட்டுவிட்டது. எங்கேயாவது இப்படி ஆள் உட்காருவது போலப் பானை உட்காரக் கண்டதுண்டா?

பானை, பார்வைக்கு நன்றாயிருந்தது. ஓட்டை உடைசல் ஒன்றையும் காணோம். வீட்டில் பொன்னி வைத்திருந்த பானை மாதிரி, இது வாய் உடைந்திருக்கவில்லை. நல்ல பானைதான். கைக்கு அடக்கமானது. சிவந்த நிறம்.

இதை வீட்டுக்கு எடுத்துக் கொண்டு போய்விடுவதெனத் தீர்மானித்துவிட்டாள்.

பானை யாருடையதோ, தெரியாது. ஊரார் பானையை எடுத்துப் போகலாமா? இது தப்புத்தானே? ஆற்றங்கரையிலே சிவப்பு நிறக் குட்டிப் பேய் ஒன்று வாழ்ந்து வருகிறதாம். அதன் பானை, பண்டம் எல்லாம் செக்கச் செவேல் என்று அழகாயிருக்குமாம் — பொன்னிக்குப் பாட்டி சொல்லியிருக்கிறாள்.

சிறுமிக்குப் பானை மேலே கண் விழுந்துவிட்டது; அடுத்தாற் போலக் கையும் விழுந்துவிட்டது. ஒரே ஓட்டமாய்ப் பானையும் கையுமாய் வீடுசேர்ந்தாள். பானையைப் புரட்டிப் புரட்டிப் பார்த்தாள். மிகவும் நல்ல பானைதான்; ஐயமில்லை. தனது பழைய ஓட்டைப் பானையை எடுத்துத் தரையில் மோதி அடித்தாள். அது, சுக்கு நூறாய் நொறுங்கிச் சிதறியது.

உடைந்த துண்டுகளைக் கூட்டி அள்ளி வெளியே போடும்போது, அடுத்த தெருத் தாமரை, பொன்னியைத் தேடி ஓடிவந்தாள்.

"அடி, பொன்னி! எனக்குக் காலணாத் தரமாட்டாயா? நாளைக்குக் கட்டாயம் திருப்பிக் கொடுத்து விடுவேன்" என்றாள் தாமரை.

பொன்னி ஒருவருக்கும் ஒன்றும் இரவல் கொடுக்கமாட்டாள். இல்லை என்பதற்கு அடையாளமாகத் தலையை அசைத்தாள்.

"என்னிடம் ஒரு தம்பிடிகூட இல்லையே!" என்று பொய் சொன்னாள்.

உடனே ஓர் ஆச்சரியம் நிகழ்ந்தது; உரத்த, ஆழமான குரல் ஒன்று சமையல் அறையிலிருந்து பேசியது:

"பொன்னி ஒரு புளுகுணி! ஓ, புளுகுணிப் பொன்னி!" என்று அந்தக் குரல் அலறியது.

பொன்னியும் தாமரையும் வீடெல்லாம் தேடிப் பார்த்தும் அங்கே யாரும் இல்லை. பொன்னிக்கு வெட்கத்தால் முகம் சிவந்து விட்டது. பொன்னி புளுகுணிதானே!

"ஓஓ! ஓஓ! பொன்னி ஒரு புளுகுணீ - இ - இ!" என்று மறுபடியும் அதே குரல் கத்திற்று.

பொன்னி அவசர அவசரமாய், மேற் சட்டைப் பையிலிருந்து காலணாவை எடுத்துத் தாமரையிடம் கொடுத்துவிட்டாள்.

சிறுமிக்குப் பானை மேலே கண் விழுந்து விட்டது...

தாமரை, வியப்பால் வாயைப் பிளந்தபடி காசை வாங்கிக் கொண்டு ஓடிவிட்டாள். அவள் போனதும், ஒவ்வோர் இடமாய்ப் பொன்னி மீண்டும் துருவித் துருவிப் பார்த்தாள். சிவப்புப் பேய்தான் கத்தியது என்று அவள் நினைத்தாள். ஒன்றும் அகப்படவில்லை. பானையின் கிட்டப் போனபோது, தொண்டைக்குள்ளேயே சிரித்ததுபோல ஓர் ஓசை கேட்டது. முன்னைவிடத் தீவிரமாய்த் தேடினள். யாருமில்லை. பானைதான் பேசிற்று என்று அவளுக்குத் தெரியவில்லை. அலுத்துச் சலித்து அமர்ந்துவிட்டாள்.

சிறிது நேரத்திலே, அவளுடைய தோழி நல்லாயி வந்தாள்.

"எங்கள் வீட்டிலே அரிசியில் கல் பொறுக்கி எடுக்கவேணும். என்னோடு நீயும் வந்து கல் பொறுக்குவாயா?" என்று நல்லாயி கேட்டாள்.

வெயில் கொளுத்துகிறது. பொன்னிக்கு வேலை செய்யப் பிடிக்கவில்லை. 'மாட்டேன்' என்று தலை அசைத்தாள்.

உடனே பேசும் பானை பேசத் தொடங்கி விட்டது:

"பொன்னி முழுச் சோம்பேறி! முழுச் சோம்பேறிப் பொன்னி!"

நல்லாயி திடுக்கிட்டு, சுற்று முற்

றும் பார்த்தாள். யாரையும் காணோம். பொன்னிக்கு வெட்கமாய்ப் போச்சு.

"பொழுது சாய வருகிறேன்; போடி, நல்லாயி" என்றாள்.

இந்த வேடிக்கையைக் கண்டு வாயைப் பிளந்தபடி, நல்லாயி போய்விட்டாள். பொன்னி மறுபடியும் தேடினாள். பானை மறுபடியும் தனக்குள்ளேயே சிரித்தது. இப்பொழுதும் பொன்னி கண்டு கொள்ளவில்லை.

இரவு, முழு நிலாக் காலம். அந்தத் தெருச் சிறுமிகள் இன்று இரவு பொன்னி வீட்டுக்கு வருவார்கள். எல்லாரும் பொன்னி வீட்டிலே சாப்பிட்டுவிட்டு, முற்றத்தில் கும்மி அடித்து விளையாடுவார்கள்.

எல்லாரும் கேப்பை ரொட்டி சாப்பிட்டார்கள். அப்புறம், தனது அழகிய சிவப்புப் பானையில், பொன்னி பால் கொண்டுவந்தாள். "இது ஏதடி, பொன்னி?" என்று ஒருத்தி கேட்டாள். "என் அத்தை தந்தது" என்று பொன்னி பொய் சொன்னாள்.

"பொய்க் கதைப் பொன்னி! பொய்க் கதைப் பொன்னி" என்று பானை கூச்சல் போட்டது.

யார் இப்படிப்பேசினது என்று ஒருத்திக்கும் தெரியவில்லை. ஒருவர் முகத்தை ஒருவர் வெறிக்க வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

"பொய்க்கதைப் பொன்னி!" என்றது மீண்டும் பானை.

"இந்தப் பானையை ஆற்றோரத்தில் ஒரு புதரிலிருந்து கண்டெடுத்தேன். என் அத்தை தந்ததல்ல—இனி, இதைப்பற்றிப் பேசவேண்டாம்" என்று சலித்துக் கொண்டே பொன்னி சொன்னாள். எல்லாரும் கும்மிப் பாட்டுப் பாடத் தொடங்கினார்கள். இவர்களது பாட்டின் இரைச்சலுக்கு மேலே பானை இரைந்து பாடியது:

பொன்னியைப் போலே
புளுகுனிப் பெண்ணை நீ
பூவுல கந்தனில் கண்ட
துண்டோ?

பொன்னி போல் பொய்
சொல்லி,
பொன்னி போல்
சோம்பேறி,
பூவுல கந்தனில்
கண்டறியேன்

"இவள் யாரடி?"

"நானில்லை!"

"நானும் இல்லை!"

"நாங்களெல்லாம் இல்லையடி, அம்மா!"

"ஓ-ஓ-ஓ!!" என்று பானை உரக்கச் சிரித்துக் கூத்தாடத் தொடங்கியது.

"பாரடி, பாரடி! பானையடி பேசுது; பாடுது; சிரிக்குது!"

ஊராருடைய பானையை எடுத்து வந்தது தப்பு என்று எல்லாச் சிறுமிகளும் சொன்னார்கள். பானையும் பொன்னியைப்பற்றிக் கண்டபடி குறை சொல்லத் தொடங்கிவிட்டது.

நிலாக் கும்மி நின்றுவிட்டது. சிறுமிகள் அஞ்சி ஓடி விட்டார்கள்.

வயலிலிருந்து திரும்பி வந்த தன் பாட்டியிடம் பொன்னி நடந்ததைச் சொன்னாள் அவள், குலுங்கக் குலுங்கச் சிரித்து விட்டுப் பானையை உடைத்தெறியச் சொன்னாள்.

பொன்னி பானையைத் தரையிலே வீசி எறிந்தாள். உடையவில்லை. பந்துபோல மேலே கிளம்பி இவளிடமே வந்து விட்டது. கல்லின்மேல் மோதி அடித்தாள். அப்பொழுதும் உடைக்க முடியவில்லை. ஆற்றங் கரைக்குப் போய், நடுத் தண்ணீரில் வலுக் கொண்ட மட்டும் எட்டிவீசினாள். மறுபடியும் திரும்பி வந்து விட்டது! 'உடும்பு வேண்டாம்; கையை விடு' என்றாலும் விட்டபாடில்லை.

சும்மாவும் இருக்க மாட்டேன் என்கிறது. பொன்னி தப்புச்செய்யும்போதெல்லாம் இடித்துச் சொல்லிக் கொண்டே இருக்கிறது. உண்மை பேச வேண்டும். யாரிடமும் அன்பாயிருக்க வேண்டும். மற்றவர்க்கு உதவ வேண்டும். இல்லாவிட்டால், பானை பேசும் பானையாகிவிடும்!

"பேசுகின்ற பானையே
ஏசுகின்றதேன் ஐயோ!
பேசாதிருந்திடேன்!
கூசாது கும்பிட்டேன்"

என்று பொன்னி அதைக் கெஞ்சியும் பார்த்தாள். பானை ஒன்றுக்கும் மசியவில்லை. கடைசியில் தான் பானையைக் கண்டெடுத்த புதரின் மேலேயே அதை எரிச்சலோடு கொண்டுபோய்ப் போட்டாள். அங்கிருந்தும் கிளம்பப் பார்த்தது பானை. முடியவே இல்லை. ஏனெனில், ஒரு மந்திரவாதி அந்தப் புதருக்கு மந்திரம் போட்டிருந்தான். அதனால்தான் முந்தியும் பானையால் வெளிவர முடியவில்லை.

சுமை இறங்கிய மகிழ்ச்சியோடு பொன்னி வீடு திரும்பினாள். பானை தொலைந்து போனாலும், அது கற்றுத் தந்த நல்ல பழக்க வழக்கங்கள் பொன்னியுடன் எப்பொழுதும் கூடவே இருந்து, அவளுக்கு நன்மை செய்து வந்தன.

★

தேயிலையும் பிருந்தாவனமும்

தேயிலையின் மகாத்மியத்தைப்பற்றி, டாங் என்ற சீன வேதாந்தி அற்புதமாய் வர்ணித்திருக்கிறார்:

"தேயிலைப்பானத்தின் முதல் கோப்பை, என் உதடுகளையும் தொண்டையையும் நனைக்கிறது; இரண்டாம் கோப்பை, என் தனிமை உணர்ச்சியைப் போக்குகிறது; மூன்றும் கோப்பை, என் வறண்ட குடலைத் தேடி அடைகிறது; நான்காம் கோப்பை, சொற்ப வியர்வை உண்டாக்குகிறது - என் வாழ்வின் குற்ற மெல்லாம் மயிர்க் காம்புகளின் மூலம் வெளியேறுகிறது; ஐந்தாம் கோப்பையால், நான் சுத்தி யடைகிறேன்; ஆறும் கோப்பை, இமையா நாட்டம் பெற்ற தேவருலகத்துக்கு என்னை இட்டுச் செல்கிறது; ஏழாம் கோப்பை - ஆஹா! இனி என்னால் குடிக்க முடியாது! என் அங்கியின் கைகளுக்குள்ளே என்ன மந்தமாருதம் வீசுகிறது! இவ்வினிய குளிர்காற்றிலேறி, பிருந்தாவனத்துக்கு இதோ மிதந்து செல்கிறேன்."

பாலர் பாட்டு

சூரியோதயம்

குளிரும் தென்றல் அசைந்தசைந்து
குலவி மகிழ்ந்து தவழ்ந்திடவே,
மிளிரும் உதயச் செவ்வண்ணம்
மிகவும் கிழக்கில் பெருகிடவே,
ஒளிரும் சிறைமென் புள்ளினங்கள்
ஒன்ருய் இசைகள் பாடிடவே,
தளிரும் இலேயும் வளர்காவில்
தண்ணுர் மலர்கள் கண்விழிக்கும்.

கன்னிக் கடலின் முத்தணிந்து
காலேப் பசும்புல் களிப்பெய்தும்;
மின்னும் பனிகள் பலகோத்து
மென்காற் சிலந்தி வலேபின்னப்
பொன்னின் ஆடை என்றதனேப்
போற்றிச் செடிகள் புனேந்தொளிர,
என்மெய் தீண்டி இளங்கதிரொன்று
" எழுவாய்! உதயம்!" என்றதுவே!

—வீ. கே. பி. நாதன்

புத்தக உலகம்

நாஞ்சில் நாட்டு மருமக்கள் வழி மான்மியம் : ஆசிரியர் : தேசிகவிநாயகம் பிள்ளை. வெளியிட்டோர் : புதுமைப் பதிப்பகம், காரைக்குடி. விலை ரூ. *1—0—0.*

சுமார் 30 வருஷங்களுக்குமுன், திருவாங்கூர் வேளாளர் ஒரு கிளர்ச்சி நடத்தினர். சில வருஷங்களில் வெற்றியுங் கண்டனர். மருமக்கள் தாய முறையை விட்டு, மக்கள் தாய முறையே தங்களுக்கு வேண்டுமென்பது தான் அந்தக் கிளர்ச்சி. அந்தக் கிளர்ச்சியின் சார்பாக எழுந்தது இந்த அழகான காவியம். மருமக்கள் தாய முறையினல் பலவாறு துன்புற்ற ஒரு பெண், தன் கதையைச் சொல்லுகிருள். அதிலேதான் என்ன கேலி, என்ன நகைச் சுவை, என்ன வாழ்க்கைச் சித்திரங்கள்! இந் நூலுக்கு ராவ் சாஹிப் எஸ். வையாபுரிப் பிள்ளை எழுதியுள்ள முன்னுரையும் ஓர் அரிய ஆராய்ச்சியாகும். நகைச் சுவையின் லட்சணம், நாஞ்சில் நாட்டு வரலாறு, இந் நூலின் சிறப்பு ஆகிய பொருள்கள் குறித்து, சிறிது கடினமான நடையாயிருப்பினும், அருமையாய் ஆராய்ந்திருக்கிருர். நூலும் முன்னுரையும சேர்ந்து சிறந்ததொரு தமிழிலக்கியமாக விளங்குகிறது.

*　　*

இருளின் வலிமை : ஆசிரியர் : லியோ டால்ஸ்டாய். மொழிபெயர்த்தவர் : கா. வானமாமலை. வெளியிட்டோர் : சக்தி காரியாலயம், வடக்கு வெளி வீதி, மதுரை. விலை ரூ. *1-4-0.*

மனிதன் பாவச் சேற்றிலே அதபாதாளத்தில் விழுந்து விட்டால்கூட, மீட்சிக்கு வழியுண்டு என்பதை இந்த நாடகத்தில் அழகாய் வர்ணிக்கிருர் டால்ஸ்டாய். ஆசையும் பாசமும் ஆன்மாவைச் சூழும் வலைகளாகின்றன. அவற்ருல், சாந்தியும் இன்பமும் இல்லை. ஆண்டவனிடம் சரண்புகுந்து, பாவங்களையெல்லாம் மன்னிப்புக் கேட்டால்தான் அமைதி என்பது அவர் கருத்து. மொழிபெயர்ப்பு நேர்த்தியானது ; தெளிந்த நடை.

*　　*

படையெடுப்பு : ஆசிரியர் : லியோ டால்ஸ்டாய். மொழிபெயர்த்தவர் : சுப. நாராயணன். வெளியிட்டோர் : சக்தி காரியாலயம், மதுரை. விலை ரூ. *1—0—0.*

இதில் மூன்று கதைகள் அடங்கியுள்ளன. இயற்கை எவ்வளவு அற்புதமாயிருக்கிறது! மனித உள்ளம் எவ்வளவு உன்னதமாயிருக்கிறது! இவைகளுக்கு நடுவே நாசப் போரிலே மனிதன் ஏன் அர்த்தமில்லாமல் புகுகிருன் என்று உள்ளங் கிளறச் செய்வது 'படையெடுப்பு.' இயற்கை வாழ்வை விட்டுச் சுரண்டல் நாகரிகத்துக்கு மனிதன் ஆட்படவே, இயற்கைகூட மோசம் செய்கிறது என்று கற்பனை செய்கிறது 'அந்தக் காலத்திலே.' பேராசையும் சுயநலமும் கொண்ட எஜமான், நிர்க்கதியான நேரத்திலே, தன்னுயிரையிழந்து ஊழியன் உயிரைக் காப்பாற்றிப் பேரானந்தமடைகிருன் 'ஆண்டானும் அடிமையும்' என்பதிலே. மூன்று கதைகளையும் நல்ல தமிழ் நடையில் மொழிபெயர்த்துள்ளார் மொழிபெயர்ப்பாளர்.

*　　*

இந்தியக் கதைத் திரட்டு : தொகுத்தவர் : சு. குருசாமி பி.ஏ., எல்.டி. வெளியிட்டோர் : அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை. விலை ரூ. *2—4—0.*

இப் புத்தகத்தில் மராட்டி, வங்காளம், ஹிந்தி, குஜராத்தி, அஸ்ஸாமி, தெலுங்கு, கன்னடம், மலையாளம், தமிழ் ஆகிய மொழிகளில் வெவ்வேறு ஆசிரியர்கள் எழுதிய 11 கதைகள் அடங்கியிருக்கின்றன. உயர்ந்த, அழகான, ரசனையுடைய கதைகள். வெவ்வேறு எழுவாய்கள், வெவ்வேறு ரூபங்கள், அஸ்ஸாமிலிருந்து குமரிமுனை வரையிலும் வெவ்வேறு பழக்கவழக்கங்களையுடைய மக்களைப்பற்றிய சித்திரங்கள். ஆயினும், அத்தனையிலும், இந்தியா ஒன்றே என்று வலியுறுத்தும் ஒரு கலாசார ஒருமை காணப்படுகிறது. எந்தக் கதையும் தமிழனுக்கு அந்நியக் கதை போலத் தோன்றவேயில்லை. மொழிபெயர்ப்பு நடை சரளமாகவும், எளிமையாகவும் இருக்கிறது. புத்தகம் ஆண்டிக் காகிதத்தில் அழகாக அச்சிட்டப்பெற்றிருக்கிறது.

*　　*

சிசுபாலனம் : ஆசிரியர் : ராஜாஜி. வெளியிட்டோர் : அல்லயன்ஸ் கம்பெனியார், மயிலாப்பூர். விலை அணு 8.

குழந்தை வளர்ப்பு என்பது ஓர் அரிய கலையாகும். அந்தக் கலையில் திறமைபெருத தேசம், எளிதிலே முன்னேற்ற மடையாது. இந்தக் குழந்தை வளர்ப்புக் கலையை, சுருக்கமாக ராஜாஜி விவரிக்கிருர். குழந்தைகளின் மனேதத்துவம் பற்றி நவீன ஆராய்ச்சியாளரின் கருத்துக்களோடு, தம் யுக்தியையும் கலந்து, பல முறைகளை ராஜாஜி சொல்கிருர். ஒவ்வொரு குடும்பப் பெற்ருேரும் இந் நூலை ஒரு வழிகாட்டியாகக் கொண்டு, தங்கள் அனுபவத்தையும் அனுசரித்து, குழந்தைகளின்

மனோதத்துவத்தைச் சிறந்த முறையில் உருவாக்கினால், குடும்பத்துக்கும் தேசத்துக்குமே நலமாகும்.

* *

மகான் மணி ஐயர்: ஆசிரியர்: கே. சுந்தரராகவன், பி.ஏ. வெளியிட்டோர்: அலயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர். விலை ரூ. 1.

முந்திய தலைமுறையில் தேசத்துக்குச் சமூகச் சீர்திருத்தத் துறையிலும் அரசியல் துறையிலும் சேவை செய்தோரில் தலைசிறந்த ஒருவர் காலஞ்சென்ற ஹைக்கோர்ட் ஜட்ஜி மணி ஐயர். சென்ற யுத்தத்தின்போது, அமெரிக்க ஜனாதிபதி வில்ஸனுக்கு இந்திய ஊழலை எடுத்துரைத்துக் கடிதமெழுதி, பிரிட்டிஷ் சர்க்காரைத் திணறச் செய்தவர். அவருடைய வாழ்க்கை, தெய்வபக்தியும் தியாகமும் பொதுஜன சேவையும் நிறைந்தது. புனிதமான ஒரு சரித்திரம். அதனை ஆசிரியர் அழகுபட எழுதியிருக்கிறார்.

* *

தேசபக்தன் கந்தன்: ஆசிரியர்: கா. சி. வேங்கடரமணி. வெளியிட்டோர்: அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர். விலை ரூ. 2-8-0.

ஆசிரியர் கூறுவதேபோல, மகாத்மா காந்தியின் 'ஒத்துழையாமை இயக்கத்தின் மூத்த பிள்ளை' இந்த நாவல். கந்தன் ஒரு தூய தேசபக்தன். ராஜேசுவரி, சரஸ்வதி என்ற உத்தமமான 'காதற் பெண்கள் கடைக்கண் பணியிலே' ஐ. ஸி. எஸ். வருக்க ரங்கனும், பெரிய மிராசுதார் சொக்கலிங்க முதலியாரும் தேசபக்தித் தீயிலே குதிக்கிறார்கள். நாவலின் இடையிடையே, தேசிய இயக்கம் நடத்துவதற்குரிய அரிய உண்மைகள், கதாபாத்திரங்களின் சம்பாஷணைகளிலே வெளிப்படுகின்றன. இந்தியாவின் புதிய அரசியல் எழுச்சியில் பிறந்த ஓர் அழகிய நாவல். மிக்க சரளமும் விறுவிறுப்பும் வர்ணமும் ஒளியும் பொதிந்த எளிய நடை.

* *

ஸ்ரீ ரமண விஜயம்: ஆசிரியர்: சுவாமி சுத்தானந்த பாரதியார். வெளியிட்டோர்: ஸ்ரீ நிரஞ்ஜனானந்த ஸ்வாமி, ஸர்வாதிகாரி, ஸ்ரீ ரமணாசிரமம், திருவண்ணாமலை. விலை ரூ. 2—0—0.

பகவான் ரமணரின் சரித்திரத்தை, சூட்சும தர்சனத்துடனும் பக்திப் பெருக்கோடும் செந்தமிழ் நடையில் சுவையோடு எழுதியிருக்கிறார் சுவாமி சுத்தானந்தர். ஒரு நீண்ட காவிய அமைப்பு. ரமண மகர்ஷிகளின் வாழ்க்கை வரலாறு, உபதேசங்கள், யோக ரகஸ்யங்கள், ரமண பக்தர்களின் அனுபவம் ஆகிய பல்வேறு பொருள்களும் இதில் பரக்கக் காணப்படுகின்றன.

புதுக்கவி விட்மன்: ஆசிரியர்: யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார். வெளியிட்டோர்: அன்பு நிலயம், இராமச்சந்திரபுரம், திருச்சி ஜில்லா. விலை ரூ. 1—8—0.

வால்ட் விட்மன் ஒரு புதுமைக் கவிஞன், புரட்சிக் கவிஞன். கவிதையின் தளை, சீர்ப் பந்தங்களை யெல்லாம் உதறித் தள்ளிவிட்டு, உன்னதமான கருத்துக்களைப் பொருளோடிசைந்ததோர் உரை நடையிலே எழுதினான். யாப்பிலக்கணத்தை உடைத்தது மாத்திரமன்றி, கருத்துக்களிலும் புரட்சிகரமான பல சொன்னான். பண்டிதரும் பழமைப்பற்றினரும் மிரண்டு, அவனைத் தூற்றினார்கள். இன்று உலகெலாம் அவனை வியந்து போற்றுகிறது. நமது பகவத் கீதையே அவனுடைய கருத்துக்களுக் கெல்லாம் ஒரு தூண்டுகோல் என்று சொல்லலாம். உருக்கமான அவனுடைய வாழ்க்கை வரலாற்றையும், அவனுடைய அருங் கவிகள் பலவற்றின் மொழிபெயர்ப்பையும் நேர்த்தியான தமிழ் நடையில், இந் நூலில் ஸ்ரீ பாரதியார் தந்திருக்கிறார்.

* *

ஹிந்துமத ஸாரம்: ஆசிரியர்: ராஜாஜி. வெளியிட்டோர்: கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர். விலை அணா 2.

ஹிந்துமதம் அகண்டாகார மானது; எல்லையிட்டு அடைக்கப்பட்ட தன்று. ஹிந்து வேதாந்தம் பற்பல சித்தாந்தங்களைக் கொண்டது. அவைகளில் ஒன்று விசிஷ்டாத்வைதம். பொதுவாக ஹிந்துமத ஸாரம் என்று ஆசிரியர் கூறினாலும், பெரும்பாலும் விசிஷ்டாத்வைதத்தையே சார்ந்து இச் சிறு நூலை அவர் எழுதி யிருக்கிறார். பரம்பொருள், ஆன்மா, பிரக்ருதி ஆகியவற்றின் பேதாபேதங்களையும், கர்மம், ஞானம், சரணாகதி ஆகிய தத்துவங்களையும் சுருங்கச் சொல்லி விளங்க வைத்திருக்கிறார்.

* *

கவிதைத் தோரணம் (Lyric Festoons): ஆசிரியர்: வி. ஆர். எம். செட்டியார், பி.ஏ. வெளியிட்டோர்: சக்தி காரியாலயம், மதுரை. விலை ரூ. 1—0—0.

ஆங்கிலச் சிந்தனைப் பொறிகளின் தொகுப்பு இந் நூல். சிறந்த ஆங்கில ஞானமுடைய ஆசிரியர் செட்டியார், ஆழ்ந்த தியானத்திலே தாம் கண்ட கவிதைக் கருத்துக்களை, இந்த ஆங்கில நூலில் கொட்டி யிருக்கிறார். 'ஆண்டவன் சிட்டி யடிக்கிறான்; ஆத்மா அதில் லயிக்கிறது' என்று அவர் கூறுவதே போல, ஏதோ ஒரு மர்ம கீதத்துக்குச் செவி கொடுத்த கவிஞ னுள்ளத்தில் பெருகிய உணர்ச்சித் திரள்போல் வெளிவருகின்றன அவருடைய கருத்துக்கள்.

★

சுதந்திரத்திற்கு முதற்படி

பொருள் துறையிலே சுதந்திரமின்றி அரசியலிலே சுதந்திரம் பெறுவதால் ஒரு பயனுமில்லை. பொருள் துறையில் சுதந்திரமுள்ள மனிதனுக ஆவதே தன் மதிப்புள்ள நல்ல பிரஜையாகிய உங்களுடைய முதல் வேலை

இது உங்களுக்குச் சிக்கலா யிருக்கிறதா?

இந்தப் பிரச்னையைச் சிக்கறுக்க

ஹிந்துஸ்தான்

உங்கட்கு உதவி புரிய முடியும்

லக்ஷிய வாதிகளான இளைஞர்கள், நம்பிக்கையான இளைஞர்கள், தீவிரமாக முன்னேறி அதிகாரப் பதவிகளை ஸ்வீகரித்துக் கொள்ளக்கூடிய மனிதர்கள் — இவர்களே

ஹிந்துஸ்தானுக்குத் தேவை

வெளியிலிருந்து வேலைபார்ப்பவர்க்குக் காட்டிவரும் நட்பு உறவே இக் கம்பெனியின் பெரும்புகழுக்குத் தளவரிசை

விவரத்துக்கு இன்றே எழுதுங்கள் அல்லது நேரே வாருங்கள்

ஹிந்துஸ்தான் கோவாபரேடிவ் இன்ஷ்யூரன்ஸ் சொசைட்டி, லிமிடெட்

தலைமை ஆபீஸ்:
"ஹிந்துஸ்தான் பில்டிங்ஸ்"
6-A, சுரேந்திரநாத் பானர்ஜி ரோடு,
கல்கத்தா

சென்னைக் கிளை:
"ஹிந்துஸ்தான் பில்டிங்ஸ்"
107, அரமனைக்காரத் தெரு,
சென்னை

ஸி. ஏ. க்யூ.—

உங்களுக்கு எப்போதும்

பாதுகாப்பளிக்க



நோய்கள் நம்மை அணுகாமல் தடுப்பதில் ஸி. ஏ. க்யூ. எவ்வளவு சக்தி வாய்ந்தது என்பதைச் சென்ற 30 வருஷங்களுக்கு மேலாக இதற்கு இருந்துவரும் பிராபல்யம் நிரூபிக்கிறது. இன்புளுயன்ஸா, டிங்கி ஜுரம், ஜலதோஷம், மார்ச்சளி முதலிய உபாதைகளைக் குணமாக்குவதில் இன்று ஸி. ஏ. க்யூ. தலைசிறந்து விளங்குகிறது. இதில் ஒரு டோஸ் சாப்பிட்டதுமே குண மேற்படுகிறது. டாக்டர்கள் எல்லோரும் க்ஷேமமான, நிச்சய குணமளிக்கும் மருந்தென்று இதை சிபார்சு செய்கிறார்கள். ஜலதோஷம், மார்ச்சளி, இன்புளுயன்ஸா முதலியவைகளைத் தடுப்பதில் ஸ்பென்ஸர் கம்பெனியாரின் ஸி. ஏ. க்யூ. நிகரற்றது.

"ஸி. ஏ. க்யூ." இது ஒன்றேதான். அதைத் தயாரிப்பது ஸ்பென்ஸர் கம்பெனியார்தான்

ஒரு புட்டி விலை ரூ. 1-4-0 :: மாத்திரைகள் ஒரு டப்பா ரூ. 1

ஸ்பென்ஸர் & கோ. லிமிடெட்

சென்னை

மருந்து வியாபாரிகள்

TVS
டி.வி.எஸ்
ப்ரொட்யூஸர்
க்யாஸ்
யூனிட்
இந்தியாவில்
அதிகமாகவிற்பனை
ஆகிறது
T.V.S
க்யாஸ் ப்ளாண்ட்
தான்
T·V·S
T.V.ஸுந்தரம் அய்யங்கார் & ஸன்ஸ்
ஜெனரல் பேடர்ஸ் ரோடு, மௌண்ட் ரோட், சென்னை
காரைக்குடி, திருநெல்வேலி, புதுக்கோட்டை, திருச்சினாப்பள்ளி

பூர்ணப் பொலிவு

அஜாந்தா குகை ஓவியங்கள் பெண்மை அழகின் பூர்ண பொலிவைக் காட்டுகின்றன. வீட்டிலே பெண் இருந்து தேயிலை வழங்கும்போது குடும்பத்திலே அதுபோன்ற மனத்திருப்தி ஏற்படுகிறது. நாம் அருந்துகிறவர்கள் உல்லாசமாகவும் மகிழ்ச்சியுடனும் அருந்துவதற்கு அவள் அருகிருப்பதே காரணம். குடும்பத்தில் எல்லோரும் ஒருமித்திருந்து தேயிலை அருந்துங்கள். அதுவே இன்பம்.

★

டீ தயாரிக்கும் முறை:– சுத்தமான தண்ணீரைக் கொதிக்கவைத்து ஈரமில்லாத பாத்திரமாக ஒன்று எடுத்து ஒவ்வொருவருக்கும் ஒரு டீஸ்பூன் வீதமும் அதிகமாக ஒரு ஸ்பூன் அளவும், நல்ல இந்திய தேயிலையைப்போட்டு கொதிக்கும் ஜலத்தை விட்டு ஐந்து நிமிஷம் கழித்து வடிகட்டி பாலையும் சர்க்கரையையும் சேர்த்துக் கொள்ளுங்கள்

குடும்பத்திற்கு ஏற்ற
ஒரே பானம் இந்தியன் டீ

இந்தியன் டீ மார்கெட் எக்ஸ்பான்ஷன் [போர்டா]ரால் வெளியிடப்பட்டது

Edited, Printed and Published by V. Govindan at Shakti Press Limited, Devakottah Road, Senjai, Karaikudi. Joint Editor: T. J. Ranganatha[n]